
ஏப்பிரல்-ஜூலை : 2009 காலாண்டிதழ் இதழ் - 13



பன்முக சிந்தனைகளுக்கான...

# கூடம்

## கொல்லனின் உலைக்களம்

## இலங்கை - இந்தியா உறவு: பலங்களும் சவால்களும்

## தேசம் தேசியம் தேசியவாதம்

பன்முகநோக்கு

விலை: 100.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்ந்து**
**ஐந்து ஆண்டுகளைக் கடந்து**
**வெளிவந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கான**
**மாத இதழ்**

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...









**AHAVILI**
3, Torrington Avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com


விலை
50/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# நாம் நமக்காக
## சிந்தித்தலும் வாழ்தலும்....

புதிய நூற்றாண்டில் உருவாகிவரும் பொருளாதார முறைகள் அறிவை பிரதான வளமாக கொண்டு வளர்ச்சிபெறுகின்றன. இதனால் வழமையான உற்பத்திக் காரணிகளான நிலம், முயற்சி, மூலதனம், உழைப்பு என்பனவற்றோடு அறிவும் ஒரு பிரதான உற்பத்திக் காரணியாக உருவெடுத்துள்ளது. தற்போது உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்கள் வெவ்வேறு அளவில் இருந்த போதிலும், சகல உலகநாடுகளும் அறிவை மையப்படுத்திய பொருளாதார முறைமைகளை உருவாக்குவதில் மும்முரமாக ஈடுபடவேண்டும்; இல்லாவிடில் வளர்முகநாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி விரிவடையும் சாத்தியம் உண்டு என அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

இந்த அறிஞர்கள் பெரும்பாலும் ஐரோப்பிய சிந்தனை மரபின் தாக்கத்துக்கு உட்பட்டவர்கள். இவர்கள் ஆசிய, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா நாடுகளின் அறிவு அனுபவம் யாவற்றையும் பொருட்படுத்தாதவர்கள். அறிவுசார் பொருளாதார முறைகளை ஆசிய வளர்முக நாடுகளில் எவ்வாறு கட்டியெழுப்பலாம்? அபிவிருத்திக்கான உபாயங்கள் என்ன? போன்ற தலைப்புக்களில் கருத்தரங்குகளை நடத்தும் முகவர்களாக மாறியுள்ளனர். இவர்கள் (அறிவுஜீவிகள்) விருத்தியுறும் அறிவுசார் செயற்பாட்டில் முழுமையாக உழைப்பவர்கள். தமது சிந்தனைகளை ஆய்வு முடிவுகளை எதிர்காலவியல் நோக்குகளை மூன்றாம் உலகம் மீது திணிப்பவர்கள்.

மூன்றாம் உலகிலும் "அறிவுசார் பொருளாதாரம்," "அறிவுசார் சமூகம்" போன்ற எண்ணக்கருக்கள் உறுதிப்படுத்தும் அல்லது இவற்றுக்கான பண்பாட்டு மாற்றத்திற்கும் உழைக்கும் அறிவுசார் தொழிலாளிகள் உள்ளார்கள். இவர்கள் யாவரும் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்கும் விருப்புக்கும் ஏற்ப செயற்பட்டு வருகின்றார்கள். இந்த நிறுவனங்கள் முன்வைக்கும் திட்டங்கள் ஆய்வு முடிவுகள் எமது சமூகத்திற்கு எந்தளவு பொருந்தும்? இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன? இவை குறித்தெல்லாம் இவர்கள் அக்கறைப்படாமல் செயற்படுகின்றனர். இதன் மூலம் தமது அறிவுசார் நேர்மையை வெளிப்படுத்துகிறார்கள். விரிவுபெறும் உலக மயமாக்கலுக்கு அனுசரணையான பண்பாட்டை கருத்துநிலையை உருவாக்குகிறார்கள்.

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் அறிவு என்பது ஒரு பண்டமாக மாற்றப்பட்டுள்ளது. அறிவுச் செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் பண்ட உற்பத்தி செய்யும் வேலைத்தளங்களாக நிலைமாற்றம் பெறுகின்றன. இவை இலாபம் ஈட்டும் செயற்படுநிறுவனங்கள் ஆகின்றன. இதனால் அடிப்படை மனிதப் பண்புகளையும் கூட்டுறவு மனப்பாங்கையும் கூட்டுச் சிந்தனைகளையும் எளிதில் நிராகரிக்கின்றன. எங்கும் சுயநலப் போக்குகளைத் தூண்டிவிடுகின்றன. சுரண்டலும் ஒடுக்குமுறையும் நவீன வடிவங்களாக மேலெழுகின்றன எழுகின்றன.

சமகால அறிவுப் போக்கிலும் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. வேறுவகைப்பட்ட அறிவு வேறுவகைப்பட்ட விசையுடனும் வேகத்துடனும் செயற்படத் தொடங்கியுள்ளன. அதாவது நமது இதுவரையான அறிவு மற்றும் அனுபவம் யாவும் காலாவதியானவை என்னும் பொய்த் தோற்றப்பாட்டை உருவாக்குகின்றன. தகவல் தொழில்நுட்ப அறிவுசார் பண்பாடு பிரதானமானது எனும் கருத்துப் பரப்புகை மேலெழுச்சி பெறுகிறது. தொழில் நுட்ப அறிவின் வேகம் இலக்கிய அறிவின் வேகத்தை விஞ்சும் வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. சமூக விஞ்ஞானத்துறை மீதான ஆர்வமும் கவனக்குவிப்பும் அரிதாகின்றது.

'அறிவுத் கைத்தொழில்கள்', 'அறிவு முகாமைத்துவம்' முதலாம் எண்ணக்கருக்கள் சந்தைப் பொருளாதார வளர்ச்சியினதும் உலக மயமாக்கலினதும் வெளிப்பாடுகளாக உள்ளன. கல்வித் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பல்தேசிய கம்பனிகள் தாமே பல்கலைக்கழகங்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இயக்கத் தொடங்கியுள்ளன. 'கூட்டிணைப்பு பல்கலைக்கழகங்கள்' என்ற புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலகச் சந்தையில் வெற்றிகரமாக தொழிற்படவும் இலாபமீட்டவும் பல்தேசிய கம்பனிகளதும் பல்கலைக்கழகங்களினதும் கூட்டு இணைப்பு வலிமையான கட்டமைப்பாக மாறியுள்ளது.

இன்று பல்கலைக்கழக கற்கை நெறிகளிலும் பாடத்திட்ட ஆக்கங்களிலும் இந்த கம்பனிகளினது நேரடியான தலையீடு வலுப்பெறத் தொடங்கியுள்ளது. தமக்கு தேவைப்படும் தொழில்களுக்கு உரிய ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்கு பல்தேசிய கம்பனிகள் பல்கலைக்கழகங்களை கருவிகளாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் தான் பாடசாலை மட்டங்களில் "புதிய கல்விச் சீர்திருத்தங்கள்" என்ற போர்வையில் மாற்றங்கள் உருவாக்கப்படுகின்றன.

பொதுவாக சமூக விஞ்ஞான கற்கை நெறிகளில் அதிகம் நாட்டம் இல்லாத பல்கலைக்கழகக் கல்விதான் மாணவர்களுக்கு கையளிக்கப்படுகின்றது. அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பல்தேசிய கம்பனிகள் பற்றிய நேரடியான புலக்காட்சிகளை உருவாக்கும் வகையில் கலைத்திட்டம் நெறிப்படுத்தப்படுகின்றது. புதிய பண்டங்களை உருவாக்குவதற்கு ஆராய்ச்சிகள், புதிய தொழில் நுட்பப் பொறிகளை வடிவமைப்பதற்குரிய ஆராய்ச்சிகள், நுகர்ச்சியாளரை சென்றடைவதற்குரிய புதிய அணுகுமுறைகள் பற்றிய ஆராய்ச்சிகள் முதலியவற்றை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழகங்கள் தூண்டிவிடவும் உற்சாகம் அளிக்கவும் படுகின்றன.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கலைத்திட்டங்களில் மேலைத்தேசக் கலாசாரத்தின் செல்வாக்கு படிப்படியாக ஊட்டப்பட்டு வருகின்றது. குறிப்பாக இன்று பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் சேவையில்' பெரிய பல்தேசியக் கம்பனிகளில் நுழைவு உன்னதங்கள் விளக்கப்படுகின்றதே அன்றி, இலங்கையின் மூலவளங்களின் பயன்பாட்டை முன்னெடுக்கும் தொழில்கள் பற்றியும் சமூக அபிவிருத்தியை முன்னெடுக்கும் தொழில்கள் பற்றியும் விளக்குதல் அரிதாக உள்ளது. வேலை வழங்கும் தனியார் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை மனித பண்பியல் பாடங்கள் மற்றும் கலைப்பாடங்களை கற்றுப் பட்டம் பெற்றவர்கள் வேண்டப்படாதவர்களாக கணிக்கப்படுகின்றனர். உயர்கல்விக்கான கொள்கைத் திட்டங்களை உருவாக்கும் போது உற்பத்தி நிறுவனங்களைச் சார்ந்தவர்களின் ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. தொழில் நுட்ப அறிவிலும் பிரயோகத்திலும் பின்தங்கிய நாடுகள் பொதுப் போட்டியை எதிர்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. அதிநுட்பம் வாய்ந்த தொழில்நுட்ப அறிவு ஏகபோக உரிமையாக இருக்கிறது. இதனால் ஆங்கில அறிவுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

சந்தைப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சிந்தனையாளர்கள் "எதையும் சந்தைக்கு விடுங்கள்" என்ற முழக்கத்தை கல்வி, மருத்துவம் போன்ற மானிட சேவைத் துறைகளிலும் தீவிரமாக வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். இதற்கிசைவாகவே அரசாங்கமும் தனது கொள்கைகளை சந்தைப் பொருளாதாரத்திற்கு சேவகம் செய்யும் வகையில் உருவாக்கி வருகின்றது. உலகம் தழுவிய நுகர்ச்சிப் பண்டமாக கல்வி மாற்றப்பட்டு விட்டது. இதனால் கல்வி உலகச்சந்தை என்ற கண்ணோட்டத்திலேயே இயக்கப்படும் பொழுது, கற்றவர்கள் தமது நிலத்தில் இருந்தும் தமது பண்பாட்டில் இருந்தும் பிடுங்கி எறியப்படுகிறார்கள். மேலைத்தேச அபிவிருத்திக் கோட்பாடுகள் இச்செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் அனுகூலமாகவும் அரணாகவும் அமைகின்றன. தமது பண்பாட்டோடு இணக்கமுற்று வாழும் மாணவரை உருவாக்குவதற்குப் பதிலாக தமது பண்பாட்டுச் சுவடுகளை நிராகரிக்கச் செய்யும் உளப்பாங்குகளை உருவாக்கவே கல்விச் செயற்பாடுகள் முனைகின்றன. அந்நிய மயமாதலை உருவாக்குகின்றன.

இந்த பின்புலத்தில் தான் நாம் "கூடம்" இதழை வெளியிடுகின்றோம். தாய்மொழிகளிலே கற்கும் மாணவர்களிடத்து தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்தும் அனைத்து மனப்பாங்குகளுக்கும் எதிரான புதிய செல்நெறிகளை உருவாக்க விளைகின்றோம்.

தெ.மதுசூதனன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


**இலங்கை - இந்தியா உறவு:**
**பலங்களும் சவால்களும்**

*நபீலா இப்றாகீம்* 04

**தேசம், தேசியம், தேசியவாதம்:**
**பன்முக நோக்கு**

39 தேர்வும் தொகுப்பும்

- அறிமுகம்
- தேசம்: ஐரோப்பிய வரலாறும் 'இந்திய' அறிவாளிகளும்
- தேசியவாதமும் தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகளும்
- ஆசியாவில் தேசிய வாதத்தின் மூலங்கள்
- ஹிட்லரின் நாசிசமும் வழக்காறும் தேசியப்பாண்பாடும்

**நூல் அறிமுகம்: கொல்லனின் உலைக்களம்:**

*கந்தையா சண்முகலிங்கம்* 72



கூடம்

இதழ்: 13 ஏப்பிரல்-ஜூலை 2009 விலை: 100.00

**ஆசிரியர்**
தெ. மதுசூதனன்

**ஆசிரியர் குழு:**
க. சண்முகலிங்கம்
சாந்தி சச்சிதானந்தம்

**இதழ் வடிவமைப்பு**
த. மைதிலி

**வெளியீடு மற்றும் தொடர்புகட்கு**
3, Torrington Avenue
Colombo 7
Tel 011 250 6272
E-mail koodam@viluthu.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்தியா உறவு : பலங்களும், சவால்களும்

நபீலா இப்றாகீம்




## 1. அறிமுகம் :-

இலங்கையும் இந்தியாவும் இந்துசமுத்திரத்தின் மத்தியில் மிக அருகருகே அமைந்துள்ளதுடன் பன்மைத்துவ சமுதாயங்களையும், பழமையான மரபுகள், வேற்றுமையில் ஒற்றுமை காணுதல், ஜனநாயகத்துக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச பங்களிப்பு, மனித உரிமைகளைப் பேணுதல் போன்ற பல விடயங்களில் தமக்கிடையில் உணர்வுகளைப் பகிர்ந்தும் வருகின்றன. மேலும், இரு நாடுகளும் ஒருவரிலிருந்து ஒருவர் விடுவித்துக் கொள்ள இயலாத வரலாற்று, கலாசார, வர்த்தக, அரசியல், தொடர்புகளைக் கொண்டுள்ளதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான உறவின் வேர்கள் மிகவும் ஆழமானவைகளுமாகும். இரு நாடுகளுக்கும் பொதுவான புராணக்கதைகள், உள்ளன. இலங்கையில் காணப்படும் இரண்டு பிரதான சமயங்களாகிய பௌத்தம், சைவம் ஆகியன இந்தியாவிலேயே தோற்றம் பெற்றிருந்தன. அத்துடன் இலங்கையில் வாழும் இரு பெரும் இனத்தவர்களாகிய சிங்களவர்களும், தமிழர்களும் இந்தியாவிலிருந்தே வந்திருந்தனர். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று உறவு, பொதுவான கலாசாரம், புனிதத்துவ விழுமியங்கள், மற்றும் ஜனநாயகத்தை வளர்ப்பதில் காட்டும் அக்கறை, சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை என்பவற்றின் வழி உருவாக்கப்பட்டதுமாகும்.

*இரு நாடுகளும் ஒருவரிலிருந்து ஒருவர் விடுவித்துக் கொள்ள இயலாத வரலாற்று, கலாசார, வர்த்தக, அரசியல், தொடர்புகளைக் கொண்டுள்ளன.*

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் அதன் பாதுகாப்பு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் பிரித்தானியர் பின்பற்றிய பாதுகாப்புக் கொள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையையே இந்தியாவும் பின்பற்ற முனைந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கை பற்றி பணிக்கர் விளக்குகையில்,

"பிரிட்டிஸ் ஆதிக்கமானது இந்தியாவைப் பாதுகாப்பதற்கென சமுத்திரத் திட்டம், கண்டத் திட்டம் என இரு திட்டங்களை கொண்டிருந்தது. அவை இந்தியாவின் வட மேற்குப் பகுதிகளை பாதுகாத்தல், இந்திய துணைக் கண்டத்தை சூழவுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை வெளி வல்லரசுகளிடம் விழ விடாது தடுத்தல், இந்துசமுத்திரம் மீதும் அதனை சூழவுள்ள பகுதிகள் மீதும் ஆதிக்கம் செலுத்துதல், ஆகிய மூன்று அம்சங்களை உள்ளடக்கி இருந்தது."[1] எனக் குறிப்பிட்டார்.

இந்திய துணைக்கண்டத்தைச் சூழவுள்ள நாடுகள் "வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு அல்லது செல்வாக்கிற்கு உட்படுதல் என்ற விடயமே" இலங்கை-இந்திய உறவில் முக்கியப்படுத்தப்பட்டிருந்தது. இந்திய எதிர்ப்புணர்வுள்ள நாடுகள் இலங்கையுடன் உறவுகளைப் பேணுவதை இந்தியா எப்போதும் தனக்கான அச்சுறுத்தலாகவே கருதி வந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையும், இந்தியாவும் அதன் ஆட்சிக்குட்பட்ட நாடாக இருந்ததனால் அவர்களுக்கு அது அச்சுறுத்தலாக இருக்கவில்லை. ஆனால் சுதந்திரமானது இவ்விரு நாடுகளையும் இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கமுடைய இரு நாடுகளாக உருவாக்கியிருந்தது.

சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கையானது இந்தியாவுடன் இணைக்கப்படுதல் வேண்டும் எனவும், இரண்டு நாடுகளும் பொதுவான பாதுகாப்புக் கொள்கையினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் இந்திய தலைவர்கள் கருதி வந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, 1945ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு "இந்திய சமஷ்டி அரசியல் அமைப்பில் இலங்கையும் ஒரு சுயாதிக்கமுள்ள பகுதியாக நிலவலாம்"[2] எனக் கூறியிருந்தார். இதேபோன்று பட்டாபி சீதாராமையாவும் "இந்தியாவிற்கு விரோதமான நாடுகளுடன் இலங்கை உறவு கொள்ளக் கூடாது என்றும் இரு நாடுகளுக்கும் பொதுவான பாதுகாப்புக் கொள்கையே இருக்க வேண்டும்"[3] என்றும் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான நிலைப்பாட்டினை இந்தியர்கள் கொண்டிருந்தாலும், இலங்கையைப் பொறுத்தவரையில் சுதந்திரத்திற்குப் பின்னர், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை ஆட்சியில் அமரும் கட்சிகளே தீர்மானித்துக் கொண்டன.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் இரண்டு பிரதான அம்சங்களை அவதானிக்க முடிகின்றது. "ஒன்று மேற்கத்தைய சார்பு அல்லது சார்பின்மை, இரண்டாவது இந்திய எதிர்ப்பு அல்லது சார்பு"[4]. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் வரலாற்றுப் போக்கினை விளங்கிக் கொள்வதன் மூலமே தற்போதைய அரசாங்கத்திற்கும் இந்திய அரசிற்குமிடையிலான உறவினை விளங்கிக் கொள்ள முடியும்.

இக் கட்டுரை சர்வதேச நாடுகளின் அதிகாரப் போராட்டத்தில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் முக்கியத்துவம், இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், காலத்திற்குக் காலம் இரு அரசுகளுக்குமிடையிலான உறவில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள், தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இனமுரண்பாட்டுடன் தொடர்புடைய பல்வேறு அறிவு, உணர்வுப் பரிமாற்றங்கள், கச்சதீவு விவகாரம், இந்திய மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், மற்றும் பொருளாதார, வர்த்தக அபிவிருத்திகள் போன்ற விடயங்களினால் இலங்கை இந்திய அரசுகள் எதிர் கொள்ளும் நெருக்கடிகளையும், நட்புறவுகளைப் பேணுவதில் இரு நாடுகளும் காட்டும் அதீத பிரயத்தனங்களையும் ஆய்வு செய்கின்றது.

## 2. இந்துசமுத்திரத்தின் முக்கியத்துவம்

இந்துசமுத்திரப் பிராந்தியம் கடலோடு தொடர்புடைய நாகரிகத்தின் பிறப்பிடமாகும். காலனித்துவ காலத்தில் ஐரோப்பிய செல்வந்த கைத்தொழில் நாடுகளின் விளையாட்டு மைதானமாகக் கருதப்பட்டது. ஆவேசம் மிக்கதும், அழிவுகளை உண்டாக்-

*பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையும், இந்தியாவும் அதன் ஆட்சிக்குட்பட்ட நாடாக இருந்ததனால் அவர்களுக்கு அது அச்சுறுத்தலாக இருக்கவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியதுமான சுதந்திரப் போராட்டங்கள், அரசுகளுக்கிடையிலான யுத்தம் என்பன 1946ஆம் ஆண்டின் பின்னர் காலனித்துவத்தினை வீழ்ச்சியடைய வைத்தது. பனிப்போர் காலப்பகுதியில் இரண்டு வல்லரசுகளும் தமது கடலாதிக்கத்தினை நேரடியாக அல்லது மறைமுகமாக இப்பிராந்தியத்திலுள்ள துறைமுகங்களூடாக வலுப்படுத்தியிருந்தன. இதனாலேயே "யார் இந்து சமுத்திரத்தைக் கட்டுப்படுத்துவார்களோ அவர்களே ஆசியாவைக் கட்டுப்படுத்துவார்கள். இருபத்தோராம் நூற்றாண்டிலே இந்து மாகடலே ஏழு கடல்களின் திறவு கோலாக விளங்கும் அதுவே உலகின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மாகடலாகவும் விளங்கும்"[5] எனக் கூறுகின்றார்கள்.

வரலாற்றுக் காலம் தொட்டு கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளது. தற்போது இப்பிராந்தியம் சர்வதேச சமூகத்தின் புதிய வியூகத்திற்குள்ளாகியுள்ளது. இதுவே இலங்கையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிகரிப்பிற்குக் காரணமாகின்றது. இலங்கையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் பல்வேறு வடிவங்களில் காணப்படுவதற்கு மிகவும் வலுவான பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவைகளாவன;

- இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்துள்ளது.
- பல்வேறு வர்த்தக மற்றும் எண்ணெய் கொண்டு செல்லும் கப்பல்களின் கடல்வழிப் போக்குவரத்துக்கான முக்கிய பகுதியாக இப்பிராந்தியம் விளங்குகின்றது.
- எதிர்கால உலக வல்லரசுகளான சீனா, இந்தியா போன்ற நாடுகள் இப்பிராந்தியத்தில் காணப்படுகின்றன.
- அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, யப்பான் போன்ற நாடுகள் தமது அரசியல், பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கு இக்கடல் பிராந்தியம் முக்கியமாக இருக்கின்றது.

இந்துசமுத்திரம் ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, அண்டார்டிக்கா ஆகிய கண்டங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இது தென்கிழக்காசியாவையும், மத்திய கிழக்கையும் அதாவது மலாக்கா நீரிணையையும், அராபிக் கடலையும் இணைக்கும் சமுத்திரமாக விளங்குகின்றது. உலகத்தில் 70%மான பகுதி சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளதுடன், 70%மான மக்கள் சமுத்திரங்களை அண்மித்துள்ள நாடுகளிலேயே வாழ்கின்றார்கள். இந்துசமுத்திரப் பிராந்தியம் அந்தமான்கடல், அராபியக்கடல், வங்காளவிரிகுடா, பாரிய அவுஸ்ரேலியக் குடா, ஏடன் வளைகுடா, ஓமான் வளைகுடா, யாவாக் கடல், மொசாம்பிக் கால்வாய், பேர்சியன் வளைகுடா, ஒஸ்கடல், சவுகடல், மலாக்கா நீரிணை, தீமோர்கடல், ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய அகன்ற கடற் பிராந்தியமாகும்.

இந்துசமுத்திரம் உலகிலுள்ள பெரிய சமுத்திரங்களில் மூன்றாவது சமுத்திரமாகும். முதலாவது இடத்தினைப் பசுபிக் சமுத்திரமும், இரண்டாவது இடத்தினை அத்திலாந்திக் சமுத்திரமும் பெற்றுள்ளது. உலக நீர்ப்பரப்பில் 20%த்தினை இந்துசமுத்திரம் கொண்டுள்ளதுடன், தென்முனையில் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளடங்களாக ஏறக்குறைய 10,000 கிலோமீற்றர் அகலத்தினையும் கொண்டது. இதன் மொத்த கடல்பரப்பு 68,556 மில்லியன் கிலோமீற்றராகும். ஏறக்குறைய ஐக்கிய அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பின் 5.5 மடங்காகும். சர்வதேச நீர் நிலைப் பரப்பின் ஆராய்ச்சி நிறுவனம் 2000ஆம் ஆண்டில் பூமத்திய ரேகையின் தெற்கில், 60 பாகையில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் தெற்குப் பகுதியில் ஒரு பகுதியை நீக்கி அதனை தென் சமுத்திரமாக உருவாக்கிக் கொண்டது. இது ஐந்தாவது சமுத்திரமாக அழைக்கப்படுகின்றது.[6]

இந்துசமுத்திரம் உலகிலுள்ள பெரிய சமுத்திரங்களில் மூன்றாவது சமுத்திரமாகும். முதலாவது இடத்தினைப் பசுபிக் சமுத்திரமும், இரண்டாவது இடத்தினை அத்திலாந்திக் சமுத்திரமும் பெற்றுள்ளது.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தியத்தில் மட்டும் 47 நாடுகள் உள்ளன. இதில் முப்பத்தியாறு நாடுகள் இந்துசமுத்திரக் கரையோர நாடுகளாகவும், பதினொரு நாடுகள் இந்துசமுத்திரத் துறைமுகங்களுக்கு பின்னணி நாடுகளாகவும் காணப்படுகின்றன. இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பல தீவுகள் காணப்படுகின்றன. அவைகளாவன: கொக்கோதீவுகள், அந்தமான்தீவுகள், இலங்கை, மாலை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுகள், டிக்காகோசியா, மொரிஜியஸ், சிச்ஏல்ஸ் தீவுகள் ஆகும். அதே நேரம் கப்பல் போக்குவரத்திற்கான பல துறைமுகங்கள் இப்பிராந்தியத்தில் காணப்படுகின்றன. சிற்றாங்கொங் பங்காளதேசத்திலும், திருகோணமலை இலங்கையிலும், (அம்பாந்தோட்டை திட்டமிடப்பட்டு வேலை நடைபெறுகிறது.) பிறிமன்றல் மேற்கு அவுஸ்திரேலியாவிலும், விசாகப்பட்டணம், கொச்சின், கர்வோர் ஆகியன இந்தியாவிலும், ஓர்மாறா, வோடர் பாகிஸ்தானிலும், லூகிஸ் துறைமுகம் மொரிஜியஸ்சிலும், விக்டோரியா துறைமுகம் சிச்ஏல்ஸ் தீவிலும், பூயூகெற் தாய்லாந்திலும் உள்ளது.[7]

ஏறக்குறைய 40%மான எண்ணெய் உற்பத்திகள் இந்துசமுத்திரக் கடற்கரைப் பரப்பினூடாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன. கடற்கரை மணல்கள் பலமானதும் செழிப்பானதுமான கனியுப்புக்களை கொண்டுள்ளதுடன் தாய்லாந்து, இலங்கை, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா, இந்தியா போன்ற இந்துசமுத்திரக் கடற் பிராந்திய எல்லை நாடுகளால் இவை சுவீகரிக்கப்படுகின்றன. இந்துசமுத்திரப் பிராந்தியம், அமெரிக்கா, ஐரோப்பாவுடன், ஆபிரிக்கா, கிழக்குஆசியா, மத்திய கிழக்கு நாடுகளை இணைக்கின்ற பாரிய கடற் பிராந்தியமாகும். இந்துசமுத்திரப் பிராந்தியம் பொருளாதார ரீதியாக, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, ஆசியக் கடல்களின் எல்லைகளை கொண்டுள்ளதுடன் பூகோள வியாபார வர்த்தக நடவடிக்கைகளுக்கு சர்ச்சைக்குரிய கடல்வழி பாதையுமாகும். இச்சமுத்திரத்தின் தந்திரோபாய விரிவாக்கமானது பெருந்தொகையான சர்வதேச கடற் போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்துகின்றது.

உலக நாடுகளுக்கு கப்பல்களில் பொருட்களை ஏற்றிச் செல்லும் கொள்கலன்களில் ஏறக்குறைய அரைப்பங்கு இவ்வழியாலேயே ஏற்றி இறக்கப்படுகின்றன. இவற்றில் 1/3 பங்கு கப்பல்கள் கொள்கலன்களை காவிச் செல்லும் கப்பல்களாகவும், 2/3 பங்கு கப்பல்கள் எண்ணெயினை ஏற்றிச் செல்லும் கப்பல்களாகவும் உள்ளன. இதிலும் ஏற்கனவே கூறியது போன்று, 40%மான எண்ணெய் உற்பத்திகள் குறிப்பாக பேர்சியன் வளைகுடாவிலிருந்தும் இந்தோனோசியாவிலிருந்து இக்கடற்பிராந்தியம் ஊடாகவே ஏனைய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இப்பிராந்தியம் பெரும் சந்தை வாய்ப்பினையும் கொண்டதாகும். உலகின் மொத்த சனத்தொகையில் கால் பங்கினை, இப்பிராந்தியத்தினுள் அடங்கும் தென்னாசியப் பிரதேசம் மட்டும் கொண்டிருப்பதிலிருந்து இப்பிராந்தியத்தில் உள்ள பரந்த சந்தையினை அறிந்து கொள்ளலாம். இப்பிராந்திய நாடுகளில் காணப்படும் உள்நாட்டுக் குழப்பங்கள், அரசுகளுக்கிடையிலான போட்டி என்பனவும் பெரும் ஆயுதச் சந்தை ஒன்றினை மேற்கு உலக நாடுகளுக்கு ஏற்படுத்தி கொடுக்கின்றன.[8] மலாக்கா நீரிணை உலகத்தில் இரண்டாவது கடல்வழிப்பாதையாகும். யப்பானிற்கான எண்ணெய் விநியோகத்தில் 80%மும், சீனாவிற்கான எண்ணெய் விநியோகத்தில் 60%மும் மலாக்கா நீரிணை ஊடாகவே கப்பல்கள் மூலம் இடம்பெறுகின்றன. 70 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மசகு எண்ணெய் ஒவ்வொரு வருடமும் இந்நீரிணை ஊடாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன. அநேகமான கப்பல்கள் அந்தமான் நிக்கோபா தீவுகளுக்கிடையிலான கடல்களை இணைக்கும் கடற் சந்தியின் 10 பாகையினூடாகவே செல்கின்றன.[9]

### 1.1 இந்து சமுத்திரப பிராந்தியத்தில் அமெரிக்கச் செல்வாக்கு

இப்பிராந்தியத்தில் அமெரிக்கா செல்வாக்கு செலுத்துவது என்பது அதனது ஏக வல்லரசு என்ற நிலையினை தொடர்ச்சியாகத் தக்கவைத்துக் கொள்வதற்கு மிகவும் அவசியமானதாகும். ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தினையும், நலன்களையும் பேணுவதற்கு இப்பகுதியில் பிராந்திய வல்லரசு என்ற ஒன்று உருவாகாமல் பார்த்துக் கொள்ளுதலே அமெரிக்க மூலோபாயத்தின் முக்கிய நோக்கமாகும். இன்னோர் வகையில் கூறின் சீனா, ரஷ்யா, இந்தியா, ஈரான் போன்ற நாடுகள் தனியாகவோ அல்லது கூட்டாக இணைந்தோ அமெரிக்காவுக்கு எதிராக எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது கவனித்துக் கொள்வது அமெரிக்காவின் ஏக வல்லரசு

*இந்துசமுத்திரப் பிராந்தியம், அமெரிக்கா, ஐரோப்பாவுடன், ஆபிரிக்கா, கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளை இணைக்கின்ற பாரிய கடற் பிராந்தியமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையினை தக்கவைத்துக் கொள்வதற்கு மிகவும் அவசியமாகும். இதற்காகத் தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் எதிர்கால வல்லரசாக உருவாகி வரும் சீனாவினை முற்றுகைக்கு உள்ளாக்குவதற்காக அமெரிக்கா பல்வேறு தளங்களை இப்பகுதியிலே அமைத்து வருகின்றது.[10] 1970களில் இருந்தே அமெரிக்கா தனது கடற்படை மூலோபாய கோட்பாடுகளின் அடிப்படையில் தனது "கடல்" தொடர்பான தந்திரோபாயங்களை பின்பற்றத் தொடங்கியது. அமெரிக்க கொள்கை வகுப்பாளர் குழுவின் தலைவரான அட்மிரல் எல்மோ ஆர் சூமட் அமெரிக்கக் கடற்படையின் நான்கு வகை நடவடிக்கைகளை எடுத்துக் கூறுகின்றார்.

1. "தற்காப்பு" கடலினை கட்டுப்பாட்டினுள் வைத்திருத்தல்.
2. கடற்படை வலுவினை வெளிப்படுத்தல்.
3. சமாதான நடவடிக்கைகளுக்கான கடற்படையின் பிரசன்னம்.
4. கடற்படையின் முன்னணி தற்காப்பு மற்றும் நேச நட்புறவு.

> **19ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியும், 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவும் எழுச்சியடைந்தது போன்று தற்போது சீனா அரசியல், பொருளாதார இராணுவத் துறைகளில் மிக விரைவாக எழுச்சியடைந்து வருகின்றது**

மேலும், எதிர்காலத்தில் அமெரிக்காவானது தனது ஏக வல்லரசு என்ற நிலையினை தக்கவைப்பதற்காக மூலோபாயங்களை செயற்படுத்தும் போது உலகளாவியரீதியில் "முற்றுகைக்குள்ளாக்கும் மூலோபாயத்தில்" இருந்து உலக "சமநிலையை பேணும் மூலோபாயத்தினை"[11] கடைப்பிடிக்க வேண்டும் என அட்மிரல் கெஸ்லோ கூறுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

அமெரிக்காவின் பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய நாட்டினை முதன்மைப்படுத்தித் தந்திரோபாயங்களை வகுப்பதைத் தவிர்த்து, தற்போதைய உலக சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிராந்திய ரீதியில் மூலோபாயங்களை உருவாக்குவதுடன், தனது நலன்களைப் பேணக்கூடிய வகையில் பிராந்திய சிக்கல்களையும், நெருக்கடிகளையும் விரைவாகத் தீர்க்கக்கூடிய திறனை அமெரிக்கா கொண்டிருக்க வேண்டும் எனவும் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் விரும்புகின்றார்கள்.[12] அமெரிக்கா அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு அப்பால் இருக்கின்ற ஐரோப்பிய நாடுகளுடனான வர்த்தக செயற்பாடுகளினால் ஈட்டப்படும் வருமானத்தினை விட 50% இற்கும் அதிகமான வருமானத்தினை பசுபிக் சமுத்திரத்திற்கு அப்பால் இருக்கின்ற தென்னாசியா மற்றும் தென்கிழக்காசிய பிராந்திய நாடுகளிலிருந்து பெறுகின்றது. அத்துடன் அமெரிக்கா மூன்று பெரிய போர்களையும் இப்பிராந்தியத்தில் நடாத்தி இருக்கின்றது. பனிப்போர் முடிவின் பின்னர் அமெரிக்கா தனது சில தளங்களை இப்பிராந்தியங்களில் மூடியுள்ளதுடன், படையினரின் எண்ணிக்கையையும் குறைத்து வந்திருந்தது. ஆனால், அமெரிக்க கடற்படையின் அதிகரித்த நடவடிக்கைகளும், பயணங்களும் அமெரிக்காவின் பிராந்திய, அரசியல், பொருளாதார நலன்களுக்கு அவசியமானது என பென்ரகன் கருதுகின்றது.[13] அண்மைக் காலங்களில் இந்தியாவுடன் இணைந்து அமெரிக்கக் கடற்படையினர் அரேபியக் கடலில் கடற் பயிற்சியில் ஈடுபடுவதும், 90 விமானங்களையும் 5000 படையினரையும் கொண்ட, அணுசக்தியால் இயங்கும் அமெரிக்காவின் மிகப் பாரிய விமானந்தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ் சென்னைத் துறைமுகத்தைச் சென்றடைந்து நங்கூரமிட்டு நின்றமை பென்ரகனின் நிலைப்பாட்டை வலுவாக்கியுள்ளது.[14]

## 2.2 சீனாவின் தந்திரோபாயநிலை


இந்துசமுத்திரப் பிராந்திய நீர்ப்பரப்பில் அதிக கூடிய நன்மைகளைப் பெறுவதற்கு இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளும் தீவிரமாகப் போராடி வருகின்றன. 19ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியும், 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவும் எழுச்சியடைந்தது போன்று தற்போது சீனா அரசியல், பொருளாதார இராணுவத்துறைகளில் மிக விரைவாக எழுச்சியடைந்து வருகின்றது[20] என்று சிங்கப்பூர் கொள்கை வகுப்பு நிறுவனத்தின் இயக்குனரான பாரி டெஸ்கர் கூறுகின்றார்.

சீனா தென்னாசிய மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியங்களில் "முத்துமாலைத் தொடர்" மூலோபாயத்தினைப் பயன்படுத்தி தனது செல்வாக்கை செலுத்துவதுடன், பாதுகாப்பான கடல்வழி தொடர்பாடல்களையும் பேணிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசாகும் கனவிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான சக்தி மூலங்களைப் பெறுவதற்கும் சீனா முத்துமாலை மூலோபாயத்தினை பயன்படுத்தி சீனாவின் ஹய்நான் தீவு, பங்களாதேசில் சிற்றக்கொங், மியன்மாரில் சிற்வி, பாகிஸ்தானில் குவாடர், மாலைதீவில் மோரோ தீவுக்கூட்டங்கள், எகிப்தில் சயிற் துறைமுகம், ஈரா-னில் பன்டர் அபாஸ் போன்ற இடங்களில் பல தளங்களை அமைத்துள்ளது.[21] சீனா இராணுவ கடற்படைத் தொடர்புகளை வங்காளதேசத்துடனும், மியன்மாருடனும் ஏற்படுத்தி வருகிறது. சீனாவிற்கும் ஆபிரிக்க நாடுகளுக்கும் இடையிலான கூட்டுறவு வெளிப்படையானதாகவுள்ளது. குறிப்பாக 2006ஆம் ஆண்டு நவம்பரில் பீஜிங்கில் நடைபெற்ற சீனா-ஆபிரிக்க உச்சி மகாநாட்டினைத் தொடர்ந்து இக்கூட்டுறவு வெளிப்படையானதாகியது.[22] இதனை இந்தியாவும் ஐக்கிய அமெரிக்காவும் மிகவும் கவனமாக ஆராய்ந்து வருகின்றன.




இலங்கை 2000ஆம் ஆண்டு சீனாவின் ஹான்கோ நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், சீனா, முத்துராஜவலை, கொலன்னாவை எண்ணெய் குதங்களை அமைத்துப் பராமரித்து வருகின்றது. அத்துடன் சந்திரிக்கா பண்டாராநாயக்கா குமாரணதுங்க ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் பற்றி கலந்துரையாடப்பட்டு, தற்போதய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. புதுடில்லியில் நடைபெற்ற இந்திய - ஐக்கிய அமெரிக்க பாதுகாப்பு கூட்டு வேலைக் குழுவின் கூட்டத்தில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படை விஸ்தரிப்பின் வளர்ச்சி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், மடக்கஸ்கார், பொலிவியாஸ், சிச்ஏல்ஸ், மாலைதீவு, இலங்கை, வங்காளதேசம், மியன்மார் போன்ற நாடுகளுடன் சீனா படிப்படியாக இராணுவ கடற் பிராந்திய தொடர்புகளை ஏற்படுத்தி வருவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இது இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் உரிமையாளர்கள் யார் என்பதையும் தத்தமது நலன்களை இப்பிராந்தியத்தில் எவ்வாறு பாதுகாப்பது என்பதையும் தீர்மானிக்கும் போராட்டத்தினை உருவாக்கியுள்ளது.

## 2.3 இந்தியாவின் பிராந்திய தந்திரோபாய நிலை

இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் வல்லரசாக தன்னைக் கருதிக் கொள்ளும் இந்தியா ஏனைய வல்லரசுகளாகிய ரஷ்சியா, சீனா ஆகிய நாடுகளின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இந்தியா உறுதியானதும் ஆதிக்கம் மிக்கதுமான கடல் வழிப் பாதையினை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றது. இந்தியா அந்தமான் தீவின் பிளேயர் துறைமுகத்தில் தூர கிழக்கு நாடுகளுக்கான கடற்கட்டுப்பாட்டு கட்டளைத் தளத்தினை நிறுவியுள்ளதுடன் பிளேயர் துறைமுகத்தினைத் தந்திரோபாய சர்வதேச வர்த்தக மையமாகவும், நிக்கோபார் தீவுகளிலுள்ள க்கம்பவ்குடாத் துறைமுகத்தினை எண்ணெய் ஏற்றியிறக்கப் பயன்படும் முடிவிடமாகவும் அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.[15]

இந்தியா இந்துசமுத்திரக் கடற் பிரதேசத்தில் 1240 மைல் கடற்பரப்பைக் கொண்ட ஒரு குடா நாடாகும். இந்தியாவின் அரைவட்டத்தில் 1000 மைல் சதுரப்பரப்பில் 50%மானவை இந்துசமுத்திரப் பிராந்தியத்திலேயே உள்ளது. இது இந்தியா இப்பிராந்தியத்தில் தந்திரோபாய நிலையினை எடுப்பதற்கு காரணமாகின்றது. ஆழ்கடலிலிருந்து கனிய வளங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்த உலக நாடுகளில் இந்தியா ஆறாவது இடத்திலுள்ளது. ஆழ்கடல் சட்டத்தின் கீழ் 772,000 சதுர

**இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் வல்லரசாக தன்னைக் கருதிக் கொள்ளும் இந்தியா ஏனைய வல்லரசுகளாகிய ரஷ்சியா, சீனா ஆகிய நாடுகளின் தென்பகுதியில் அமைந்துள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருளாதார வலயத்தினை இந்தியா இப்பிராந்தியத்தில் கொண்டுள்ளது.[16]

இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் அதிகார சமநிலையானது இயங்கியல் தன்மை கொண்டது. மாறும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப வளைந்து கொடுக்கின்ற போக்கைக் கொண்டதாகும். இந்தியா தனது நேர்த்தியான தந்திரோபாயத்தினூடாக வல்லரசாக வளர்ந்து வருவதுடன், தனது அதிகாரத்தினையும் நிலை நிறுத்தி வருகின்றது. அராபியக் கடல், இந்துசமுத்திரத்தின் மேற்கு பிராந்தியம் ஆகியவற்றின் புவிசார் அரசியல், இந்தியாவின் 8.13 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொழில் முயற்சியினைத் தீர்மானிக்கின்றது.[17] சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் முக்கோண வடிவில் அராபியக் கடலில் செலுத்தும் உறுதியான செல்வாக்கும், ஆதிக்கமும் அராபியக் கடலில் புவிசார் தந்திரோபாயத்தினை வெளிப்படுத்திக்காட்ட போதுமானதாகும்.

இந்தியா 2005 ஏப்ரல் 11 தொடக்கம், தந்திரோபாயக் கூட்டாளியாக சீனாவை ஏற்றுக் கொள்ளத் தொடங்கியது. அதே நேரம் 2005 ஜூன் 29 திகதி அமெரிக்காவுடன் 10 வருடங்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுக் கொண்டது.[18] சீனாவை தந்திரோபாய கூட்டாளியாக மாற்றிக் கொண்டும், அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டும் தன்னை நீண்ட காலத்தில் வல்லரசாக வளர்ப்பதற்கு ஏற்றவகையில் "கடல் பறவை" (Sea Bird) திட்டத்தினை வரைந்து செயற்படுத்தத் தொடங்கியது.[19]

*இந்தியா தனது நலன், அதிகாரம் என்பவற்றை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிலை நிறுத்துவதற்கு ஏற்பவும், மாறும் உலக ஒழுங்கிற்கு ஏற்பவும் தனது புவிசார் அரசியல் தந்திரோபாயத்தினை வகுத்து செயற்பட்டு வருகின்றது.*

கடல் பறவை திட்டம் 1980 ஆம் ஆண்டு இந்தியாவினால் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் அடுத்தடுத்து இருக்கக்கூடிய இரண்டு "புவிசார் அரசியல் முக்கோண வடிவிலான திட்டம்" என மதிப்பிடப்பட்டது. ஒன்று அமெரிக்கா, இந்தியா, சீனா உறவினை ஏற்படுத்தி வளர்ப்பது. இரண்டாவது சீனா, பாகிஸ்தான், இந்திய உறவினை ஏற்படுத்தி வளர்ப்பது. இது ஓர் சிக்கலான புவிசார் அரசியல் கூட்டமைப்பாகும். இந்தியா, சீனாவுடனோ அல்லது அமெரிக்காவுடனோ இலகுவில் கூட்டாளியாகக் கூடியதொரு நாடாகும். இந்தியாவினைப் பொறுத்தவரை தனது சொந்த தந்திரோபாயத்தினூடாக இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அதிகாரத்தினையும் நலனையும் பெற்றுக் கொண்டு வல்லரசாக மாறுவதே அதன் நோக்கமாகும். இப்பின்னணியிலேயே இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவினைப் பார்க்க வேண்டும். இந்தியா தனது நலன், அதிகாரம் என்பவற்றை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிலை நிறுத்துவதற்கு ஏற்பவும், மாறும் உலக ஒழுங்கிற்கு ஏற்பவும் தனது புவிசார் அரசியல் தந்திரோபாயத்தினை வகுத்து செயற்பட்டு வருகின்றது.

### 3. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை-இந்திய உறவு

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை-இந்திய உறவுகளை மாறி மாறிப் பதவிக்கு வந்திருந்த இரு பெரும் அரசியல் கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவே தீர்மானித்திருந்தன.

### 3.1 இலங்கையின் மேற்கத்தைய சார்புக் கொள்கை

1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் இடம்பெற்ற தேர்தல் மூலம் டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்ட போதிலும் அதே ஆட்சி தொடர்ந்தது. சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை வகுப்பவராக டி.எஸ்.சேனநாயக்கா இருந்தார். டி.எஸ்.சேனநாயக்காவிற்கு பிரதம ஆலோசகர்களாக சோல்பரி பிரபுவும், சேர் ஐவர் ஜெனிங்சும் கடமையாற்றினர். இக்கால கட்டத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது பிரித்தானியாவிற்குச் சார்பானதாக இருந்தது. டி.எஸ்.சேனநாயக்கா பிரித்தானியாவிற்குச் சார்பானவராகவும், அவர்கள் மீது அதிக நம்பிக்கை கொண்டவராகவும் இருந்தமையே இதற்குக் காரணமாகும். இதன் பின்னணியிலேயே பிரித்தானியர் இலங்கையில் இருந்து சென்ற பின்பும் அவர்களின் படைத்தளங்கள் தொடர்ந்தும் இலங்கையில் குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

இலங்கையின் பிரித்தானிய சார்பு நிலைப்பாடானது இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கையுடனும், அணிசேராக் கொள்கையுடனும் முரண்பட்டு நின்றது. பிரித்தானியாவின் படைத்தளங்கள் இலங்கையில் இருக்க அனுமதியளித்தமை, பிரித்தானியாவோடு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டமை என்பன இந்திய இராஜதந்திரிகள் மத்தியில் பெரும் கவலையை தோற்றுவித்ததோடு, இலங்கை மீது அவ நம்பிக்கையினையும் ஏற்படுத்தியிருந்தது. ஒரு வகையில் இந்தியா தொடர்பான பயமே இலங்கையை பிரித்தானியாவோடு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைத்தது. 1953ஆம் ஆண்டு சேர் ஜோன் கொத்தலாவல "எப்போது இலங்கை பிரித்தானியாவின் பாதுகாப்பிலிருந்து தன்னை விலக்கிக் கொள்கின்றதோ அன்று இந்தியாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு விடும்"[23] எனக் கூறியமை இதனையே தெளிவாக்குகின்றது.

1948ஆம் ஆண்டு இந்திய, பாகிஸ்தானிய வம்சாவழி மக்களின் குடியுரிமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, அவர்களை நாடற்றவர்களாக்கியது. இந்நிலையானது இலங்கை-இந்திய உறவுகளில் கணிசமானளவிற்குப் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. இதேபோன்று 1947 தொடக்கம் 1948 காலப்பகுதிகளில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் இடம்பெற்ற காஷ்மீர் தொடர்பான யுத்தத்தின் போது இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானுக்கு ஆதரவளித்தது. இது இலங்கை-இந்திய உறவுகளில் பெரும் இடைவெளியினை ஏற்படுத்திச் சென்றிருந்தது.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளினால் இரு நாட்டு உறவுகளும் பாதிக்கப்பட்டாலும் கூட 1949ஆம் ஆண்டு இரு நாடுகளும் பாரம்பரிய வணிகத்தை வளர்க்கும் பொருட்டு அத்தியாவசிய பொருட்களை பண்டமாற்று முறையில் பெற்றுக் கொள்ளத் தொடங்கின. பிற்காலத்தில் இவ்வாணிப ஒப்பந்தங்கள் மேலும் நீடிக்கப்பட்டன. 1952ஆம் ஆண்டு பண்டமாற்று பொருட்களின் பட்டியல் மேலும் உயர்ந்தது. 1953, 1954 களில் கலாசாரக் குழுக்கள் பரிவர்த்தனையும் இரு நாடுகளுக்கு மத்தியிலும் நடைபெற்றது.

### 3.2 மேற்குத்தேச விரோதப் போக்கும், இந்திய சார்புக் கொள்கையும்

1956ஆம் ஆண்டு எஸ்.டபில்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து



ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. இவர் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டிருந்த பல வெளியுறவுக் கொள்கைகளை மாற்றியமைத்திருந்தார். "பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராக இருந்த போது பிரித்தானியர்களிடமிருந்து இலங்கையை முழுமையாக தமது சொந்த அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்ததுடன், இவர் அக்காலத்தில் இருந்த ஜவகர்லால் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையையே பின்பற்றினார். இக்காலத்தில் இலங்கை-இந்திய உறவுகள் நட்புறவானதாக காணப்பட்டது."[24] ஐக்கிய தேசியக் கட்சியைப் போலல்லாமல் இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவுகளையே இவர் கொண்டிருந்தார். பிரித்தானியப் படைத்தளங்களை இலங்கையில் இருந்து வெளியேற்றியதன் மூலம் இந்தியாவின் நன்மதிப்பினையும் பெற்றிருந்தார். இவரின் இத்தகைய போக்கினை ஜே.ஆர்.ஜெயவர்த்தன "நேருவின் அடிவருடி" என விமர்சிக்குமளவிற்கு இந்தியாவுடனான உறவு நெருக்கமானதாக இருந்தது. இந்நெருக்கத்தின் மூலம் இந்தியா, இலங்கையை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் என்ற அச்ச உணர்வையும் பண்டாரநாயக்கா போக்கி-

***இலங்கையின் பிரித்தானிய சார்பு நிலைப்பாடானது இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கையுடனும், அணிசேராக் கொள்கையுடனும் முரண்பட்டு நின்றது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தார். இவ்வச்ச உணர்வை 1952 இலேயே தவறானது எனக் கண்டித்துமிருந்தார். "இந்தியா போன்ற ஒரு நாடு இலங்கையைத் தன்னுடன் இணைக்குமென்பதை சரியான அறிவுள்ள எந்த மனிதனும் கற்பனை செய்யமாட்டான்"[25] என்றார். இவ்வாறு இந்தியாவுடன் உறவுகளை இவர் வளர்த்துக் கொண்டாலும் இலங்கையின் தனித்துவத்தைப் பேணுவதிலும் அவர் அக்கறையாக இருந்தார். எந்தவொரு கட்டத்திலும் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையைச் செய்கின்ற அளவுக்கு அவர் செல்லவில்லை. அதேபோல் 1956ஆம் ஆண்டு எழுந்த சுயஸ்கால்வாய் மற்றும் கங்கேரி பிரச்சினைகளிலும், 1956ஆம் ஆண்டு தோன்றிய திபெத்திய சிக்கலிலும் இந்தியாவும் இலங்கையும் ஒத்த கருத்துடையனவாய் இக்காலப்பகுதியில் செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1959ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா அவர்கள் அகால மரணமடைந்ததைத் தொடர்ந்து, 1960ஆம் ஆண்டு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பதவியேற்றாலும், பண்டாரநாயக்கா அவர்களின் கொள்கையையே இவரும் பின்பற்றியதால், இலங்கை-இந்திய உறவில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால 1962ஆம் ஆண்டு இந்திய-சீனா யுத்தத்தின் போது இலங்கை நடுநிலைமை வகித்தமை இலங்கை தொடர்பில் இந்தியாவிற்கு அச்சத்தினைக் கொடுத்திருந்தது. இந்த ஒரு விடயத்தினைத் தவிர இலங்கை-இந்திய உறவுகள் சுமூகமானதாகவே இக்கால கட்டத்தில் இருந்தது. மேலும் 1964ஆம் ஆண்டு இலங்கையும் இந்தியாவும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த இந்திய வம்சாவழியினரின் பிரச்சினை தொடர்பாக ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் மூலம் இந்தியா, தனது நலன்களை இலங்கைக்கு விட்டுக் கொடுத்துள்ளது என்று இந்திய அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டிய போதும், இலங்கையுடன் நட்புறவினைப் பேண வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஏனெனில் இக்கால கட்டத்தில் இலங்கை-சீன உறவுகள் நெருக்கமாக இருந்ததனால், எல்லா முனைகளிலிருந்தும் எதிர்ப்புக்களைச் சம்பாதிக்க இந்தியா விரும்பவில்லை. மேலும் இலங்கை, பாகிஸ்தான் சார்பானதாக இருக்கக்கூடாது என்பதிலும் இந்தியா கவனமாகவே இருந்தது.

**1964ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27 இல் இந்தியப் பிரதமர் நேரு மறைந்த பொழுது அந்நாளை தனது நாட்டின் துக்க தினமாகவும் வைகாசி மாதம் 28 ஐ பொது விடுமுறை தினமாகவும் இலங்கை அறிவித்தது.**

மேலும் இக்காலப்பகுதியில் அணிசேரா இயக்கத்தில் இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகக் காணப்பட்டது. சர்வதேசளவில் இவ்வியக்கத்தை புகழ்பெறச் செய்வதில் இரு நாடுகளும் பெரிதும் ஒத்துழைத்தன. இந்தியாவில் இருந்த போர்த்துக்கீச குடியேற்றப் பகுதிகளை இந்தியா கைப்பற்றியதற்கு இலங்கை தனது ஆதரவை வழங்கியதுடன், ஐ.நா.சபையில் இந்தியாவிற்கு சார்பாகவே வாதாடியது. 1964ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27 இல் இந்தியப் பிரதமர் நேரு மறைந்த பொழுது அந்நாளை தனது நாட்டின் துக்க தினமாகவும் வைகாசி மாதம் 28 ஐ பொது விடுமுறை தினமாகவும் இலங்கை அறிவித்தது.

1965 தொடக்கம் 1970ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியதிகாரத்தினைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியானது, தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் போன்ற ஏழு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. இக்காலகட்டத்தில் அரசாங்கம் மேற்குத் தேசத்தைச் சார்ந்த கொள்கையை பின்பற்றினாலும், இந்தியாவுடனான உறவுகளில் மோதல் நிலை இருக்கவில்லை. 1964ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்தும் முயற்சியும் இக்கால கட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசாங்கமும் இதற்கு அதிக ஒத்துழைப்புக் கொடுத்த ஒரு நிலையே காணப்பட்டது.

## 3.3 இந்திய சார்புக் கொள்கை

1970ஆம் ஆண்டு மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியினை அமைத்துக் கொண்டது. 1971ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியினை அடக்குவதற்கு உதவி கேட்ட-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனைத் தொடர்ந்து இந்தியா, படை உதவிகளையும் கப்பல் ரோந்து படகுச் சேவையையும் கொடுத்து கிளர்ச்சியை அடக்குவதற்கு துணை நின்றது. இது இலங்கை-இந்திய உறவில் நெருக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் இவ்வுறவில் 1971ஆம் ஆண்டு சிறு விரிசல் ஏற்பட்டது. 1971ஆம் ஆண்டு மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் கிழக்கு பாகிஸ்தானை ஆக்கிரமிக்க விளைந்த போது இலங்கை தனது ஆகாய வழியை மேற்குப் பாகிஸ்தானுக்கு பயன்படுத்த அனுமதியளித்தமை இந்திய ஆட்சியாளர்களை கோபமடையச் செய்ததோடு, இந்தியாவின் தலையீட்டினால் இம்மோதல் முடிவுக்கு வந்திருந்தது. அத்தோடு இந்திய-பாகிஸ்தானிய யுத்தம் மூலம் உருவான பங்களாதேஷை 1972ஆம் ஆண்டு வரை இலங்கை அங்கீகரிக்காமையும் இலங்கை-இந்திய உறவில் விரிசலை உண்டு பண்ணியது.

1972 இலிருந்து இந்துசமுத்திரப் பிராந்தியத்தை சமாதானப் பிராந்தியமாக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை ஏற்று ஐ.நா. சபையிலும் பிரேரித்து, தீர்மானமாகவும் நிறைவேற்றியமை[26] இரு நாடுகளுக்கும் இடையிலான உறவினை சுமூக நிலைக்கு கொண்டு வந்திருந்தது. இக்காலகட்டத்தில் இலங்கையில் இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக துளிர்விட்டாலும் அது இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவில் எதுவித தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை.

1974ஆம் ஆண்டு இந்தியா "பொக்காரா" அணுகுண்டு பரிசோதனையை மேற்கொண்டது.[27] இந்தியாவின் இந்நடவடிக்கை இந்துசமுத்திரப் பிராந்தியத்தை "அணுத் தொல்லைகள் அற்றதாக மாற்றுதல்" என்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது என இலங்கை கண்டித்தது. இதனைப் பாகிஸ்தானும் ஏற்றுக் கொண்டு இந்தியாவைக் கண்டித்தது. இருப்பினும் இலங்கை-இந்திய உறவுகள் சுமுகமானதாக பேணப்பட்டது. மேலும் இக்காலப்பகுதியில் பல ஆண்டு பேச்சுவார்த்தைக்குப் பின்னர் 1974ஆம் ஆண்டு 28 இல் பாக்கு நீரிணையில் இலங்கையும் இந்தியாவும் தங்களது கடல் எல்லைகளை நிர்ணயம் செய்து கொண்டன. கச்சதீவு இலங்கை எல்லைக்கு உட்பட்ட பகுதியாக ஒதுக்கப்பட்டது.[28] தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பெற்றோலியம் மற்றும் கனிய வளங்களை அந்தந்த நாடுகள் எடுத்துக் கொள்ள உரிமை வழங்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு மன்னார் வளைகுடாவிலும், வங்காள விரிகுடாவிலும் இரு நாடுகளுக்குமுரிய கடற்பகுதிகள் வரையறுக்கப்பட்டன.

### 3.4 இலங்கை-இந்திய உறவில் ஏற்பட்ட சிக்கல்களும், சவால்களும்

1977ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரையிலான பதினேழு ஆண்டு காலப்பகுதியில் இலங்கை-இந்திய உறவு சிக்கல்களும், சவால்களும் நிறைந்திருந்ததை அவதானிக்க முடிகின்றது. முதல் மூன்று ஆண்டுகளிலும் (1977-1980 வரை) இந்தியாவில் மொராஜி தேசாய் தலைமையிலான ஜனதாக் கட்சி ஆட்சி புரிந்தது. இலங்கையில் 1977 தொடக்கம் 1994 வரை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரிந்தது. இவ்விரு கட்சிகளும் அமெரிக்க சார்புடைய கட்சிகளாக விளங்கியமையால் ஆரம்பத்தில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படவில்லை. 1978ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திர தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்திய பிரதமர் மொராஜி தேசாய் "இலங்கையின் இனப்பிரச்சினை அதன் உள்நாட்டு பிரச்சினை எனவும், தமிழீழக் கோரிக்கையை கைவிட வேண்டும்"[29] என்றும் கூறினார்.

மேலும் 1979ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் போது இலங்கையின் இந்தியாவிற்கான உயர் ஸ்தானிகர் "இலங்கையிலும் இந்தியாவிலும் காலத்துக்கு காலம் அரசாங்கங்கள் மாறினாலும் இரு நாடுகளினதும் உறவுகள் நட்புறவானதாகவே காணப்பட்டது எனவும், எந்த சக்தியாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று மற்றும் புவியியல் தொடர்புகளை உடைக்க முடியாது எனவும், இந்தியா ஒரு போதும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரின் தனியான அரசை உருவாக்கும் கொள்கைக்கு

***1976ஆம் ஆண்டு மன்னார் வளைகுடாவிலும், வங்காள விரிகுடாவிலும் இரு நாடுகளுக்குமுரிய கடற்பகுதிகள் வரையறுக்கப்பட்டன.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவமாட்டாது"[30] எனவும் கூறியிருந்தார். எனவே இக்காலத்தில் இரு நாட்டு உறவுகள் சீரானதாக இருந்தது என்று கூறலாம்.

1980ஆம் ஆண்டு இந்தியாவில் இந்திராகாந்தி பதவிக்கு வந்ததோடு இரு நாடுகளுக்குமிடையிலான உறவு மோசமான நிலையினை அடையத் தொடங்கியது. இதற்கு அடிப்படை காரணம் இலங்கை அரசாங்கம் அப்போது உருவாக்கியிருந்த வெளியுறவுக் கொள்கையாகும். "இலங்கையின் துரித பொருளாதார அபிவிருத்தி" என்னும் தேர்தல் விஞ்ஞாபனத்தினை முன்வைத்து பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இதனை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் மேற்கு நாடுகளுடன் ஆழமான நட்புறவினை பேணத் தொடங்கியதுடன், திறந்த பொருளாதாரக் கொள்கையினையும் பின்பற்றத் தொடங்கியது. இது அன்னிய முதலீடுகள் இலங்கையில் அதிகரிப்பதற்கும், வெளிநாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையாக இலங்கை மாறுவதற்கும் ஏதுவாகியது.

**இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாதிருக்க வேண்டுமெனில் அதற்கு கைமாறாக இலங்கை இந்தியாவின் பிராந்திய வெளிநாட்டுக் கொள்கை நெறிமுறைக்குள் இருக்க வேண்டும் என்பதே...**

இதனால் இந்தியா தனது சந்தை வாய்ப்புக்களை உடனடியாக இலங்கையில் இழப்பதற்கும், பொருளாதார தொழிநுட்ப ரீதியாக இந்தியாவை விட இலங்கை துரிதமாக அபிவிருத்தி அடைவதற்கும் காரணமாகலாம் என்ற உணர்வு இந்தியாவிற்கு ஏற்பட்டது.[31] இது நீண்ட காலத்தில் மேலைத் தேச பாதுகாப்பு வலைப்பின்னலுக்குள் இலங்கையை உற்படுத்தவும் இதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படவும் வாய்ப்புள்ளதாக இந்தியா அச்சம் கொண்டிருந்தது.

அத்துடன் ஜனதாக் கட்சி ஆட்சியிலிருந்த போது ஏற்பட்ட பல அரசியல் நிகழ்ச்சிகள் தனிப்பட்ட முறையில் இந்திராகாந்திக்கு ஜே.ஆர். ஜெயவர்தனா மீது கசப்புணர்வினை ஏற்படுத்தி இருந்தது. அத்துடன் பல தசாப்த காலமாக இந்தியாவுடன் இலங்கைக்கு இருந்த ஓர் உள்ளார்ந்த பந்தத்திலிருந்து இலங்கை தன்னை விடுவித்துக் கொள்ள முயல்வதாகவும் அவர் எண்ணினார். எனவே இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாதிருக்க வேண்டுமெனில் அதற்கு கைமாறாக இலங்கை இந்தியாவின் பிராந்திய வெளிநாட்டுக் கொள்கை நெறிமுறைக்குள் இருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாக இருந்தது.

ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்தனா அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகள் அதாவது "ஆப்கானிஸ்தான் மீதான சோவியத் படையெடுப்பில் சோவியத் சார்பான நிலை, இந்துசமுத்திரத்தை சமாதான வலையமாக பிரகடனப்படுத்துதல், அமெரிக்க வானொலி நிலையத்திற்கு (Voice of America) ஒலிபரப்பு வசதிகளை வழங்குதல், திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா பயன்படுத்த அனுமதியளித்தமை, ஆசியான் கூட்டமைப்பில் சேர்வதற்கு விண்ணப்பித்தமை"[32] போன்றவை இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இந்திராகாந்தி கருதினார்.

இவ்வாறான நிலையிலேயே 1983ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்கணக்கான தமிழர்கள் இறந்ததோடு, கோடிக்கணக்கான தமிழர்களின் சொத்துக்களும் நாசமடைந்தன. இதனால் தமிழ் மக்களின் அவலநிலை காரணமாக தமிழ்நாட்டில் அவர்களுக்கு ஆதரவான கோசங்கள் எழுப்பப்பட்டதுடன், இந்தியா இராணுவத்தை அனுப்பி தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கினர். தமிழக அரசானது இலங்கை தமிழர் மீதான ஆதரவான நிலையினைக் கொண்டிருந்தது. முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தார்.[33] இவைகளைச் சாதகமாக்கிக் கொண்ட இந்திராகாந்தி இலங்கைத் தமிழர்களை ஆதரித்தல் என்ற நிலைப்பாட்டினை முன்வைத்து, இனக்கலவரம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினை கண்டித்ததுடன், இலங்கை அரசிற்கு எதிராகச் செயற்படத் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களையும், பயிற்சியையும் வழங்கியதுடன், தனது பிரச்சார இயந்திரங்களினூடாக சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிரான பிரச்சாரங்களிலும் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இந்தியா, இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இரண்டு அணுகுமுறைகளைக் கையாண்டது. அவை, தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் ஆயுத உதவி பிரச்சாரம் என்பவற்றை வழங்குதல், இலங்கை அரசுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல் என்பனவாகும். இக்காலத்தில் இலங்கையும் இனப்பிரச்சினை தொடர்பில் இரண்டு அணுகுமுறைகளைக் கையாண்டது. தமிழ் விடுதலைக் குழுக்களை தோற்கடிக்க தன்னை இராணுவ ரீதியில் தயார்படுத்துதல், இந்தியாவை உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடாமல் செய்வதற்கு வெளிநாடுகளுடன் உறவுகளை வளர்த்தல் என்பனவாகும்.[34] இலங்கை இதனை அமுலாக்கும் வகையில் இஸ்ரேலிய மொஸாட், தென்னாபிரிக்க பிரிட்டிஸ் கூலிப்படை, என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் நேரடி இராணுவ ஆலோசனைகளையும், ஆயுத உதவிகளையும் பெற்றுக் கொண்டது. அத்துடன் இந்தியாவுடன் முரண்படக் கூடிய ஆசிய நாடுகளான சீனா, பாகிஸ்தான் என்பவற்றுடன் கூடிய உறவையும் வளர்த்தது. "ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நேரடியாக பாகிஸ்தானுக்கு 1983.07.18 இல் விஜயம் செய்து உறவினையும் வளர்த்திருந்தார்"[35]

இருப்பினும் சர்வதேச ரீதியில் இந்தியாவின் செல்வாக்கும் இலங்கையின் புவிசார் அரசியல் நிலைமை என்பன காரணமாக இலங்கை இந்தியாவுக்கு பணிய வேண்டியேற்பட்டது. இந்தியாவின் சமரச முயற்சிக்குப் பணிந்து 1984.01.10 இல் சர்வகட்சி மகாநாட்டை நடாத்தியது. இம்மகாநாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சில யோசனைகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக இதில் "இணைப்பு சீ" என்ற ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டது. இது பற்றி ஆலோசனை செய்ய இந்தியாவும் இலங்கையும் முன்வந்தன. அதன் பின்னர் பார்த்தசாரதியுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒத்துக் கொண்ட "சீ இணைப்பு" நிலைப்பாடுகளிலிருந்து இலங்கை பின்வாங்கவும் செய்தது. காரணம் இந்தியாவின் விஷேட தூதுவர் பார்த்த சாரதியின் இந்தியா, இலங்கைக்கு விட்டுக் கொடுப்புக்களைச் செய்யக் கூடாது. இந்தியாவின் திட்டப்படி இலங்கையை நடக்கச் செய்ய வேண்டும் என்ற கொள்கையாகும்.[36] இருப்பினும் இலங்கை இந்திய உறவுகளின் இந்நிலமை 1984ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இந்திராகாந்தியின் கொலையுடன் முடிவுக்கு வந்திருந்தது.

1984ஆம் ஆண்டு இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து ராஜீவ்காந்தி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தார். ஆனால் இவர் இந்திராகாந்தியைப் போலல்லாது இலங்கை தொடர்பில் மென்மையான போக்கையே கடைப்பிடித்தார். அதாவது இன்னல்களுக்கு இலக்கான இலங்கைத் தமிழர்கள் மீதான இந்தியாவின் கவலையும், இலங்கையுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான ஆசையும் தமிழர் பிரச்சினைக்குத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டின. பார்த்தசாரதியை தூதுவர் நிலையிலிருந்து நீக்குமாறு இலங்கை கேட்ட போது அதனை ஏற்று அதற்குப் பதிலாக மென்மையான போக்கினை கடைப்பிடிக்கின்ற ரமேஷ் பண்டாரியை ரஜீவ்காந்தி 1985.02.24. இல் தூதுவராக நியமித்தார்.

புதுடில்லியில் 1985ஆம் ஆண்டு ஆனி மாதம் 2ம்,3ம் திகதிகளில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் ரஜீவ்காந்தியும் சந்தித்து பேச்சுவார்த்தை நாடாத்திய அதேநேரம், இதே ஆண்டு ஆடியில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையில் பூட்டானின் தலைநகர் திம்புவில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இவற்றில் பல்வேறு உடன்படிக்கைகள் செய்யப்பட்ட போதும் அது தோல்வியில் முடிவடைந்தது.[37]

சர்வகட்சி மகாநாடு, திம்புப் பேச்வார்த்தைகள் என்பன தோல்வியடைந்ததை தொடர்ந்து. அரசு மீண்டும் இராணுவ தீர்வை நோக்கித் தீவிரமாக நகர்ந்த போது, இலங்கை-இந்திய உறவுகள் மீண்டும் சீரற்ற நிலையை அடைந்தன. அதாவது இலங்கை அரசு ஒரு புறம் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வையும், மறுபுறம் இராணுவ ரீதியான தீர்வுக்கும் தன்னை தயார் செய்து கொண்டும் இருந்தது. இந்த இரட்டை

***சர்வகட்சி மகாநாடு, திம்புப் பேச்வார்த்தைகள் என்பன தோல்வியடைந்ததை தொடர்ந்து. அரசு மீண்டும் இராணுவ தீர்வை நோக்கித் தீவிரமாக நகர்ந்த போது,***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடத்தினால் தமிழ்ப் போராளிகள் வெகுண்டெழுந்து தங்களின் ஆயுத நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தினர். இதனால் 1987ஆம் ஆண்டு ஏப்ரலில் இலங்கை அரசு தமிழ்ப் போராளிகளை முழுமையாக நசுக்கிட பெரும் அளவில் இராணுவத்தினை ஈடுபடுத்தியது. தமிழ் இயக்கங்களுக்கு எதிரான தாக்குதலில் இலங்கை வெற்றி பெற்று விட்டால் எதிர்காலத்தில் இலங்கை தான் நினைத்தபடி இந்தியாவிற்கு எதிராக நடந்து கொள்ளக் கூடும். அதைவிட, தமிழ் நாட்டு மக்களிடமிருந்து வரும் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டி வரும் என்று இந்தியா கருதியது. தமிழ் நாட்டில் அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர் மத்திய அரசாங்கத்தை ஆதரித்தமையால் அவரைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியமும் இந்திய மத்திய அரசுக்கு இருந்தது.

1987ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் வடமராச்சி மீது மேற்கொண்ட தாக்குதலினை பயன்படுத்திக் கொண்டு இந்தியா, இலங்கை அரசை பணியவைக்கும் நோக்கில் 1987ஆம் ஆண்டு 04 இல் ஆகாயத்திலிருந்து உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்தில் போட்டது. இச்செயன்முறை இலங்கையின் இறைமைக்கு ஒரு சவாலாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து இந்தியா, இலங்கையை சமரசத்திற்கு இணங்க வைத்தது. வடக்கில் இளைஞர்களின் எழுச்சியும் அரச அழிப்புக்களினதும் விளைவாக இந்திய மத்தியஸ்த்தம் ஒன்றிற்கான பின்னணி ஒன்று உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1987ஆம் ஆண்டு ஆடி மாதம் 29 இல் இந்தியாவும் இலங்கையும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தினைச் செய்து கொண்டன.[38] இவ்வொப்பந்தமானது இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட ஒன்றாகும். அதன் மூலம் இரு நாட்டு உறவில் புதிய சகாப்தம் தொடங்கியது. இந்திய அமைதிகாக்கும் படையும் இலங்கைக்கு வந்து இறங்கியது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் காணப்படும் முக்கியமான அம்சங்கள் சுருக்கமாக பின்வருமாறு காணப்படுகின்றது.[39]

1. வடக்கு கிழக்கு தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை இரு நாட்களுக்குள் சமாதான குழுக்களிடம் ஒப்படைத்தல்
2. இலங்கைப் படையினர் தமது முகாம்களுக்குள் முடங்கிக் கிடத்தல்
3. இரு நாட்டு தலைவர்களினதும் விருப்பத்திற்கு இணங்க இந்திய அமைதிப் படையொன்றை (IPKF) வடக்கிலும் கிழக்கிலும் நிலை கொள்ளச் செய்தல்
4. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட ரீதியில் மாகாண சபையொன்றினை அமைத்தல்
5. பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குதல்
6. பாக்கு நீரிணையில் இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தல்
7. இந்திய துணைக் கண்டத்தை பயங்கரவாதிகள் பயன்படுத்தாமல் இருத்தல்
8. தேர்தல் நடைபெற்று மானில அரசு ஒன்று தெரிவு செய்யப்படும் வரை இடைக்கால அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கும்
9. 1987 ஆகஸ்ட் 15 ஆம் திகதியுடன் அவசரகால சட்டம் வட கிழக்கிலிருந்து நீக்கப்படும்
10. இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இராணுவ உதவியை இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் கேட்குமிடத்து எந்த நேரத்திலும் அத்தகைய இராணுவ உதவியைக் கொடுப்பதன் மூலம் ஒத்துழைப்பு நல்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியாவின் நலன்களே கூடுதலாக பேணப்பட்டன. ஒப்பந்தம் தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் பரிமாறிக் கொண்ட கடிதத்தில் அந்நிய இராணுவத்தினர் உளவுப் பிரிவினரை இலங்கை-இந்தியா உறவை பாதிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடாது தடுத்தல், திருகோணமலைத் துறைமுகத்தையும் ஏனைய துறைமுகத்தையும் வேறு நாடுகள் பயன்படுத்த விடாது தடுத்தல், அந்நிய ஒலிபரப்பு நிறுவனங்களால் இந்தியா பாதிக்கப்படாது பாதுகாத்தல், திருகோணமலை எண்ணெய் கிடங்குகளை கூட்டாக பயன்படுத்துதல் என்பவற்றிற்கு இலங்கை இணங்கிக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.[40]

1989 தொடக்கம் 1994 வரையிலான காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஆர்.பிரேமதாஸா ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார். தீவிர இந்திய எதிர்ப்பாளராக விளங்கிய இவர் இந்திய அமைதி காக்கும் படைகளை இலங்கையில் இருந்து வெளியேற்றும்படி இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். இதற்கு ராஜீவ் காந்தி இணங்காததால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி அவர்களுக்கு நிதியுதவிகளையும் வழங்கினார். இது இந்தியாவிற்கு வெறுப்பினை உண்டு பண்ணியதோடு இலங்கை-இந்திய உறவில் பாதிப்பினையும் ஏற்படுத்தி இருந்தது.[41]

1990ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதனைத் தொடர்ந்து தேசிய முன்னணியின் சார்பில் விஸ்வனாத் பிரதாப் சிங் தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டது. அவரின் ஆட்சிக் காலத்தில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் சுமூக நிலைக்கு வரத்தொடங்கின. ஏனெனில் இவர் இந்திய இராணுவத்தினை இலங்கையில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டதோடு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதனையும் தவிர்த்துக் கொண்டார்.

1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடுவதனை முற்றாக விலக்கிக் கொண்டது. 1991ஆம் ஆண்டு காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. தவிர தமிழ் நாட்டு முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா பதவியேற்றுக் கொண்டார். ராஜீவ் கொலைக்கு காரணம் எனக் கருதிய விடுதலைப் புலிகளுடன் கடுமையான போக்கினை தமிழக அரசும், இந்திய அரசும் கடைப்பிடிக்கலாயிற்று. ராஜீவ் காந்தியின் கொலை இலங்கை-இந்திய உறவை மீண்டும் பாதித்தது. 1991ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடக்கவிருந்த சார்க் உச்சிமாநாடும், இந்தியா பங்கேற்காத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு இந்திய உயர் நீதிமன்றம் புலிகள் இயக்கத் தலைவருக்கு எதிராக பிடிவிராந்து பிறப்பித்தது. அதேபோல புலிகளின் நடமாட்டத்தையும் இந்தியா கட்டுப்படுத்தியது.

1993ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா கொலை செய்யப்பட்டு டி.பி.விஜயதுங்க பதவியேற்ற போது இலங்கை-இந்திய உறவில் ஒரு சுமுகமான நிலை பேணப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உலக ரீதியாக ஏற்பட்ட மாற்றமும் இலங்கை-இந்திய உறவின் சுமுக நிலைக்கு உதவியது. சோவியத் யூனியன் சிதைவடைந்து பனிப்போர் முடிவுக்கு வந்தமையே அம்மாற்றமாகும்.[42] இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் வளர்ச்சியினால் அமெரிக்காவும் பாகிஸ்தானுடனான தனது உறவினைக் குறைத்து இந்தியாவுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டது. இத்தகைய போக்கினால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரிய அமெரிக்க சார்பான நிலைப்பாடு இந்தியாவிற்கு பெரிய உறுத்தலாக அமையவில்லை.

1994 தொடக்கம் 2005 வரையான இக்கால கட்டத்தில் சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினை அமைத்துக் கொண்டது. அரசியலில் திறமை படைத்த சந்திரிக்கா சிறப்பான முறையில் வெளிநாட்டுக் கொள்கையினை அமைத்துக் கொண்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரிய பொருளாதாரக் கொள்கையினைக் கைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையினையே பின்பற்றியது. இதனால் ஐக்-

*1990ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதனைத் தொடர்ந்து தேசிய முன்னணியின் சார்பில் விஸ்வனாத் பிரதாப் சிங் தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய அமெரிக்கா போன்ற மேலைத்தேய நாடுகளுடன் தொடர்பினைக் கொள்ள வேண்டிய தேவையினை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது இலங்கை-இந்திய உறவுகளில் தாக்கத்தினைச் செலுத்தவில்லை. காரணம் இக்காலகட்டத்தில் இந்திய-அமெரிக்க உறவுகள் சீராக இருந்தமையாகும். இந்தியாவில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான சக்திகளுடன் இணைந்து பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைத்திருந்ததால் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா சார்பான நிலையைக் கடைப்பிடிக்குமா? என்ற அச்சம் இலங்கைக்கு இருந்தாலும் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து அதனை சரி செய்து கொண்டது. அத்தோடு இக்காலகட்டத்தில் இந்தியா மேற்கொண்ட அணுகுண்டு பரிசோதனையை இலங்கை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் இலங்கை-இந்திய உறவில் கார்கில் போரானது தாக்கத்தினைச் செலுத்தியது எனலாம். காரணம் பல்வேறு உலக நாடுகளும் பாகிஸ்தானை கண்டித்த போதிலும் இலங்கை நடுநிலைமை வகித்தமை இந்தியாவிற்கு அதிருப்தியைக் கொடுத்தது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை-இந்திய உறவானது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் சீரானதாகக் காணப்படவில்லை. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பின்பற்றிய மேலைத்தேய சார்பான கொள்கையே காரணமாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சிறப்பான நிலையில் காணப்பட்டன. இக்காலகட்டத்தில் இந்தியா பின்பற்றிய வெளியுறவுக் கொள்கையையே இலங்கையும் அதிகளவில் பின்பற்றியது. இந்திய-சீன யுத்தத்தில் இலங்கையின் நிலை தொடர்பான சில கசப்புக்களைத் தவிர இலங்கை-இந்திய உறவுகள் சுமுகமானதாகவே காணப்பட்டன. இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டியது இலங்கை இந்தியாவுக்கு சார்பான கொள்கையை பின்பற்றினாலும், இந்தியாவுக்கு முழுமையாக பணிந்து விடவில்லை. ஆனால் இக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையோ எதிரான கொள்கையையோ பின்பற்றாததால் இந்தியாவும் சுமுகமான உறவுகளையே இலங்கையுடன் பேணியது.

1977 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் இலங்கை-இந்திய உறவில் அதிக உச்சத்தில் விரிசல் நிலையும், அதே போல் பல்வேறு சமரசப் பேச்சுவார்த்தைகளின் பயனாய் சுமுகமான நிலையும் காணப்பட்டது. இது புவியல் ரீதியாக அண்மையில் உள்ள இலங்கையும் இந்தியாவும் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு வாழ முடியாது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இக்காலப்பகுதியில் இலங்கை-இந்திய உறவுகள் குறிப்பிட்டு பேசக்கூடியதொன்றாகவே இருந்தது. ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கையுடன் முரண்பட்டுக் கொள்ளவேண்டிய தேவையும் இந்தியாவிற்கு இருக்கவில்லை. தமிழ் நாட்டிலிருந்து அதற்கான அழுத்தங்களும் இந்திய மத்திய அரசுக்கு வரவில்லை. இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழி மக்களின் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் முரண்பட வேண்டிய தேவையும் இருக்கவில்லை. இருந்தாலும் இக்காலப்பகுதியில் இலங்கை-இந்திய உறவுகளில் திருப்திகரமானதொரு நிலையிருக்கவில்லை எனலாம்.

"ஐக்கிய தேசியக் கட்சி காலத்தை பொறுத்தவரை இந்தியாவுக்கு எதிரான கொள்கையை இலங்கை பின்பற்றாதவரை இலங்கையுடன் சுமுகமான உறவுகளைப் பேணவே இந்தியா விரும்பியது". மாறாக தனக்கு எதிரான கொள்கையை பின்பற்றுமானால் ஏதாவது புற நிர்ப்பந்தங்களை கொடுத்து தனது வழிக்கு கொண்டு வரும் முயற்சிகளிலேயே இந்தியா ஈடுபட்டது. ஏனெனில் பொதுவாக இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலங்களில் வெளிவல்லரசுகள் தென்னாசியப் பிராந்தியத்திற்குள் நுழையக் கூடிய நிலை இருந்தது.

"ஐக்கிய தேசியக் கட்சி காலத்தை பொறுத்தவரை இந்தியாவுக்கு எதிரான கொள்கையை இலங்கை பின்பற்றாதவரை இலங்கையுடன் சுமுகமான உறவுகளைப் பேணவே இந்தியா விரும்பியது".

### 3. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் இலங்கை-இந்திய உறவு

1987ஆம் ஆண்டு யூலை மாதம், 29ஆம் திகதி இந்தியா உருவாக்கிய இலங்கை-இந்திய ஒப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தம் பெரும் உண்மையினை வெளிப்படுத்தியது. அதாவது, இலங்கையின் இன முரண்பாட்டிற்கு சமாதானமான அரசியல் தீர்வினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமே இந்தியா தனது பிராந்திய வல்லாதிக்கக் கொள்கையினை நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்பதாகும். இவ்வகையில், இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம் இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்க நலனை உறுதிப்படுத்தியது. இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தனியரசு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியானது, இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், தேசிய பாதுகாப்பிற்கும், பிராந்திய வல்லாதிக்கப் போக்கிற்கும் தொடர்ந்தும் ஆபத்தானதாகவே இந்திய கொள்கை வகுப்பாளர்களால் நோக்கப்படுகிறது.

இதனால், இலங்கையின் இன முரண்பாடானது இலங்கையின் இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கத்திற்கு தீங்கு ஏற்படாத வகையில் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். இலங்கையிலிருந்து இந்திய அமைதிகாக்கும் படை வெளியேற்றப்பட்டதன் பின்னர் மீண்டும் இனப்பிரச்சினையில் இந்தியாவின் வகிபாகத்தினை இலங்கையின் அனேக அரசியல் குழுக்களும், தலைவர்களும் விரும்பியிருந்தார்கள். ஆனால், எவ்வகையில் இந்தியா தனது வகிபாகத்தினை கொண்டிருக்க வேண்டும் என்பதில் இவர்களுக்கு இடையில் ஒற்றுமை இருக்கவில்லை. இந்தியா என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக வேறுபட்ட, முரண்பாடான கருத்துக்கள் இவர்களுக்கிடையில் காணப்பட்டன. பெரும் மனித அவலத்தினை ஏற்படுத்திய சுனாமி அவலத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகிய சமாதான பேச்சுவார்த்தை இலங்கையில் சமாதானமும் இல்லை, யுத்தமும் இல்லை என்ற நிலையினை உருவாக்கியிருப்பதாக சர்வதேச அரங்கிலும், இந்தியாவிலும் கருதப்பட்டிருந்தது. உண்மையில் இலங்கையின் இனமுரண்பாட்டில் இந்தியாவின் வகிபாகம் தீவிரமானதாக அல்லது உறுதியானதாக இருக்கவில்லை. இந்தியா தனது சுயபாதுகாப்பு என்ற நிலையுடனும், அரசியல் ஸ்திரத்தன்மையினை பேணுதல் என்ற நிலையுடனும் தொடர்புபடுத்தி இலங்கையில் நிச்சயமற்ற நிகழ்வுகள் நடைபெறுவதாகவே கருதியது.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட மஹிந்த ராஜபக்ஸ தனது முதலாவது வெளிநாட்டு இராஜதந்திர விஜயத்தினை 2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை இந்தியாவில் மேற்கொண்டிருந்தார்.[43] பின்னர் 2006ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை, கவானாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டின் போது சந்தித்து இரு நாடுகளினதும் உறவுகள், நலன்கள் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார்.[44] பின்னர் இலங்கை ஜனாதிபதி இரண்டாவது தடவையாக 2006ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.[45] இதன் தொடர்ச்சியாக இலங்கையின் பிரதம மந்திரி இரட்ணசிறி விக்கிரமநாயக்கா 2007ஆம் ஆண்டு தை மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 30ம் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்து இருதரப்பு உறவுகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்ததுடன், புதுடெல்லியில் நடைபெற்ற சத்தியக்கிரக மகாநாட்டிலும் பங்குபற்றியிருந்தார்.[46]

அதேநேரம் புதிதாக வெளிவிகார அமைச்சராக நியமனம் பெற்றுக் கொண்ட ரோகித்த போகொல்லாகம 2007ஆம் ஆண்டு தை மாதம் 30ம்இ 31ம் திகதிகளில் தனது முதலாவது இராஜதந்திர விஜயத்தினை இந்தியாவில் மேற்கொண்டு இருதரப்பு உறவுகளையும் பலப்படுத்தியிருந்தார்.[47] இதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர இந்தியாவிற்கு ஆறு தடவை விஜயம் மேற்கொண்டிருந்தமையும், இறுதியாக புதுடெல்லியில் நடைபெற்ற "லால பகதூர் சாஸ்திரி" நினைவுப் பேருரையினை 2007ஆம் ஆண்டு தை மாதம் 16ம், 17ம் திகதிகள் நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.[48] மேலும், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள்

***இந்தியா தனது சுயபாதுகாப்பு என்ற நிலையுடனும், அரசியல் ஸ்திரத்தன்மையினை பேணுதல் என்ற நிலையுடனும் தொடர்புபடுத்தி இலங்கையில் நிச்சயமற்ற நிகழ்வுகள் நடைபெறுவதாகவே கருதியது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு இருதரப்பு உறவுகள் தொடர்பாகப் பலதரப்பட்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியிருந்தார்.[49]

இந்தியத் தரப்பினை பொறுத்தவரையில் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு 2007-ஆம் ஆண்டு தை மாதம் 9ம், 10ம் திகதிகள் விஜயம் மேற்கொண்டு சார்க் உச்சிமகாநாட்டிற்கான அழைப்பிதழை ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தார். இதனை விட லோக் சபா இணைச் சபாநாயகர் சரண்ஜித் சிங் அத்வான் 2006ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26-ஆம் திகதி தொடக்கம் சித்திரை 3ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் மகாநாட்டில் பங்குபற்றியிருந்தார்.[50] இரு நாட்டுத் தலைவர்களும் பரஸ்பரம் நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டமை மூலம் இருதரப்பு உறவுகளையும் பலப்படுத்தி வந்திருந்தார்கள்கள்.

### 4.1 சமாதான செயற்பாடுகளில் இந்தியாவின் ஆதரவு

பிளவுபடாத இலங்கை, பன்மைத்துவம், மனித உரிமைகள் மீதான கௌரவம், நிலையான ஜனநாயகத்துடன் கூடிய இலங்கையில், எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் பேச்சுவார்த்தையினாலான அரசியல் தீர்வுக்கு இந்தியா தனது உறுதியான ஆதரவினைத் தெரிவித்து வருகின்றது. இதனடிப்படையில் நோர்வேயினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான உதவியை இந்தியா எப்போதும் ஆதரித்து வந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளாலும் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையினை இருதரப்பும் பலப்படுத்துவதற்கு இந்தியா எப்போதும் ஆதரவு தெரிவித்து வந்ததுடன், 2006ஆம் ஆண்டு மாசி மாதம் நடைபெற்ற ஜெனிவா பேச்சுவார்த்தையினையும் இந்தியா ஆதரித்திருந்தது.[51] இத்தருணத்தில் இலங்கையின் இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலை இந்தியா ஒழிவு மறைவின்றி பலமாகக் கண்டித்தும் இருந்தது. 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்த தடையினை மேலும் இரண்டு வருடத்திற்கு நீடித்துமிருந்தது.[52]

இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் தொடர்ந்தும் நிலையான சமனிலை கொண்டதாக இருந்தது. அதே நேரம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டே வந்தது. சமாதானப் பேச்சுக்கு இருதரப்பும் திரும்புவது என்பதே இந்தியாவின் மிக முக்கியமான எதிர்பார்க்கையாகவும் இருந்தது. இந்தியா, அரசியல் பேச்சுவார்த்தை இல்லாமல் தற்போதைய யுத்த நிறுத்த உடன்படிக்கையினை நிலை நிறுத்தி பேணிக் கொள்வது கடினமானதுடன், யுத்தம் இனப்பிரச்சினை தீர்விற்கு ஏற்புடையதல்ல என்பதனையும் இலங்கையிடம் வலியுறுத்தி வந்தது. மேலும் இந்தியா, இலங்கை அரசாங்கம் பொருத்தமான அதிகாரப் பகிர்வு யோசனைகளை விரைவாக முன்வைக்க வேண்டிய தேவையுள்ளது என்பதனையும், அரசியல் அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியா தனக்கு இருக்கும் அனுபவத்தினை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளத் தான் ஆர்வமாக இருப்பதனையும் இந்தியா வெளிப்படையாக தெரிவித்திருந்தது. அதேநேரம் இந்தியாவிற்கு இலங்கையின் எதிர்க் கட்சி தலைவர் விஜயம் மேற்கொண்ட காலங்களிலெல்லாம் இலங்கையின் இன முரண்பாட்டிற்கு தீர்வு காண்பதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றிணைந்து பணியாற்றுமாறும் வேண்டுகோள் விடுத்து வந்தது.

**இந்தியாவிற்கு எதிர்க் கட்சி தலைவர் விஜயம் மேற்கொண்ட காலங்களிலெல்லாம் இலங்கையின் இன முரண்பாட்டிற்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி மஹிந்தாவுடன் ஒன்றிணைந்து பணியாற்றுமாறும் வேண்டுகோள் விடுத்து வந்தது.**

### 4.2 யுத்தத்தின் ஆரம்பமும் மக்கள் இடப்பெயர்வும்

2007ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பு நிலவரம் மோசமடையத் தொடங்கியது. அதுவும் குறிப்பாக 2006ஆம் ஆண்டு சித்திரை மாதம் இலங்கை இராணுவத் தளபதி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டிருந்தது. இதன் பயனாக இலங்கை பாதுகாப்பு படையின் விமானப் படையணியினர் இலங்கையின் கிழக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்தியத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது வான் தாக்குதல்களைத் தொடுத்தனர். இது புதிதாக இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்குள் நுழைவதற்கு காரணமாகியது.[53] 2006ஆம் ஆண்டு ஆடியில் இலங்கையின் கிழக்கு பிராந்தியத்திலுள்ள நீர் நிலைகளில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு, அது வட பகுதிக்கும் பரவியது. 2008ஆம் ஆண்டு தை மாதம் போர் நிறுத்த உடன்படிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரத்துச் செய்து இருந்தார். இவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக அரசாங்கம் விலகிய போது அதனை உலகின் பல்வேறு நாடுகளும் அமைப்புக்களும் சமாதான விரும்பிகளும் கண்டித்ததுடன், இதன் முழு அளவான உக்கிர மோதலை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்தனர். ஆனால் இதன் போது இந்தியா எந்தவிதமான கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. மாறாக இலங்கைக்கு கடற் கண்காணிப்பிலும், ஆயுத இராணுவ உதவிகளை வழங்குவதிலும் அக்கறையாக செயற்பட்டது. போர் நிறுத்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட சிறிது காலத்திலே யுத்தம் உக்கிரமடைய தொடங்கியது. அப்பாவி பொதுமக்கள் பாரிய மனித அவலங்களுக்கு உள்ளாகியதுடன், உயிர்ச்சேதமும், உடமைச்சேதமும் நாளுக்கு நாள் அதிகரிக்கக் தொடங்கியது. இது இலங்கைத் தமிழ் மக்கள் மேலும் அகதிகளாக இந்தியாவிற்குள் நுழைவதற்கும், இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் மேலும் சீர்கெடுவதற்கும் காரணமாகியது.[54] 2007ஆம் ஆண்டு தைமாதம் 16000 இலங்கை அகதிகள் இந்தியாவிற்குள் நுழைந்து கொண்டதாக தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் திருகோணமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலிருந்து சென்றுள்ளனர். 2006ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் மாத்திரம் 6000 அகதிகள் இந்தியாவிற்குள் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.[55] இந்நிலையில் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களால் இந்தியா விமர்சனத்திற்கு உள்ளானது.

### 4.3 இலங்கைக்கான இராணுவ உதவிகள்

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து இலங்கையின் இன முரண்பாடு புதிய பரிணாமத்தினை அடையத் தொடங்கியது. தொடர்ந்து நிகழ்ந்து வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சம் தருவதாக மாறியிருந்தது. இலங்கை அரசாங்கம் பெருமளவிற்கு இந்துசமுத்திரப் பிராந்தியத்தில்



அதிகாரத்திற்காகப் போராடி வரும் சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் கொண்டிருந்த நெருக்கமான உறவு இந்தியாவினைப் பொறுத்தவரையில் தனது சுயபாதுகாப்பு, அரசியல் ஸ்த்திரத்தன்மையினைப் பாதிப்பதாகவிருந்தது. இதனால், நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வழிகளில் தொடர்புபடத் தொடங்கியது.

இந்திய அரசாங்கம் இலங்கை இராணுவத்திற்கு பெருமளவு ஆயுத தளபாடங்கள், பயிற்சிகள், தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் ஊடாக இலங்கை இன முரண்பாட்டில் தொடர்புபடத் தொடங்கியது.[56] இந்திய அரசாங்கத்தினை பொறுத்தவரையில் இலங்கையின் உள்நாட்டுப் போரில் பிராந்தியத்தின் ஏனைய அரசுகளோ அல்லது மேற்குத் தேச அரசுகளோ நேரடியாக தொடர்புபடக் கூடாது என்ற அடிப்படையிலேயே உதவிகளை வழங்கத் தொடங்கியது. இதனால் பாதுகாப்பு விடயத்தில் இரு நாடுகளினதும் உறவு மிகவும் பலம் வாய்ந்ததாக மாறத்தொடங்கியது. இலங்கை இராணுவத்திற்கான பாரிய பயிற்சிகள் யாவும் இந்திய இராணுவத்தினாலே-

**போர் நிறுத்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட சிறிது காலத்திலே யுத்தம் உக்கிரமடைய தொடங்கியது. அப்பாவி பொதுமக்கள் பாரிய மனித அவலங்களுக்கு உள்ளாகியதுடன், உயிர்ச்சேதமும், உடமைச்சேதமும் நாளுக்கு நாள் அதிகரிக்கக் தொடங்கியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யே இக்காலத்தில் வழங்கப்பட்டு வந்தன. ஏறக்குறைய 53% இலங்கை இராணுவத்தினர்களுக்கு இந்தியா பயிற்சி வழங்கியுள்ளது. அண்மைக் காலத்தில் இந்தியாவினால் இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்ட பயிற்சிகளில் இது மிகவும் கணிசமான தொகை எனவும் கூறப்படுகின்றது.

2006ஆம் ஆண்டிற்கும் 2002ஆம் ஆண்டிற்கும் இடையில் 870 பாதுகாப்பு படையினருக்கு இந்தியாவினால் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 545 இராணுவத்தினரும் 216 கடற்படையினரும் 109 விமானப் படையினரும் அடங்குகின்றனர். 2005ஆம் ஆண்டிற்கும் 2006ஆம் ஆண்டிற்கும் இடையில் 977 பாதுகாப்பு படையினருக்கு பயிற்சிக்கான நுழைவுரிமை வழங்கப்பட்டது.[57] 2007ஆம் ஆண்டிற்கும் 2008ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் 2579 பாதுகாப்பு படையினருக்கு நுழைவுரிமை கோரப்பட்டிருந்தது. இவர்களில் 1208 இராணுவத்தினருக்கும், 518 கடற்படையினருக்கும், 853 விமானப் படையினருக்கும் இவ் நுழைவுரிமை கோரப்பட்டிருந்து.[58] மறுபக்கத்தில் இருதரப்பு கடற்படையினருக்கும் இடையிலான கூட்டுறவும் ஒத்துழைப்பும் தொடர்தேச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை விட 2006ஆம் ஆண்டு வங்காளதேஷ் நாட்டின் எண்ணெய்க் கப்பல் காலிக்கு அண்மையில் விபத்துக்குள்ளானதினால் ஏற்பட்ட எண்ணெய்க்கசிவினை அகற்றுவதற்கு இந்தியக் கரையோர காவல் பிரிவு தனது உதவியை இலங்கைக்கு வழங்கியிருந்தது. [59]

### 4.4 பலாலி விமானத் தளத்தின் திருத்தம்

பலாலி விமான நிலைய ஓடு பாதை இந்தியாவின் நிதி உதவிகளுடன் திருத்தம் செய்யப்பட்டதாக இலங்கையின் விமானப் படைத்தளபதி (Air Voice Marshal) 2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் கூறியிருந்தார். இவ்விமானப் படைத்தளம் தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இப்படைத் தளத்தினூடாகவே, வடபகுதிக்கான இராணுவப் படைகள் நகர்த்தப்படுகின்றன. குறிப்பாக கடல், நிலத் தொடர்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் ஆபத்தான நிலைக்குள்ளாகும் போதெல்லாம் இவ்விமான படைத்தளமே இலங்கை இராணுவத்திற்கு பெரிதும் உதவியிருந்தது. அத்துடன், சிரேஸ்ட இராணுவ உத்தியோகத்தர்களின் பிரயாணங்களுக்கும், மருத்துவ ரீதியாக யுத்தத்தில் காயமடைந்தவர்கள், யுத்தமுனைகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்களுக்கும், யுத்தம் நிகழும் காலங்களிலெல்லாம், யாழ்ப்பாணத்தினை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கும், இலங்கை இராணுவத்திற்கு இவ்விமானப் படைத்தளமே பெரிதும் கைகொடுத்து வருகின்றது. 2000ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையில் இடம் பெற்ற யுத்தத்தினால் இவ்விமானப் படைத்தளத்தின் ஓடு பாதை பாரிய சேதத்துக்குள்ளாகியது. இது திகிலான அல்லது பயங்கரமான ஒரு நிலையினை இலங்கை இராணுவத்திற்கு ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் இலங்கையின் தென்பகுதிக்கும், வடபகுதிக்கும் இடையிலான தொடர்பிற்கு இருந்த ஒரே ஒரு தொடர்பு மார்க்கம் துண்டிக்கப்பட்டது. இந்நிலையில் இலங்கையின் அவசர வேண்டுகோளுக்கு அமைய இந்திய நிதி உதவியுடன் இவ்விமானப் பாதைகள் திருத்தியமைக்கப்பட்டன.

ஆயினும், இது தொடர்பான தனது ஆட்சேபனையினை தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்களில் ஒருவராகிய வை.கோபாலசாமி அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜியிடம் தெரிவித்திருந்தார்.[60] பின்னர் இவர் இது தொடர்பாக எதனையும் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டிருக்கவில்லை. இது இந்திய அரசியலில் காணப்படும் சாதாரண நடைமுறையாகும். இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கியிருந்தது. தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் இது தொடர்பான தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கும் போதெல்லாம் இந்திய அரசாங்கம் சில விளக்கங்களை அல்லது தான் இப்பிரச்சினைகளிலிருந்து முழுமையாக விலகியிருப்பதாக கூறி வந்திருந்தது. கிடைக்கக் கூடிய அறிக்கைகளின்படி இந்திய

பலாலி விமான நிலைய ஓடு பாதை இந்தியாவின் நிதி உதவிகளுடன் திருத்தம் செய்யப்பட்டதாக இலங்கையின் விமானப் படைத்தளபதி 2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் கூறியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் 2004ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபாவினை விமான நிலைய திருத்த வேலைகளுக்காக ஒதுக்கியிருந்ததாக கூறப்படுகின்றது.[61] ஆனால், இந்திய அரசாங்கம் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களின் தாக்குதல்கள், கண்டனங்களில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக இத்தொகையினை மறைத்து வைத்திருந்தது. இவ்விமான நிலைய வேலைகள் 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தினை தொடரவும் வாய்ப்பளிக்கப்பட்டது. விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா இந்தியாவின் இவ்வகிபாகம் தொடர்பாக பத்திரிகைகளுக்கு பின்வருமாறு விளக்கியிருந்தார்.

"இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் விமான நிலையத்தின் மீள்கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இது ஆறு தொடக்கம் எட்டு மாதங்களில் பூர்த்தியாக்கப்படத் திட்டமிடப்பட்டது. துரதிஷ்டவசமாக காலநிலை இவ்வேலைகள் துரிதமாக்கப்படுவதில் சிறிய காலதாமதத்தினை ஏற்படுத்தி விட்டது. ஆயினும் இவ்வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்தியாவிலிருந்து வந்த குழுவினர் எம்முடன் ஒன்றாக இருந்து விரைவாக முடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது"[62] எனக் கூறியிருந்தார்.

### 4.5 இராணுவ ராடர் நன்கொடை

தமிழீழ விடுதலைப் புலிகள் தாழ்வாகப் பறக்கும் இலகுரக விமானங்களை பயன்படுத்தி இலங்கையின் தென்பகுதியில் குண்டுகளை வீசி அழிவுகளை ஏற்படுத்த தொடங்கினர். இதனைத் தடுப்பதற்கு இலங்கையின் கோரிக்கைக்கு இணங்க இந்திய இவ்விமானங்கள் அடையாளப்படுத்திக் காட்டக்கூடிய ராடர்களை இலங்கை இராணுவத்திற்கு வழங்கியிருந்ததுடன், இதற்கான தொழிநுட்பவியலாளர்களையும் வழங்கியிருந்தது.[63] தமிழீழ விடுதலை புலிகள் பயன்படுத்திய இலகுரக விமானங்கள் இலங்கை அரசாங்கம் பயன்படுத்தும் இரஷ்சியத் தயாரிப்பு விமானங்களாகிய மிக் போன்றோ அல்லது இஸ்ரேலியத் தயாரிப்பாகிய கிபீர் விமானங்கள் போன்றோ பாரிய சேதத்தினை ஏற்படுத்தக்கூடியவைகளல்ல. இலங்கை விமானப் படைத் தளபதி டொனால் பெரேரா இது தொடர்பாகக் கூறும் போது

"தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிய ரக விமானங்கள் இரண்டை வைத்திருக்கின்றார்கள். இவைகள் ஒற்றை இயந்திரத்தினையும் இரண்டு ஆசனங்களையும் கொண்டவைகளாகும். இவைகள் தாக்கும் திறன் அற்றவைகளாகும். ஒரு மோட்டார் வண்டியில் வெடி பொருட்களை ஏற்றி வெடிக்க வைத்தால் எவ்வளவு சேதம் ஏற்படுமோ அவ்வளவு சேதத்தினை வானில் இருந்து ஏற்படுத்தலாம்"[64] எனக் கூறியிருந்தார்.

இதனாலேயே இதனை தடுப்பதற்கு இந்தியா இலங்கைக்கு ராடர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. 2005ஆம் ஆண்டு ஆனி மாதம் இலங்கைக்கு இந்திய அரசாங்கம் ராடர் கருவிகளை இலவசமாக வழங்கியிருந்தாலும், 2005ஆம் ஆண்டு மார்கழி மாதம்தான் அது தொடர்பான தகவல்கள் வெளிவந்திருந்தன. குறிப்பாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்த போது இத்தகவல்களும் வெளிவந்தன. இலங்கை ஜனாதிபதி வெளிப்படையாக சில விடயங்களை இந்தியாவில் வைத்து தெரிவித்திருந்தார் அதாவது,

"இலங்கையின் இன முரண்பாட்டிற்கு சமஷ்டி முறை தீர்வாக அமைவதை நான் எதிர்க்கின்றேன். இது தொடர்பான உறுதி மொழிகளை தனது கூட்டு கட்சிகளாகிய ஜனதா விமுக்திப் பெரமுன, ஜாதிக கெல உறுமய ஆகியவற்றிற்கு வழங்கியுள்ளேன். அடுத்து வருகின்ற சில மாதங்களில் இலங்கை இராணுவத்தை பலப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தினை ஆரம்பிக்கப் போகின்றேன்"[65] எனக் கூறியிருந்தார்.

இலங்கை இராணுவத்திற்கு இந்தியா ராடர் கருவிகளை இலவசமாக வழங்கியிருந்தமை தொடர்பாக தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்களாகிய ராமதாஸ், திருமாவளவன்இ வை.கோபாலசாமி ஆகியோர் தமது அதிருப்தியை இந்திய அரசாங்கத்திடம் தெரிவித்திருந்தாலும்,[66] இந்திய அரசாங்கத்தின் சார்பில்

இந்தியா இலங்கைக்கு ராடர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. 2005ஆம் ஆண்டு ஆனி மாதம் இலங்கைக்கு இந்திய அரசாங்கம் ராடர் கருவிகளை இலவசமாக வழங்கியிருந்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் அதற்கு பதிலளித்திருக்கவில்லை. ஆயினும், வழமைபோல இத்தலைவர்கள் இதற்கு எதிராக மேலும் எவ்விதமான நடவடிக்கைகளையும் பின்னர் எடுத்திருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் இலகுரக விமானங்களை அழிப்பதற்கு இந்தியா இவ்வாறு உதவி செய்திருந்தாலும், இதற்கு முன்னர் 2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் வலிமையினை தகர்த்தழிப்பதற்கு உயர்தர கரையோர காவல் கப்பலாகிய "சுகன்யா" வினை இலங்கைக் கடற்படைக்கு விற்பனை செய்திருந்தது.[67]

## 4.6 இலங்கை விமான படைகளுக்கான பயிற்சி

இந்தியா இலங்கையின் விமானப் படைகளுக்கு பயிற்சிகளையும் வழங்கியது. 2006 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆறு பேர்களைக் கொண்ட இலங்கை விமானப்படை ஆளனியினர் இந்தியாவின் சண்டிகாரிலுள்ள விமானப் படைத் தளத்தில் மிக்-27 யுத்த விமானத்தினை இயக்கும் பயிற்சியைப் பெற்று வெளியேறியிருந்தனர்.[68] இதற்கு முதலும் இவ்வாறு இரண்டு தொகுதி இலங்கை விமானப்படை ஆளனியினருக்கு இந்தியா பயிற்சியை வழங்கியிருந்தது. இது முக்கியமானதொரு பயிற்சியாக கருதப்பட வேண்டியதாகும். மிக் யுத்த விமானங்கள் இரஸ்சியத் தயாரிப்புக்களாகும். பொதுவாக இலங்கை விமானப்படை தனது பயிற்சியை பாகிஸ்தானிலேயே பெற்று வந்தது. ஆனால், பாகிஸ்தானிடம் இருக்கும் விமானங்கள் மேற்கு நாடுகளின் உற்பத்திகளாகும். இதனால் மிக் பற்றிய தொழிநுட்ப அறிவு பாகிஸ்தான் படையிடம் இருக்கவில்லை. ஆனால், இந்தியாவிடம் இரஷ்யத் தயாரிப்பிலான யுத்த விமானங்களே அதிகம் என்பதுடன், அதனை இயக்கும் வல்லமை மிக்கவர்களாகவும் இந்திய விமானிகள் இருந்தனர். இதுவும் இந்தியா நோக்கி இலங்கை நகர்வதற்கு காரணமாக இருந்தது எனக் கூறப்படுகின்றது.

***இந்தியாவிடம் ரஷ்யத் தயாரிப்பிலான யுத்த விமானங்களே அதிகம் என்பதுடன், அதனை இயக்கும் வல்லமைமிக்கவர்களாகவும் இந்திய விமானிகள் இருந்தனர்.***

## 4.7 தமிழகத் தலைவர்களின் வகிபாகம

அண்மைக் காலங்களில் இலங்கை-இந்திய உறவில் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் சர்ச்சைகளையும், பரபரப்பினையும் ஏற்படுத்தி வந்தனர். இதனைக் கட்டுப்படுத்த அவ்வப்போது இந்திய மத்திய ஆட்சியாளர்கள் பல உறுதி மொழிகளை வழங்கி வந்தனர்.[69] ஆனால் இவற்றின் உண்மைத்தன்மைகள் சந்தேகத்திற்கிடமாகவே இருந்தன. இந்திய அரசாங்க உயர்மட்டத்திலிருந்து அவ்வப்போது வழங்கப்பட்டு வந்த நியாயப்படுத்தல்களுக்கான சில உதாரணங்களை அவதானிக்க முடிகின்றது. 2004ஆம் ஆண்டு இந்திய பிரதமர் மன்மோகன்சிங் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களில் ஒருவராகிய மக்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமிக்கு இலங்கை இராணுவத்திற்கு, இந்தியா இராணுவ உதவிகளை வழங்காது என்ற உத்தரவாதத்தினை வழங்கியிருந்தார்.[70] ஆனால் இலங்கைக்கு இந்திய இராணுவ உதவிகள் கிடைத்தமை பற்றிய தகவல்கள் வெளிவந்த பின்னர் வை.கோபாலசாமி 2006ஆம் ஆண்டு ஆவணியில் இந்திய பிரதமரைச் சந்தித்து பிரதமர் முன்னர் வழங்கிய உறுதி மொழியை நினைவு கூறியிருந்தார். இதற்கு மன்மோகன்சிங் விளக்கமளிக்கையில் "இலங்கையின் இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கு இந்தியா விரும்பவில்லை இரண்டு கருத்துக்களுக்கு இங்கு இடமில்லை"[71] எனத் தெரிவித்திருந்தார். இதன் கருத்து யாதெனில் இந்தியா, இலங்கை இராணுவத்திற்கு பயிற்சியையோ, இராணுவத் தளபாடங்களையோ, வெடி பொருட்களையோ, ஆயுதங்களையோ வழங்கவில்லை என்பதேயாகும். ஆனால், இந்திய இராணுவ தொழில் நுட்பவியலாளர்கள் வை.கோபாலசாமிக்கு இவ்விளக்கத்தினை இந்திய பிரதமர் கொடுத்தமைக்கு முன்னரோ அல்லது அதற்கு பின்னரோ இராணுவ ராடர்களை இலங்கையில் பொருத்துவதற்கு உதவியிருந்தார்கள். இவ் இராணுவ ராடர்கள் கொழும்பில் கட்டுநாயக்காவிலுள்ள பிரதான விமானப்படைத் தளத்தினையும், இராணுவத்தினையும் பாதுகாப்பதற்கு பெரும் உதவியாக இருந்தன.

2006ஆம் ஆண்டு ஐப்பசியில் இந்திய கடற்படை தளபதி அட்மிரல் அருண் பிரகாஸ் வழங்கிய பேட்டியில் "இந்திய இராணுவம் சிலவகையான ராடர்கள், இலத்திரனியல் யுத்தப் பொருட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், கடற்படையினருக்கான துப்பாக்கிகள் போன்றவற்றை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி அளித்துள்ளது"[72] எனக் கூறியிருந்தார். ஆயினும் இவைகள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய இருப்பதாக இவர் இங்கு குறிப்பிட்டிருக்கவில்லை. இதே பேட்டியில் தொடர்ந்தும் இவர் "தாக்குதல் திறன் கொண்ட ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கக்கூடாது என்ற கொள்கை எதுவும் கிடையாது"[73] எனவும் கூறியிருந்தார். இது ஏற்கனவே வை.கோபாலசாமிக்கு இந்திய பிரதமர் வழங்கிய உறுதிமொழிக்கு முற்றிலும் வேறானதாக அமைந்திருந்தது. தாக்குதல் திறன் கொண்ட ஆயுதங்கள் ஒரு நாட்டினுடைய இராணுவ பலத்தினை அதிகரிக்கின்ற ஒன்று மாத்திரமல்ல எதிரியையும் மக்களையும் காயப்படுத்துகின்ற ஆயுதங்களுமாகும். ஆனால் ஐக்கிய முன்னேற்ற கூட்டமைப்பு தலைவி திருமதி சோனியாகாந்தி தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதியிடம் "பொது மக்களுக்கு எதிராக பயன்படுத்தக் கூடிய ஆயுதங்களையோ அல்லது தளபாடங்களையோ இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்க மாட்டாது"[74] எனத் தெரிவித்திருந்தார்.

தமிழக அரசானது தொடர்ந்தும் இலங்கை இனப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வந்தது. அந்தவகையில் 2006ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்கு சார்பாக பல செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. அவற்றுள் முக்கியமானதாக இலங்கையின் நிலைமைகளை அறிந்து வர உயர்மட்டக் குழுவொன்று அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கையாகும். இக்கோரிக்கை ஆளும் காங்கிரஸ் கட்சியின் தோழமைக் கட்சிகளிடம் இருந்து முன்வைக்கப்பட்டமையினால், இந்திய அரசாங்கம் இதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியிருந்தது. எனவே பாரளுமன்றக் குழுவொன்றை அனுப்புவதாக இருந்தால், தமிழ் நாட்டில் இருந்தும் சிலர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதனால், பிரதமருக்கு நெருக்கமான வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் அனுப்பட்டார். இவரது வருகைக்கான காரணம் அதிகரித்து வருகின்ற வன்முறை காரணமாக கவலை அடைந்துள்ள இந்தியா பதற்றத்தை தணித்தல், தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தல் என்பன கூறப்பட்டிருந்தன. வெளிவிவகாரச் செயலாளருக்கும், அரச தரப்பினருக்கும் இடையில் சுமுகமான முறையில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றது. இலங்கையில் யுத்த நிலைமை ஏற்படுமானால் அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பை பாதிப்பதால் விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது. அதே நேரம் 2008ஆம் ஆண்டு



தமிழக சட்ட சபையில் இலங்கையில் மோதல்களில் ஈடுபட்டுள்ள இரண்டு பிரிவினர்களுக்குமிடையில் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன்வரவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.[75]

இலங்கையில் நடாத்தும் யுத்தத்தைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு விரோதமான நாடுகள் இலங்கையில் காலூன்ற முனைகின்றன. உதாரணமாக பாகிஸ்தான், சீனா, ஈரான் போன்ற நாடுகள் இலங்கை இராணுவத்திற்கு உதவிகளை வழங்கி வந்தன. இராணுவ உதவிகளை இந்தியா தருவதாக இருந்தால் தாம் பெறுவதற்கு தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் கூறிவந்தது. இந்திய எதிர்ப்பு நாடுகளின் உறவு தொடரப்படுமாயின் இந்தியாவின் பிராந்தியப் பலமும், பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம் என இந்தியா நினைப்பதால் இனப்பிரச்சினை தொடர்பில், அந்நாடுகளின் ஆதரவைக் குறைக்க, இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில்

**தாக்குதல் திறன் கொண்ட ஆயுதங்கள் ஒரு நாட்டினுடைய இராணுவ பலத்தினை அதிகரிக்கின்ற ஒன்று மாத்திரமல்ல எதிரியையும் மக்களையும் காயப்படுத்துகின்ற ஆயுதங்களுமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா தலையிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்தன ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் இந்தியாவின் தலையீட்டைக் குறைக்க கடைப்பிடிக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கைகளைப் போலவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களும் பாகிஸ்தான், சீன உறவுகளைக் கொண்டு இந்தியாவின் தலையீட்டைக் குறைக்க முனைந்தார். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசாங்கம் இவ்வாறாக செயற்பட்ட போதும், இந்தியாவுக்கு இருந்த செல்வாக்கினாலும், இலங்கை பிரச்சினை சர்வதேசமயமாக்கப்படாததாலும் இலங்கை இந்தியாவுடன் இணங்கிப் போக வேண்டியிருந்தது.

ஆனால் இன்று இலங்கையில் உள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் யுத்தத்தை ஆதரி-த்ததால் சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்தது. இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான் என்ற சுற்றுவட்டத்தில் தனது வெளிநாட்டுக் கொள்கையை இலங்கை அரசு கடைப்பிடிப்பதனால், சர்வதேச வலைப்பின்னல் ஒன்று உருவாகியது. ஐக்கிய நாடுகள் சபையில் வீற்றோ அதிகாரத்தைக் கொண்ட சீனாவின் நட்பு இலங்கை அரசுக்கு கிடைப்பதால் மேற்குலக சக்திகள் பிரச்சினை ஏற்படும்போது கருத்துக்களை மட்டுமே தெரிவித்தன.

இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவினால் முன்வைக்கப்படும் விடயங்களை விட தனது திட்டங்களையே இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துகின்றது. இது இந்திய இராஜதந்திரிகளைப் போல இலங்கை இராஜதந்திரிகளும் இராஜதந்திரம் மிக்கவர்கள் என்பதை இந்திய இராஜதந்திரிகளுக்கு உணர்த்தியது. இந்நிலையிலேயே 2008ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் ஆர்.கே.நாராயணன தலைமையிலான தூதுக்குழு கொழும்புக்கு விஜயம் செய்தது. இத்தூதுக்குழுவின் வருகையானது இனப்பிரச்சினை விடயத்தில் முக்கியமுடையதாக விளங்கியது. ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அரசியலில் தனது சொந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார். இது இந்தியாவின் அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் முரண்படுவதால், இரு நாடுகளினதும் நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் ஓர் ஒழுங்கைக் காண்பதாகவே இத்தூதுக்குழுவின் வருகை அமைந்திருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நிலைப்பாடுகள் இவ்வாறிருந்த போதும் 2008ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இனப்பிரச்சினை பாரிய நிலைமாற்றத்தை சந்தித்திருந்தது. அதாவது இராணுவத்தினர் உக்கிர மோதலின் மூலம் தரைமார்க்கமாக முன்னேறிக் கொண்டு இருந்தனர். அதிகமான அப்பாவி தமிழ் மக்கள் யுத்தத்தின் மூலம் ஒடுக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் வரையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்தது. மறுபக்கத்தில் தமிழக மக்களின் ஈழ ஆதரவு உச்சமடைந்தது. சகல தரப்பினர்களும் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர். இதன் விளைவாக இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியிலே தீர்வு காணப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தத் தொடங்கியது. எனினும் இது தொடர்பில் முழுமையாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**இராணுவத்தினர் உக்கிர மோதலின் மூலம் தரைமார்க்கமாக முன்னேறிக் கொண்டு இருந்தனர். அதிகமான அப்பாவி தமிழ் மக்கள் யுத்தத்தின் மூலம் ஒடுக்கப் பட்டனர்.**

### 5. உறவுகளைப் பலப்படுத்துவதற்கான உயர்மட்ட செயற்பாடுகள்

வெளிவிகார அலுவலக ஆலோசகர்கள் தலைமையிலான தொடர்ச்சியான உத்தியோக மட்டத் தொடர்புகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இருநாடுகளுக்குமிடையிலான அரச மட்டத்திலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள், மீன்பிடி பற்றிய உத்தியோக மட்டப் பேச்சுக்கள், கடற்படை கரையோர காவல் படை போன்றவைகள் பற்றிய பேச்சுக்கள் முக்கியம் பெற்றிருந்தன.

சுதந்திர வர்த்தகம் தொடர்பான இருதரப்பு உறவுகளுக்கான சட்ட நடைமுறை பற்றிய கட்டமைப்புக்கள், இரட்டைவரியமைப்புக்களைத் தவிர்த்தல் பற்றிய உடன்படிக்கைகள், இருதரப்பு முதலீட்டு பாதுகாப்பும் உடன்படிக்கைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் உயர்த்துதல், விமான சேவைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் சிறியளவிலான பொருளாதாரத் திட்டங்கள், சிறியளவிலான கைத்தொழிலுக்கான கூட்டுறவு, உல்லாசப் பிரயாணம், தகவல் தொழிநுட்பம், வானியல், விவசாயம், கல்வி போன்றவைகள் தொடர்பாக இரண்டு நாடுகளுக்குமிடையிலான சட்ட நடைமுறை பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன. இதற்கான கட்டமைப்புக்கள், உறுதியான பொருளாதார கூட்டு வர்த்தக உடன்படிக்கைகள் 2007 ஆம் ஆண்டு தைமாதம் 29ம் 30ம் திகதிகளில் புதுடெல்லியில் நடைபெற்ற பேச்சுக்களின் ஊடாக உருவாக்கப்பட்டன.[76] இதன்போது மீன்பிடித்துறை தொடர்பான புரிந்துணர்வு, பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டுறவு ஒப்பந்தம், சட்டத்துக்கு முரணான போதைப் பொருள் வியாபாரம், குற்றவியல் சார்ந்த விடயங்களுக்கான சட்ட உதவிகளை இருதரப்பும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தம், குற்றவியல் குற்றவாளிகளை இரு தரப்பினர்களும் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற விடயங்களுக்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன.[77] அதே நேரம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை தனது ஆதரவினையும் தெரிவித்து வருகின்றது.[78]

## 5.1. கச்சதீவு விவகாரமும் மீனவர்களும்

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் கடற்படையினர் தமிழ் நாட்டு மீனவர்களை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்வதாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி, மற்றும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகிய இருவரும் திரும்பத் திரும்ப இப்படுகொலைகளை தடுத்து நிறுத்தும்படி இந்திய அரசாங்கத்தினைக் கேட்டுக் கொண்டாலும், இந்திய மத்திய அரசு இதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுத்திருக்கவில்லை.[79] 2007 ஆம் ஆண்டு தமிழக மீனவர்கள் மீதான படுகொலைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.[80] இது ஏதோ ஒருவகையில் மீனவர் படுகொலைகளை நிறுத்துவதற்கு இந்திய அரசாங்கம் ஆக்கபூர்வமாக செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.கருணாநிதி வழமை போல் தொடர்ந்தும் இது தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருந்தார். பிரதான அரசியல் கட்சிகளாகிய திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளிகள் மக்கள் கட்சி, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, பாரதிய ஜனதாக் கட்சி போன்றன இந்திய அரசாங்கம் இதில் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும் என தொடர்ந்தும் வலியுறுத்தியிருந்தன.

திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதாக் கட்சி இந்திய அரசாங்கத்தின் செயற்பாட்டினை வலியுறுத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தியது. மீனவர்கள் தமது தரப்பிற்கு ஒரு நாள் வேலை நிறுத்தத்திலும், உண்ணா விரதத்ததிலும் ஈடுபட்டனர். இந்நிலையில் இந்திய மத்திய அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததினால், இந்திய கடற்படைத் தளபதி, மற்றும் தமிழ் நாட்டின் கடற்பிராந்திய தளபதி ஆகிய இருவரையும் பயன்படுத்தி அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தது. இவ்வறிக்கையில் "தமிழக மீனவர்கள் மீதான படுகொலை இலங்கை கடற்படையினால் மேற்கொள்ளப்படுவதில்லை பதிலாக, தமிழீழ விடுதலைப் புலிகளால் அல்லது மீனவர்கள் தமக்கிடையில் சண்டையிட்டு ஒருவரை ஒருவர் கொலை செய்யலாம் எனக் குறிப்பிட்டிருந்தது". தமிழ் நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் இவ் அறிக்கையினை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. இலங்கை இராணுவத்திற்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் தொடர்ந்தும் கூறப்பட்டே வந்தன.

அனேக மீனவர்கள் கச்சதீவில் காலம் காலமாக தமக்கிருந்த உரிமையினை வலியுறுத்திக் கேட்டு வந்தனர். ஆயினும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் 1974 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தமும், 1976 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்குமிடையிலான தூதுத் தொடர்புகளின் வழி இலங்கைக்கு கச்சதீவு வழங்கப்பட்டது.[81] தமிழகத்தின் பிராந்தியக் கட்சி-

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் கடற்படையினர் தமிழ் நாட்டு மீனவர்களை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்வதாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எதுவும் 1974, 1976 ஆண்டுகளில் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கடல் எல்லை உடன்படிக்கையினால் மகிழ்ச்சியடைந்திருக்கவில்லை இவ்விடயம் இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலான உறவில் பெரும் சிக்கல் நிலையினைத் தோற்றுவித்திருந்தது.[82]

ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்கள் கச்சதீவில் ஓய்வெடுப்பதற்கும், தமது மீன்பிடி வலைகளை உலர விடுவதற்கும் சென்.அந்தனீஸ் தேவாலயத்தின் வருடாந்த விழாவில் பங்கேற்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.[83] ஆனால் கச்சதீவினை சூழவுள்ள பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு ஒப்பந்தப்படி அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் வழி தமிழ் நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கையின் கடற்படையினரால் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்ததினால் இலங்கை-இந்திய உறவு எரிச்சலடைகின்ற நிலையினையடைந்தது. தமிழக மீனவர்களுக்காக அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்து வந்தமையும், இதற்காக மத்திய அரசாங்கம் மீது அதிக அழுத்தத்தினை வழங்கியமையும் இரு நாட்டின் உறவில் பாரிய தொல்லைகளை கொடுத்திருந்தது. மீனவர் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு கச்சதீவினை மீண்டும் பெற்றுக் கொள்ளுதல் என்பது யதார்த்தமற்ற முடிவாக இருந்தாலும் இந்திய அரசியல் கட்சிகள், குறிப்பாக தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அதிக கவனம் செலுத்துகின்றன.[84]

**எல்லைக்குள் இந்தியாவின் தமிழ் நாட்டு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தல் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கு கூட்டு செயலணிக்குழு உருவாக்கப்பட்டது.**

நீண்ட காலமாக இந்திய மீனவர்கள் கடற்பரப்பில் வழிமாறிச் சென்று இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பது பாரிய பிரச்சினையாக இருந்து வந்தது. ஆயினும் இதனை தீர்ப்பதற்கு எவ்வித யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. மீனவர்கள் தரப்பில் சர்வதேச கடற்பரப்பின் எல்லையினைக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமானதாக இருப்பதாகக் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதனை தீர்ப்பதற்கு இந்தியக் கடற்படை "பூகோள அமைவிட முறைமையை" (Global Positioning System-GPS) ஒவ்வொரு மீன்பிடி படகிலும் பொருத்தும் செயல்முறை அமுல்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கியிருந்தது.[85] பூகோள அமைவிட முறைமை விரைவாகவும், தெளிவாகவும் படகுகளை கடலில் மீனவர்கள் செலுத்துவதற்கும், வேகத்தினை அளவிடுவதற்கும், படகுகள் செல்லும் கடல் அமைவிடத்தினை தீர்மானிப்பதற்குமாக வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. இதற்கான செலவீனத்தினை இந்திய அரசாங்கமும் தமிழ் நாட்டு அரசாங்கமும், பங்கீடு செய்ததுடன், சிறியதொரு பங்களிப்பு மீனவர்களிடமிருந்து பெற்று கொள்ளப்பட்டது. இதற்காக தமிழக அரசு 7.7 கோடி ரூபாவினை செலவு செய்வதற்கு அனுமதியளித்திருந்தது.[86]

மேலும் இலங்கையின் பிராந்திய கடல் நீர் எல்லைக்குள் இந்தியாவின் தமிழ் நாட்டு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தல் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கு கூட்டு செயலணிக்குழு உருவாக்கப்பட்டது.[87] மீனவர்கள் கடல் எல்லை மீறிச் சென்றால் அவர்கள் மீது பலப் பிரயோகம் செய்வதைத் தடுத்தல், மீனவர்களின் மீன்பிடி வள்ளங்கள் பறிமுதல் செய்யப்பட்டால் அவைகளை மிக விரைவாக மீட்டெடுத்து வழங்குவதற்கு ஏற்ற உடன்படிக்கைகளை செயற்படுத்துவதற்கான திட்டத்தினை இக்குழு வடிவமைக்கும். 2006 ஆம் ஆண்டு தைமாதம் கூட்டுச் செயலணிக் குழு கொழும்பில் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. இதன் போது பின்வரும் விடயங்களில் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.[88]

1. இருதரப்பு கடல் எல்லையிலிருந்து 5 மைல் தூரத்திற்குள் மீனவர்கள் அத்துமீறிச் சென்றால் அவர்களை கைது செய்யாமல் தடுப்பதற்கான சாத்தியப்பாடுகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.

2. மனிதாபிமான அடிப்படையில் சிறிய மீன்பிடி வள்ளங்களையும் மீனவர்களையும் விடுவித்தல் பற்றி கருத்திலெடுத்தல்.

3. சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு இரண்டு நாடுகளினதும் கடற்படைகளுக்குமிடையிலான கூட்டுறவினை விரிவுபடுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நாடுகளுக்குமிடையில் நம்பகத் தன்மையான உறவினை வளர்ப்பதற்கு இவைகள் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.2 சேது சமுத்திரத் திட்டம்

இந்தியாவின் சேது சமுத்திரத்திட்டம இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு ஆபத்தானது என்ற நிலைப்பாட்டினால் மிகவும் அதிக கவனத்தை ஈர்த்திருந்தது. இக்கருத்து இலங்கையின் உயர்மட்டத்தினரால் மிகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட இருநாடுகளையும் சேர்ந்த நிபுணத்துவக் குழுக்களுக்கிடையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்துக்களும், முடிவுகளும் பரிமாறப்பட்டன. 2006ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை தரப்பிலிருந்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அப்போது இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என்பதுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இலங்கையின் சுற்றுச் சூழல் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்றும் இந்தியாவினால் உறுதி மொழி வழங்கப்பட்டது. [89]

## 5.3 பொருளாதாரக் கூட்டுறவு

2000ஆம் ஆண்டு பங்குனியில் இருதரப்பு வர்த்தகம், விரைவாக வளர்ச்சியடைந்திருந்தது. 2005ஆம் ஆண்டு 2.025 பில்லியன் அமெரிக்க டொலருக்கு இருதரப்பு வர்த்தகம் வளர்ச்சியடைந்திருந்தது.[90] 2005ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கான ஏற்றுமதி 1.437 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.[91] இதே வருடம் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான ஏற்றுமதி 588 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.[92] இலங்கையின் மொத்த இறக்குமதியில் இந்தியா பெரும் பங்காற்றுகின்றது. ஏறக்குறைய மொத்த இறக்குமதியில் 15%த்தினை இலங்கை இறக்குமதி செய்கின்றது.[93] இலங்கையின் இறக்குமதியில் இந்தியா மூன்றாவது இடத்தினை வகிக்கின்றது. இலங்கையின் முதலீட்டாளர்களில் இந்தியா நான்காவது பெரிய இடத்தினை வகிக்கின்றது. இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஏறக்குறைய 170 எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் திருகோணமலை எண்ணெய் குதத்தினையும் முகாமைத்துவம் செய்கின்றது.[94] தாஜ் கோட்டல், அப்பலோ வைத்தியசாலை (இது அண்மையில் விற்கப்பட்டுவிட்டது). டாட்டா, மற்றும் அசோக் லேலண்ட், ஏயர்ரெல் போன்ற இந்திய முதனிலை வர்த்தக கம்பனிகள் இலங்கையில் செயற்படுகின்றன.[95] "இந்திய-இலங்கை வர்த்தக சம்மேளனமும், கைத்தொழிலும்" என்னும் அமைப்பு சிதம்பரம் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்திய இலங்கைக்கான உறவினை உயர்மட்டத்தில் பேணும் விதத்தில் வாரத்தில் 120 விமான சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைவிட முக்கியமான விடயம் இருதரப்பு பொருளாதார கூட்டுறவாகும். இத்திட்டத்தின் கீழ், 500 மெகா வோட்ஸ மின்சாரம் உற்பத்தி செய்யப்படக் கூடிய நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையம் திருகோணமலையிலும், மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியிலும் இந்தியா கவனம் செலுத்துகின்றது.[96]

## 5.4 அபிவிருத்தி ஒத்துழைப்பு

இந்தியா இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகள் பலவற்றில் முக்கிய பங்காற்றி வருகின்றது. மொத்த அபிவிருத்திக்கான நிதியில் 1/6 பங்கு நிதி கடனாக இந்தியாவினால் வழங்கப்படுகின்றது. இக்கடன் மூன்று வகையான திட்டங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது.[97]

1. மூலதன பொருட்கள், ஆலோசனைச் சேவைகள், உணவு வகைகள் என்பவற்றிற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்
2. 300,000 மெற்றிக் தொன் கோதுமை விநியோகத்திற்கான 31 மில்லியன் அமெரிக்க டொலர்
3. பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவிற்காக 150 மில்லியன் அமெரிக்க டொலர்

இவற்றை விட சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டமைப்பு பணி உதவி திட்டத்தின் கீழ் கொழும்பு-மாத்தறை புகை-

இலங்கையின் இறக்குமதியில் இந்தியா மூன்றாவது இடத்தினை வகிக்கின்றது. இலங்கையின் முதலீட்டாளர்களில் இந்தியா நான்காவது பெரிய இடத்தினை வகிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிரதப் பாதைத் திருத்தப் பணிகளுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்பட்டது.[98] மேலும் இந்தியப் பிரதமர், இலங்கையின் சுனாமிக்குப் பின்னரான புனர்நிர்மாணப் பணிகளுக்காக 100 கோடி இந்திய ரூபாய்கள் நன்கொடையாக வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தார்.[99] "இலங்கைக்கான உதவி" திட்டத்தின் கீழ் பல எண்ணிக்கையிலான அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும் சிறியளவிலான அபிவிருத்தி திட்டங்களாகவே இவைகள் இருந்ததுடன் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் அபிவிருத்தி திட்டங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன.[100]

### 5.4.1 சிறிய அபிவிருத்தி திட்டம்:

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மீனவர்களிற்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டம்

### 5.4.2 சுகாதாரத் திட்டம்:

i. டிக்கோயாவில் 150 படுக்கைகளைக் கொண்ட புதிய வைத்தியசாலையினை நிர்மாணித்தலும் அதற்கான உபகரணங்களை வழங்குதலும்.

ii. திருகோணமலையிலுள்ள வைத்தியசாலையினை தரம் உயர்த்துதல்.

iii. கொழும்பில் கான்சர் வைத்தியசாலையினை புனரமைப்பதற்கு 7.5 மில்லியன் அமெரிக்க டொலர் மானியமாக வழங்குதல்.

iv. பருத்தித்துறையிலுள்ள வைத்தியசாலைக்கு மருந்துகள் வழங்குதல்.

v. அம்பாந்தோட்டை, பருத்தித்துறை வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் இலவசமாக வழங்குதலும், கண் நோய் உள்ள 1500 பேருக்கு கண் சத்திர சிகிச்சை வழங்குதலும் நான்கு பேர் செல்லக் கூடிய அம்புலன்ஸ் வண்டி வழங்குதலும்.

### 5.4.3 கல்வித் திட்டம்

கல்வித் திட்டத்தின் கீழ் இந்தியா பல்வேறு வகையான கல்வி அவிருத்திக்குப் பங்களிப்பு செய்கின்றது.

i. மத்திய மாகாண பாடசாலைகளின் உள் கட்டுமானப் பணிகளுக்கு உதவுதல். இப்பாடசாலையின் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல். நூலகங்களை உருவாக்குதல்.

ii. மகாத்மா காந்தி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல்

iii. புத்தளத்தில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தினை உருவாக்குதல்

iv. இலங்கை தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தின் கீழ் மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்குதல்

## 5.5 சிவில் காவல் துறை அபிவிருத்தி

இத்திட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் 465 இலங்கை காவல் துறை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இதனை விட 400 இலங்கை காவல் துறையினருக்கு பொதுச் சட்டத்தினை எவ்வாறு பேணுவது என்பது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.[101] இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையில் நடைமுறையில் இருக்கும் ஒத்துழைப்பு உடன்பாட்டிற்கு இலங்கை ஏறக்குறைய 400 இலங்கை காவல் துறை அலுவலர்களுக்கு இந்தியாவில் காவல் துறை பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி வழங்கல் ஆரம்பமானது.[102] இவர்களில் 385 இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் தரத்திலுள்ள அலுவலர்களுக்கு குற்றவியல் புலனாய்வு, இணையத்தள குற்றங்கள், வங்கி மோசடிகள் உட்பட்ட குற்றவியல்களை விஞ்ஞான ரீதியாக புலனாய்வு செய்யக்கூடிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் இக்காலத்தில் காவல்துறையில் நாய்கள் மூலமான புலனாய்வுகளை மேற்கொள்ளவும், புலனாய்வு நாய்களை கையாளும் விதம் பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக இந்திய அரசாங்கம் இந்திய ரூபாயில் 20 மில்லியனை அல்லது ஏறக்குறைய 450,000 அமெரிக்க டொலர்களை செலவு செய்ய வேண்டி ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் இதற்கான

*காவல்துறையில் நாய்கள் மூலமான புலனாய்வுகளை மேற்கொள்ளவும், புலனாய்வு நாய்களை கையாளும் விதம் பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வாங்க உடன்பாடு 2005ஆம் ஆண்டு ஆனி மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் கொழும்பு வந்திருந்த போது ஏற்படுத்தப்பட்டிருந்தது.[103]

இலங்கையின் இன முரண்பாட்டிற்குப் புறம்பாக இலங்கை இந்தியா ஆகிய நாடுகள் இரண்டும் தமக்கிடையில் உறவுகளைப் பேணுவதில் அதிக கவனம் செலுத்தியிருந்தன. இதற்காக இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் திரும்பத் திரும்ப நடைபெறுவதும் அவற்றின் பலாபலன்களை அடைவதற்கு காத்திருப்பதும் சாதாரணமாகிவிட்டிருந்தது. பெருமளவிற்கு இந்திய மீனவர்கள் இலங்கை கடல் நீர்ப்பரப்பிற்குள் அத்து மீறி மீன்பிடிக்கும் விவகாரம் இரு நாடுகளினதும் உறவில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தி வந்ததாயினும் 2006ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையில் எட்டப்பட்டிருந்த உடன்பாடு இப்பிரச்சினைகளை தீர்ப்பதில் கணிசமான அளவு பங்களிப்பு செய்யும் என நம்பப்படுகின்றது. இதேபோன்று இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வர்த்தக கூட்டுச் செயற்பாடுகளிலும் புரிந்துணர்வுகளுடனான செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கைக்கான அபிவிருத்தி திட்டங்களை பூரணப்படுத்துவதில் இந்தியா பாரிய பங்களிப்பினை வழங்க முடியும் என்ற எதிர்பார்ப்பும் பெருமளவில் வெற்றியளித்து வருகின்றது என்றே கூற முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையின் சட்டம் ஒழுங்கினைப் பேணுவதில் இந்தியா காட்டும் அக்கறையும், அதற்காக இலங்கையின் காவல் துறையினை புனரமைக்க எடுக்கும் நடவடிக்கைகளும் இலங்கைஇந்திய உறவில் பாராட்டப்பட கூடிய விடயங்களாகும்.

## 5. தொகுப்புரை

இந்தியா தனது அயல் நாடான இலங்கையை தனது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கவே வரலாற்றுக் காலம் முதல் முயன்று வருகின்றது. இலங்கை இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் உடைய நாடு என்ற வகையில் இந்தியாவுடனான உறவினை மிகவும் தந்திரோபாயமாகக் கையாண்டு வந்திருக்கின்றது. இதனை கடந்தகால இலங்கை-இந்திய உறவைப் பரிசீலித்தபோது தெளிவாகியது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை-இந்திய உறவானது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் சீரானதாகக் காணப்படவில்லை. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பின்பற்றிய மேலைத்தேய சார்பான கொள்கையே காரணமாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சிறப்பான நிலையில் காணப்பட்டன. இக்காலகட்டத்தில் இந்தியா பின்பற்றிய வெளியுறவுக் கொள்கையையே இலங்கையும் அதிகளவில் பின்பற்றியது. இந்திய-சீன யுத்தத்தில் இலங்கையின் நிலை தொடர்பான சில கசப்புக்களைத் தவிர இலங்கை-இந்திய உறவுகள் சுமுகமானதாகவே காணப்பட்டன. இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டியது இலங்கை இந்தியாவுக்கு சார்பான கொள்கையை பின்பற்றினாலும் இந்தியாவுக்கு முழுமையாக பணிந்து விடவில்லை. ஆனால் இக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையோ அல்லது எதிரான கொள்கையையோ பின்பற்றாததால் இந்தியாவும் சுமுமான உறவுகளையே இலங்கையுடன் பேணியது.

1977 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் இலங்கை-இந்திய உறவில் அதிக உச்ச விரிசல் நிலையும், அதே போல் பல்வேறு சமரசப் பேச்சுவார்த்தைகளின் பயனாய் சுமூகமான நிலையும் காணப்பட்டது. இது புவியல் ரீதியாக அண்மையில் உள்ள இலங்கையும் இந்தியாவும் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு வாழ முடியாது என்பதனை எடுத்துக் காட்டியது. இக்காலப்பகுதியில் இலங்கை-இந்திய உறவுகள் குறிப்பிட்டு பேசக்கூடியதொன்றாகவே இருந்தது. இந்தியாவுக்கு எதிரான கொள்கையை இலங்கை பின்பற்றாதவரை இலங்கையுடன் சுமுகமான உறவுகளைப் பேண இந்தியா விரும்பியது. மாறாக தனக்கு எதிரான கொள்கையை பின்பற்றுமானால் ஏதாவது புற நிர்ப்பந்-

**இந்தியா தனது அயல் நாடான இலங்கையை தனது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கவே வரலாற்றுக் காலம் முதல் முயன்று வருகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை கொடுத்து தனது வழிக்கு கொண்டு வரும் முயற்சிகளிலேயே இந்தியா ஈடுபட்டது. ஏனெனில் பொதுவாக இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலங்களில் வெளி வல்லரசுகள் தென்னாசியப் பிராந்தியத்திற்குள் நுழையக் கூடிய நிலை இருந்தது.

1990ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதனைத் தொடர்ந்து தேசிய முன்னணியின் சார்பில் விஸ்வனாத் பிரதாப் சிங் தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டது. அவரின் ஆட்சிக் காலத்தில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் சுமுக நிலைக்கு வரத்தொடங்கின. ஏனெனில் இவர் இந்திய இராணுவத்தினை இலங்கையில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டதோடு, இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதனையும் தவிர்த்துக் கொண்டார். 1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடுவதனை முற்றாக விலக்கிக் கொண்டது. 1991ஆம் ஆண்டு காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. தவிர தமிழ் நாட்டு முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா பதவியேற்றுக் கொண்டார். ராஜீவ் கொலைக்கு காரணம் எனக் கருதிய விடுதலைப் புலிகளுடன் கடுமையான போக்கினை தமிழக அரசும், இந்திய அரசும் கடைப்பிடிக்கலாயிற்று. ராஜீவ் காந்தியின் கொலை இலங்கை-இந்திய உறவை மீண்டும் பாதித்தது. 1991ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடக்கவிருந்த சார்க் உச்சிமாநாடு, இந்தியா பங்கேற்காத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் 1992ஆம் ஆண்டு இந்திய உயர் நீதிமன்றம் புலிகள் இயக்கத் தலைவருக்கு எதிராக பிடிவிராந்து பிறப்பித்தது. அதேபோல புலிகளின் நடமாட்டத்தையும் இந்தியா கட்டுப்படுத்தியது. இது இலங்கை-இந்திய உறவை சீர்ப்படுத்த உதவியது எனலாம்.

**1993ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ கொலை செய்யப்பட்டு டி.பி.விஜயதுங்க பதவியேற்ற போது இலங்கை-இந்திய உறவில் ஒரு சுமுகமான நிலை பேணப்பட்டது.**

1993ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ கொலை செய்யப்பட்டு டி.பி.விஜயதுங்க பதவியேற்ற போது இலங்கை-இந்திய உறவில் ஒரு சுமுகமான நிலை பேணப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உலக ரீதியாக ஏற்பட்ட மாற்றமும் இலங்கை-இந்திய உறவின் சுமூக நிலைக்கு உதவியது. சோவியத் யூனியன் சிதைவடைந்து பனிப்போர் முடிவுக்கு வந்தமையே அம்மாற்றமாகும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் வளர்ச்சியினால் அமெரிக்காவும் பாகிஸ்தானுடனான தனது உறவினைக் குறைத்து இந்தியாவுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டது. இத்தகைய போக்கினால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரிய அமெரிக்க சார்பான நிலைப்பாடு இந்தியாவிற்கு பெரிய அச்சுறுத்தலாக அமையவில்லை. 1994-2005 வரை இலங்கையினை ஆட்சி செய்த சந்திரிக்கா குமாரணதுங்க திறந்த பொருளாதாரக் கொள்கையினை பின்பற்றினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரிய பொருளாதாரக் கொள்கையினைக் கைவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையினையே சந்திரிக்கா குமாரணதுங்க பின்பற்றினார். ஐக்கிய அமெரிக்கா போன்ற மேலைத்தேய நாடுகளுடனும், இந்தியாவுடனும் சம தோழமைக் கொள்கையினைப் பின்பற்றினார். இக்காலகட்டத்தில் இந்திய அமெரிக்க உறவுகள் சீராக இருந்தமை இவருக்குச் சாதகமாகவேயிருந்தது.

இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சி இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழகக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைந்திருந்ததால் இலங்கை-இந்திய உறவு பாதிப்படையுமா என்ற அச்சம் இலங்கைக்கு இருந்தாலும் சில விட்டுக் கொடுப்புக்களையும் நெகிழ்வுப் போக்குகளையும் கையாண்டு அதனை சரி செய்து கொண்டது. இக்காலகட்டத்தில் இந்தியா மேற்கொண்ட அணுகுண்டு பரிசோதனையை இலங்கை ஆதரித்தது. ஆயினும் இலங்கை-இந்திய உறவில் கார்கில் போரானது தாக்கத்தினைச் செலுத்தியது எனலாம். காரணம் பல்வேறு உலக நாடுகளும் பாகிஸ்தானை கண்டித்த போதிலும் இலங்கை நடுநிலைமை வகித்தமை இந்தியாவிற்கு அதிருப்தியைக் கொடுத்திருந்தது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அதிகார சமநிலையானது இயங்கியல் தன்மை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப வளைந்து கொடுக்கின்ற போக்கைக் கொண்டதாகும். இந்தியா தனது நேர்த்தியான தந்திரோபாயத்தினூடாக வல்லரசாக வளர்ந்து வருவதுடன் தனது அதிகாரத்தினையும் நிலை நிறுத்தி வருகின்றது. அராபியக் கடல், இந்துசமுத்திரத்தின் மேற்கு பிராந்தியம் ஆகியவற்றின் புவிசார் அரசியல் முக்கியத்துவம் இந்தியாவின் 8.13 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொழில் முயற்சியினைத் தீர்மானிக்கின்றது. சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் முக்கோண வடிவில் அரேபிய கடலில் செலுத்தும் உறுதியான செல்வாக்கும் ஆதிக்கமும் அரேபியக் கடலில் புவிசார் தந்திரோபாயத்தினை வெளிப்படுத்திக்காட்ட போதுமானதாகும்.

இந்தியா 2005 ஏப்ரல் 11 தொடக்கம் தந்திரோபாய கூட்டாளியாக சீனாவை ஏற்றுக் கொள்ளத் தொடங்கியதுடன் 2005 ஜூன் 29 திகதி அமெரிக்காவுடன் 10 வருடங்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுக் கொண்டது. சீனாவை தந்திரோபாய கூட்டாளியாக மாற்றிக் கொண்டு அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டும் தன்னை நீண்ட காலத்தில் வல்லரசாக வளர்ப்பதற்கு ஏற்றவகையில் "கடல் பறவை" (Sea Bird) திட்டத்தினை வரைந்து செயற்படுத்தத் தொடங்கியது. கடல் பறவை திட்டம் 1980 இந்தியாவினால் உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டம் அடுத்தடுத்து இருக்கக்கூடிய இரண்டு புவிசார் அரசியல் முக்கோண வடிவிலான திட்டம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று அமெரிக்கா, இந்தியா, சீனா உறவினை ஏற்படுத்தி வளர்ப்பது. இரண்டாவது சீனா, பாகிஸ்தான், இந்திய உறவினை ஏற்படுத்தி வளர்ப்பது. இது ஓர் சிக்கலான புவிசார் அரசியல் கூட்டமைப்பாகும். ஏனெனில் இந்தியா சீனாவுடனோ அல்லது அமெரிக்காவுடனோ இலகுவில் கூட்டாளியாகக் கூடியதொரு நாடாகும். இந்தியாவினைப் பொறுத்தவரை தனது சொந்த தந்திரோபாயத்தினூடாக இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அதிகாரத்தினையும் நலனையும் பெற்றுக் கொண்டு வல்லரசாக மாறுவதே அதன் நோக்கமாகும்.

மறுபக்கத்தில் சீனா தென்னாசிய மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியங்களில் முத்துமாலைத் தொடர் மூலோபாயத்தினைப் பயன்படுத்தி தனது செல்வாக்கை செலுத்துவதுடன், பாதுகாப்பான கடல்வழி தொடர்பாடல்களையும் பேணி வருகின்றது. சீனாவின் வல்லரசாகும் கனவிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான சக்தி மூலங்களைப் பெறுவதற்கும் சீனா முத்துமாலை மூலோபாயத்தினை பயன்படுத்தி



சீனாவின் ஹய்நான்தீவு, பங்களாதேஷ்சில் சிற்றக்கொங் மியன்மாரில் சிற்வி, பாகிஸ்தானில் குவாடர், மாலைதீவில் மோரோதீவுக்கூட்டங்கள், எகிப்தில் சயிற் துறைமுகம், ஈரானில் பன்டர் அபாஸ் என பல தளங்களை அமைத்துள்ளது. இதன் தொடர்ச்சியாக இலங்கை 2000ஆம் ஆண்டு சீனாவின் ஹான்கோ நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் முத்துராஜவலை கொலன்னாவை எண்ணெய் குதங்களை அமைத்துப் பராமரித்து வருகின்றதுடன் சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்க ஆட்சிக்காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் பற்றி கலந்துரையாடப்பட்டு, தற்போதய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. இதனை இந்தியா தனது நாட்டிற்கு ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே கருதுகின்றது.


மேலும் இலங்கையில் நிகழும் உள்நாட்டுப் போருக்கான ஆயுத தளபாடங்களையும் சீனா விநியோகித்தது. இது அமெரிக்கா, இந்தியா, யப்பான் போன்ற நாடுகளுக்கு

> ***மறுபக்கத்தில் சீனா தென்னாசிய மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியங்களில் முத்துமாலைத் தொடர் மூலோபாயத்தினைப் பயன்படுத்தி தனது செல்வாக்கை செலுத்துவதுடன், பாதுகாப்பான கடல்வழி தொடர்பாடல் களையும் பேணி வருகின்றது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மீது மிகுந்த அக்கறையினையும் கவனத்தினையும் ஏற்படுத்தியது. புதுடில்லியில் நடைபெற்ற இந்திய - ஐக்கிய அமெரிக்க பாதுகாப்பு கூட்டு வேலைக் குழுவின் கூட்டத்தில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படை விஸ்தரிப்பின் வளர்ச்சி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் மடக்கஸ்கார், பொலிவியாஸ், சிச்ஏல்ஸ், மாலைதீவு, இலங்கை, வங்காளதேசம், மியன்மார் போன்ற நாடுகளுடன் சீனா படிப்படியாக இராணுவ கடற்பிராந்திய தொடர்புகளை ஏற்படுத்தி வருவதும் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. இது இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் உரிமையாளர்கள் யார் என்பதையும் தத்தமது நலன்களை இப்பிராந்தியத்தில் எவ்வாறு பாதுகாப்பது என்பதையும் தீர்மானிக்கும் போராட்டத்தினை உருவாக்கியுள்ளது. இந்தியா தனது நலன் அதிகாரம் என்பவற்றை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிலை நிறுத்துவதற்கு மாறும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப தனது புவிசார் அரசியல் தந்திரோபாயத்தினை வகுத்து செயற்பட்டு வருகின்றது. இப்பின்னணியிலேயே இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவினைப் பார்க்க வேண்டும்.



இலங்கையில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு விரோதமான நாடுகள் இலங்கையில் காலூன்ற முனைகின்றன. பாகிஸ்தான், சீனா, ஈரான் போன்ற நாடுகள் இலங்கைக்குத் தேவையான இராணுவ உதவிகளை வழங்குவதனூடாக இதனைச் சாதிக்க முயலுகின்றன. இந்தியாவும் இராணுவ உதவிகளைத் தருவதாக இருந்தால் தாம் பெறுவதற்கு தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் கூறி வந்தது. இந்திய எதிர்ப்பு நாடுகளின் உறவினை இலங்கை தேடுமாயின் இந்தியாவின் பிராந்தியப் பலமும், பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம். எனவே இலங்கையின் உள்நாட்டுப் போரில் தனது பகைமை நாடுகளின் ஆதரவையும், செல்வாக்கையும் குறைக்க இலங்கையின் உள்நாட்டுப் போரில் இந்தியா மீண்டும் புதிய வடிவில் தலையிட வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தலையீடு இலங்கை இராணுவத்தை பலப்படுத்துவதாகவேயிருந்தது. இலங்கை இராணுவத்திற்கான பாரிய பயிற்சிகள் யாவும் இந்திய இராணுவத்தினால் வழங்கப்பட்டன. ஏறக்குறைய 53% இலங்கை இராணுவத்தினர்களுக்கு இந்தியா பயிற்சி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அண்மைக் காலத்தில் இந்தியாவினால் இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்ட பயிற்சிகளில் இது மிகவும் கணிசமான தொகை எனவும் கூறப்படுகின்றது.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளால் சேதமாக்கப்பட்ட பலாலி விமான நிலைய ஓடு பாதை இந்தியாவின் நிதி உதவிகளுடன் திருத்தம் செய்யப்பட்டது. இலங்கையின் கோரிக்கைக்கு இணங்க இந்திய இவ்விமானங்கள் அடையாளப்படுத்திக் காட்டக்கூடிய ராடர்களை இலங்கை இராணுவத்திற்கு வழங்கியிருந்ததுடன் இதற்கான தொழிநுட்பவியலாளர்களையும் வழங்கியிருந்தது. அத்துடன் ஆறு பேர்களைக் கொண்ட இலங்கை விமானப் படை ஆளனியினர் இந்தியாவின் சண்டிகாரிலுள்ள விமானப்படைத் தளத்தில் மிக்-27 யுத்த விமானத்தினை இயக்கும் பயிற்சியைப் பெற்று வெளியேறியிருந்தனர்.[24] இதற்கு முதலும் இவ்வாறு இரண்டு தொகுதி இலங்கை விமானப்படை ஆளணியினருக்கு இந்தியா பயிற்சியை வழங்கியிருந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்தன ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் இந்தியாவின் தலையீட்டைக் குறைக்க இலங்கை கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கைகளைப் போலவே, ஜனாதிபதி மஹிந்த ராஜ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்ஸ அவர்களும் பாகிஸ்தான், சீனாவுடனான தனது உறவுகளைப் பயன்படுத்தி இந்தியாவின் தலையீட்டை குறைக்க முனைந்தார். ஜே.ஆர்.-ஜெயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசாங்கம் இவ்வாறாக செயற்பட்டபோதும் இந்தியாவுக்கு இருந்த செல்வாக்கினாலும் இலங்கை பிரச்சினை சர்வதேச மயமாக்கப்படாததாலும் இலங்கை இந்தியாவுடன் இணங்கிப் போக வேண்டியிருந்தது. ஆனால் இன்று இலங்கையில் உள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் யுத்தத்தை ஆதரிப்பதால் சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்துள்ளது. இலங்கை அரசு, இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான் என்ற சுற்றுவட்ட ரீதியில் தனது வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதனால் சர்வதேச வலைப்பின்னல் ஒன்று உருவாகியது. ஐக்கிய நாடுகளின் வீற்றோ அதிகாரத்தைக் கொண்ட சீனாவின் நட்பு இலங்கை அரசுக்கு கிடைப்பதால் மேற்குலக சக்திகள் பிரச்சினை ஏற்படும்போது கருத்துக்களை மட்டுமே தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவினால் முன்வைக்கப்படும் விடயங்களை விட தனது திட்டங்களையே அமுல்படுத்துகின்றது. இது இந்திய இராஜதந்திரிகளைப் போல இலங்கை இராஜதந்திரிகளும் இராஜதந்திரம் மிக்கவர்கள் என்பதை இந்திய இராஜதந்திரிகளுக்கு உணர்த்தியுள்ளது. இந்நிலையிலேயே 2008ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் ஆர்.கே.நாராயணன் தலைமையிலான தூதுக்குழு கொழும்புக்கு விஜயம் செய்தது. இத்தூதுக்குழுவின் வருகையானது இனப்பிரச்சினை விடயத்தில் முக்கியம் உடையதாக விளங்கியது. ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அரசியலில் தனது சொந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார். இது இந்தியாவின் அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் முரண்படுவதால் இரு நாட்டு நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் ஓர் ஒழுங்கைக் காண்பதாகவே இத்தூதுக்குழுவின் வருகை அமைந்திருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நிலைப்பாடுகள் இவ்வாறிருந்த போதும் 2008ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இனப்பிரச்சினை பாரிய நிலைமாற்றத்தை சந்தித்திருந்தது. இலங்கை இராணுவம் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் இராணுவ உதவியுடன் வன்னிப் பெருநிலப்பிரதேசத்தில் தரைமார்க்கமாக முன்னேறி பூரணமாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அதிகமான அப்பாவி தமிழ் மக்கள் யுத்தத்தின் மூலம் கொல்லப்பட்டும், அகதிகளாக்கப்பட்டுமுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் வரையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்தது.


இலங்கையின் இன முரண்பாட்டிற்குப் புறம்பாக இலங்கை இந்தியா ஆகிய நாடுகள் இரண்டும் தமக்கிடையில் உறவுகளைப் பேணுவதில் அதிக கவனம் செலுத்தியிருந்தன. இதற்காக இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் திரும்பத் திரும்ப நடைபெறுவதும், அவற்றின் பலாபலன்களை அடைவதற்கு காத்திருப்பதும் சாதாரணமாகிவிட்டிருந்தது. பெருமளவிற்கு இந்திய மீனவர்கள் இலங்கை கடல் நீர்ப்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடிக்கும் விவகாரம் இரு நாடுகளினதும் உறவில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தி வந்ததாயினும், 2006ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையில் எட்டப்பட்டிருந்த உடன்பாடு இப்பிரச்சினைகளை தீர்ப்பதில் கணிசமான அளவு பங்களிப்பு செய்யும் என நம்பப்படுகின்றது.

இதேபோன்று இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வர்த்தக கூட்டுச் செயற்பாடுகளிலும் புரிந்துணர்வுகளுடனான செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கைக்கான அபிவிருத்தி திட்டங்களை பூரணப்படுத்துவதில் இந்தியா பாரிய பங்களிப்பினை வழங்க முடியும் என்ற எதிர்பார்ப்பும் பெருமளவில் வெற்றியளித்து வருகின்றது என்றே கூற முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையின் சட்டம், ஒழுங்கினைப் பேணுவதில் இந்தியா காட்டும் அக்கறையும், அதற்காக இலங்கையின் காவல் துறையினைப் புனரமைக்க எடுக்கும் நடவடிக்கைகளும் இலங்கை-இந்திய

**இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவினால் முன்வைக் கப்படும் விடயங்களை விட தனது திட்டங்களையே அமுல்படுத்து கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவில் பாராட்டப்படக் கூடியதாகும். பௌதீக ரீதியாகவும் வரலாறு, சமயம், கலாசாரம், ஒருமித்ததன்மை போன்றவற்றுள் ஒன்றாக கட்டுண்டுள்ள இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு கண்டு உறவினைப் பலப்படுத்துவதில் நம்பிக்கை கொண்டுள்ளன.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்துள்ளமை இலங்கையில் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கு பிரதான காரணமாகும். மேலும், வர்த்தக மற்றும் எண்ணெய் கொண்டு செல்லும் கப்பல்களின் கடல்வழிப் போக்குவரத்துக்கான முக்கிய பகுதியாக இப்பிராந்தியம் விளங்குகின்றது. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, யப்பான் போன்ற நாடுகள் தமது அரசியல், பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கும் இக்கடல் பிராந்தியமே முக்கியமாக இருக்கின்றது. வரலாற்றுக் காலம் தொட்டு கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளது. இதனால் காலனித்துவ காலத்தில் ஐரோப்பிய செல்வந்த, கைத்தொழில் நாடுகளின் தந்திரோபாய நாடாக இலங்கை கருதப்பட்டது. இலங்கையினை யார் கட்டுப்படுத்தவார்களோ அல்லது செல்வாக்கிற்குட்படுத்துவார்களோ அவர்களால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தை கட்டுப்படுத்த முடியும். இந்துசமுத்திரப் பிராந்தியத்தை யார் கட்டுப்படுத்துவார்களோ அவர்களால் ஆசியாவையும், முழு உலகத்தினையும் கட்டுப்படுத்த முடியும்.

**இருபத்தோராம் நூற்றாண்டில் இந்து சமுத்திரம் தான் ஏனைய ஏழு சமுத்திரங்களின் திறவு கோலாக விளங்குவதுடன் அதுவே உலகின் தலை விதியையும் தீர்மானிக்கும்.**

இருபத்தோராம் நூற்றாண்டில் இந்துசமுத்திரம் தான் ஏனைய ஏழு சமுத்திரங்களின் திறவு கோலாக விளங்குவதுடன் அதுவே உலகின் தலை விதியையும் தீர்மானிக்கும். எனவே இதனை விளங்கிக் கொண்டே இரு நாடுகளும் தமக்கிடையிலான உறவினை பேணவும், மதிக்கவும் முயற்சிக்க வேண்டும். இந்தியாவின் அயல் நாடுகளில் ஏற்படும் அசாதாரண நிலைகள் அல்லது அரசியல் ஸ்திரமின்மைகள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எப்போதுமே ஆபத்தானவை அல்லது அச்சுறுத்தலானவை என்பது இந்தியாவின் மாற்ற முடியாத கொள்கையாகும். அயல் நாடுகளின் இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் என்பவற்றிற்கு மேலாக தனது தேசிய நலனிலேயே இந்தியா முழுமையான கவனம் செலுத்தி வருகின்றது. இதற்காக அயல் நாடுகள் மீது இராணுவரீதியான நடவடிக்கைகளைக் கூட இந்தியா மேற்கொண்டிருந்தது. பூகோளரீதியான அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய தேவை இலங்கைக்கு உள்ளது. இந்தியாவின் பாகாப்பிற்கு அச்சுறுத்தலாக இலங்கையின் இதர நாடுகளுடனான உறவு இருக்காத வரையில்தான் இந்தியா இலங்கையின் இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் என்பவற்றை மதித்து நடக்கும்.

### பரிந்துரைகள்

1. இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன், தூர இலக்கு ஒன்றினை அடைவதற்கான வழிமுறைகளையும் நெறிப்படுத்தி வருகின்றனர். ஆட்சி மாற்றங்கள் இந்தியாவின் தூர இலக்கினை சிதைப்பதோ, மாற்றுவதோ கிடையாது. இப்பண்பினை இலங்கையில் அவதானிக்க முடியவில்லை. இலங்கையிலும் இவ்வாறான அரசியல் காலாசாரம் உருவாக்கப்படுதல் அவசியம்

2. இலங்கை ஆட்சியாளர்கள் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தினையும், இந்தியாவின் பிராந்திய நலன், பிராந்திய வல்லாதிக்க ஆசை என்பவற்றை விளங்கி அல்லது ஏற்றுக் கொண்டு கொள்கையை உருவாக்க வேண்டும். கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் இந்திய விரோதப்போக்கினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆட்சியாளர்கள் கொண்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. இப்பண்பு மாற்றப்பட்டு இலங்கை இந்தியாவுடன் இணங்கி அல்லது அனுசரித்து செல்லுதல் வேண்டும்.

3. இலங்கையின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு இந்தியா வழங்கக் கூடிய பங்களிப்பு அதிகமானதாகும். இதனை இலங்கை ஏற்றுக் கொண்டு செயற்படுதல் வேண்டும். இலங்கையின் துரித பொருளாதார அபிவிருத்தி அடையப்பட வேண்டுமாயின் இலங்கையின் உள்நாட்டு முரண்பாடுகள் களையப்பட வேண்டும். இலங்கையர் என்ற பற்றுதலோடு சமத்துவமாக சகல இனங்களும் பேணப்பட வேண்டும். இதன் மூலம் உள்நாட்டு முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டு இலங்கையின் உள்விவகாரங்களில் பிற நாடுகளின் தலையீடுகளைக் குறைக்கலாம். இது இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான உறவுகளை சிறப்பாக பேண உதவும்.

4. இலங்கை இந்திய நாடுகளுக்கிடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகள் பலப்படுத்தக்கூடிய செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். இலங்கையில் மின்சார புகையிரத சேவை, பெருந்தெருக்களில் மேம்பாலம் அமைத்தல், தகவல் தொழிநுட்ப பரிமாற்றம் போன்றவற்றை அபிவிருத்தி செய்ய இந்தியாவின் உதவி பெறப்படுதல் பொருத்தமானதாகும். இந்தியாவின் அணுஉலையைப் பயன்படுத்தி மின்சாரத்தினை இலங்கை பெற்றுக் கொள்வதன் மூலம் இலங்கையில் நிலவும் மின்சார தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும். இந்தியா மேற்கொண்டு வரும் சிறியரக அபிவிருத்திக்கான உதவியை விட பாரிய பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய உதவி பெறப்படுதல் வேண்டும்.

5. இந்தியா தனது உற்பத்தி பொருட்களை இலங்கையில் சந்தைப்படுத்துவதுடன் நின்று கொள்ளாமல் இவ் உற்பத்தி பொருட்களை இலங்கையுடன் இணைந்து உற்பத்தி செய்ய முடியும். இலங்கையில் இதற்கான முதலீட்டினை செய்வதன் மூலம் குறைந்த விலையில் உற்பத்தி பொருட்களை இலங்கையர்கள் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். மேலும் இலங்கையர்க்கான தொழில் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்தியாவின் பிரபல மோட்டார் நிறுவனங்களாகிய டாட்டா, அசோக்லேலண்ட், மாருதி, பஜாஜ், டிவிஎஸ் போன்றன இவ்வாறு தமது உற்பத்தி முயற்சிகளை இலங்கையில் ஆரம்பிக்க முடியும்.

6. மீனவர்கள் பிரச்சினையினை இரு தரப்பினரும் சிறப்பான புரிந்துணர்வுடன் தீர்க்க முயற்சிக்க வேண்டும். மிகவும் குறுகிய பாக்கு நீரிணை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதற்காக இரு நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட குழு உருவாக்கப்பட்டு அவர்களின் கண்காணிப்பில் இது மேற்பார்வை செய்யப்படலாம். கச்சதீவு தொடர்பாக மீண்டெழும் பிரச்சினைக்கு இரு தரப்பு கலந்துரையாடல்களை நடாத்தி புரிந்துணர்வுடன் செயற்பட முடியும்.

7. இரு நாடுகளுக்கிடையிலான வரலாற்று கலை கலாசார உறவுகளைப் பேணக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டும். இரு நாட்டு கலைகளுக்கும், கலாசாரத்துக்குமிடையிலான ஒருமித்த தன்மைகள் இனங்காணப்பட்டு அவைகள் வளர்க்கப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமாயின் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையிலான உறவுகள் ஸ்திரத்தன்மையடைந்து வலுவடையக்கூடியவாய்ப்புக்கள் உள்ளன.

**இந்தியா தனது உற்பத்தி பொருட்களை இலங்கையில் சந்தைப்படுத்துவதுடன் நின்று கொள்ளாமல் இவ் உற்பத்தி பொருட்களை இலங்கையுடன் இணைந்து உற்பத்தி செய்ய முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1 யோதிலிங்கம் சி.அ., 2000, **இலங்கையின் இனக்குழும அரசியல்,** மூன்றாவது மனிதன் வெளியீட்டகம், கொழும்பு, ப.49.

2 மேற்படி., ப 50.

3 Mendis.V.L.B., 1983, **Foreign Relations of Sri Lanka**, Tisara prakasakayo Ltd, P.389.

4 மேலுள்ளபடி யோதிலிங்கம் சி.அ., 2000, ப.50.

5 இது தொடர்பாக அமெரிக்காவின் படைத்துறையைச் சேர்ந்த லெப் கேணல் கிறிஸ்தோபர் ஜே.பெர்ஸர் 2006ஆம் ஆண்டு மூலோபாய கற்கை நெறிகளுக்கான நிறுவனத்திற்கு எழுதிய ஆய்வுக் கட்டுரையில் கூறியுள்ளார். பார்க்க இவ் இணையத்தளத்தினை http://www.tamilnation.org/intframe/indian_ocean/070716indian_ocean.htm

6 இவைகள் பற்றிய தகவல்கள் இவ் இணையத்தளத்திலுள்ளது http://geography.about.com/library/cia/blcindian.htm

7 உதயன்,விஜயன், 1987, இந்து மகா சமுத்திரமும் இலங்கை இனப்பிரச்சினையும், ரோசா லக்சம்பர்க் படிப்பு வட்டம், சென்னை, ப.,24

8 மேற்படி, ப.,29

9 மேலதிக தகவல்களுக்குப் பார்க்க http://www.geocities.com/siafdu/20.html

10 பார்க்க இவ் இணையத்தளத்தினை http://www.tamilnation.org/intframe/indian_ocean/060701string_of_pearls.htm

11 பார்க்க இவ் இணையத்தளத்தினை http://www.tamilnation.org/intframe/indian_ocean/070716indian_ocean.htm

12 Ibid

13 Ibid

14 Ibid

15 பார்க்க இவ் இணையத்தளத்தினை http://www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm

16 Ibid

17 Ibid

18 Op-cit http://www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm

19 http://www.globalsecurity.org/military/world/india/images/kadamba_aerial_indiannavy2.jpg

20 Op-cit http://www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm

21 Ibid

22 Ibid

23 மேற்படி., ப.51.

24 Kumar Rupesinghe, 1998, **Negotiating Peace in Sri Lanka**; **Efforts, Failures and Lessons,** London: Internatoinal Alert, P.100.

25 மேலுள்ளபடி யோதிலிங்கம் சி.அ., 2000, ப.52.

26 மேலுள்ளபடி யோதிலிங்கம் சி.அ., 2000, ப.55

27 மேற்படி

28 Jehan Perera Indo-Lanka Relations –Recent Trends,பார்க்கhttp://www.ifa.org.np/pdf/prc/jehanperera.pdf

29 மனோகரன் ஆ.க., 2008, **இலங்கை தேசிய இனமுரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புக்களும் ஒரு வரலாற்றுப் பார்வை 1948-2007,** தி பார்க்கர் வெளியீட்டகம், சென்னை, ப.324.

30 பார்க்க பார்த்தசாரதியின் **'பின்னிணைப்பு C' இன் சரத்து 5**

31 Kodikara.S.U., 1982, **Foreign Policy of Sri Lanka; A third world perspective,** Chanakya publishers, Delhi, P.41.

32 **Indo – Sri Lanka Agreement to Establish Peace and Normalcy in Sri Lanka,** Signed between the Prime Minister of India and the President of Sri Lanka, 1987, July 29.

33 Letters Exchanged between Priminister of India and President of Sri Lanka,1987

34 மேலுள்ளபடி, உதயன் விஜயன், 1987, ப.98.

35 Surendra Nath Kaushik, Rajan Mohan and Ramakant (Ed), 1995,**India and South Asia,** South Asian publishers pvt Ltd, New Delhi,PP.,241-243.

36 மேலுள்ளபடி மனோகரன் ஆ.க., 2008, ப.345.

37 மேலுள்ளபடி உதயன் விஜயன், 1987, ப.99.

38 Mohamed Iqbal, 1993, **Indo-Sri Lanka Relations**, Regional studies, P.80.

39 மேலுள்ளபடி மனோகரன் ஆ.க., 2008, ப.411.

40 லயனல் குருகே, 2004, **இலங்கையின் தேசிய இனத்துவ பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்,** மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு, கொழும்பு, ப.59.

41 மேலுள்ளபடி யோதிலிங்கம் சி.அ., 2000, ப.58.

42 மேற்படி.

43 வீரகேசரி 29.12.2005.,ப.,5 மேலும் பார்க்க **Brief on India-Sri Lanka Relations, Ministry of External Affairs, BSM Division,** http://meaindia.nic.in/foreignrelation/srilanka.pdf

44 Ibid

45 Ibid



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம், தேசியம், தேசியவாதம் : பன்முக நோக்கு

பின்காலனியத்துவ அறிவுஜீவிகள் மத்தியில் தேசம், தேசியம், தேசியவாதம் தொடர்பில் எழுச்சி பெறும் சமகாலச் சிந்தனைகள் மீதான கவனக் குவிப்பு எமக்கு அவசியமாகின்றது. இவற்றுடன் நாம் பரிச்சயம் கொள்ளும் பொழுதுதான் நமக்கான அறிகை மரபை வந்தடைவோம். இதனைச் சாத்தியப்படுத்தும் நோக்கில் இந்த "தேர்வும் தொகுப்பும்" பகுதி அமைகின்றது.

தேசம், தேசியம், தேசியவாதம் தொடர்பில் இன்று பல்வேறு ஆய்வுகள் வெளிவருகின்றன. இவை எமது குறுகிய பார்வைகளையும் விளக்கங்களையும் கேள்விக்குட்படுத்துகின்றன.

தேசம் என்ற உன்னதம் பொதுவாக பெண்ணாகவே உருவாக்கப்படுகின்றது. தேசியம் என்ற கோட்பாடு தேசத்தின் மைய அடையாளமாக உன்னதமயமாக்கப்பட்ட, தந்தைமை ஆதிக்கத்தின் அற்புதப் பெண்மையாக கற்பனை செய்யப் படுகிறது. பெண்கள் தந்தைமை ஆதிக்கத் தேசியத்தை எதிர்த்து தேசங்களுக்கு இடையே அமைப்புக்களைக் கட்டிவருகின்றனர். இன்று இவ்வாறு புரிந்துகொள்ள வேண்டிய தேவையும் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஆகவே இங்கு இடம் பெறும் கட்டுரைகள் வெவ்வேறு பரிமாணங்களையும் சிந்தனைகளையும் குவிக்கின்றது. எமது தொடர்ந்த வாசிப்பின் தேடலும் மற்றும் ஆய்வும் தேசம், தேசியம், தேசியவாதம் தொடர்பில் புது விளக்கங்களை வேண்டி நிற்கின்றது. இதற்கான சாத்தியமான களங்களை கருத்தியல் பின்புலங்களை நோக்கி வாசகர்களை ஈர்க்கும் வகையிலையே இக் கட்டுரைகள் தேர்வு செய்யப் பட்டுள்ளன. இந்தத் தொகுப்பில் இடம் பெறும் கட்டுரைகள் எமது சிந்தனைகளை விரிவாக்கி ஆழமாக்குகின்றன. இதன் மூலம் நாம் தெளிவான நிலைப்பாடுகள் நோக்கி கவனம் குவிக்க முடியும்.

இக்கட்டுரைகள் இந்த விடயப்பரப்பின் முழுப்பரிமாணங்களையும் கொண்டு வந்து சேர்க்கவில்லை. ஆனால் அவ்வாறான பரிமாணங்கள் உண்டு என்பதை ஒவ்வொரு கட்டுரைகளும் உணர்த்துகின்றன. பன்முக நோக்கு நிலைகளை அடையாளம் காட்டுகின்றன.

அறிமுகக்குறிப்பும்
தேர்வும்தொகுப்பும்:
துரைமடன்

## அறிமுகம் :

I

உலகளவில் முதலாளித்துவப் புரட்சி மனித சமுதாயப் பரிணாம வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சலை மாறுதடத்தை ஏற்படுத்தியது. போக்கு வரத்துச் சாதனங்களின் அபிவிருத்தியும் தொலைத் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியும் மற்றும் கல்விப் பரவலாக்கமும் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் ஒவ்வொரு மனிதரையும் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்தன.

இந்த வளர்ச்சிக் கட்டங்கள் விரிவான சந்தையையும் மத்தியப்படுத்தப்பட்ட நிருவாகத்தையும் உருவாக்கி இச்சமூகங்களை இணைந்தன. இதன் மூலம் நிலையான தேசங்களும் புதுவடிவிலான தேசிய சமூகங்களும் உருவாகின.

முதலாளித்துவப் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் நிலையான தேசம் என்று எதுவும் இருக்கவில்லை. அடிக்கடி இடம் பெற்ற நிலப்பிரபுத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தங்களால் தேசங்களின் எல்லைகள் சுருங்கியும் விரிந்தும் மாறியும் மறைந்தும் வந்தன. ஆகவே முதலாளித்துவ புரட்சியின் பின்னரே நிலையான தேசியங்கள் உருவாகின. அதுவரை இன்று நாடுகளாக அடையாளம் காணப்படும் சமூக புவியியல் அலகுகள் பற்பல நிலையற்ற சிற்றரசுகளாக சிதறிக் கிடந்தன.

1700ம் ஆண்டளவிலேயே மேற்கு ஐரோப்பாவில் இத்தகைய நவீன தேசியங்கள் முதன் முதலாக உருவாயின. அந்நூற்றாண்டில் இவ்வகையான நாற்பத்தைந்து அரசுகளும் 1945 இல் அறுபத்தைந்து அரசுகளும் உலகெங்கும் காணப்பட்டன. இன்று இருநூறுக்கும் மேற்பட்ட நாடுகள் அல்லது அரசுகள் உள்ளன.

தற்போது நவீனத்துவ அரசியலோடு தொடர்புடைய சொற்கள் மற்றும் கருத்தாக்கங்களில் சனநாயகம், பாசிசம், சர்வாதிகாரம், தேசம், தேசியம், தேசியவாதம் போன்றவை முதன்மை பெற்றன. இவை பற்றி ஆய்வு செய்பவர்கள் மத்தியிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

> *பிரெஞ்சுப் புரட்சியில் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோட்பாடுகள் முதன்மையான சுலோகங்களாக இருந்தன. பிரெஞ்சுப் புரட்சியுடன் அரசியலானது ஒரு வெகுசன அரசியலாகவும் வடிவம் பெற்றது.*

குறிப்பாக தேசியவாதம் பற்றி ஆய்வாளரிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இருப்பினும் பல ஒத்த கருத்துக்களும் நிலவுகின்றன. வரலாற்று ரீதியில் தேசியவாதத்தில் இரு கட்டங்கள் உள்ளன. ஒன்று, சனநாயகத்தன்மை வாய்ந்தது. இரண்டு, ஏனைய இனங்களை ஒடுக்குவதாகவோ அல்லது ஏனைய அரசுகளை ஆக்கிரமிப்பதாகவோ மாறும் கட்டம். அதாவது இதனை தேசிய வெறி எனவும் வர்ணிக்கலாம்.

எனவே தேசியவாதத்தில் குறிப்பிடப்படும் முதலாவது கட்டம் முற்போக்கானதாக அமைய இரண்டாவது கட்டம் பிற்போக்கானதாக அமைகிறது. யூததேசியவாதம் இந்த இரண்டாவது கட்டத்தையே சார்ந்தனவாகும்.

சமகால நவீன அரசியல் சிந்தனை மரபில் சனநாயகம், தேசியவாதம், பாசிசம்... போன்றவை குறித்து விரிவான ஆய்வுகள் புத்தாக்க மரபுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற தேசியவாதத்துக்கும் ஐரோப்பிய நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்ட காலனித்துவ நாடுகளில் எழுச்சி பெற்ற தேசியவாதத்துக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள. இந்தக் கண்ணோட்டம் எமது சிந்தனையிலும் ஆய்வுகளிலும் வெளிப்படவேண்டும்.

பொதுவாக தேசியவாதத்தை பிரெஞ்சுத் தேசியவாதத்துடன் தொடர்புபடுத்தியே ஆய்வுகள் வெளிவருகின்றன. மார்க்சிய ஆய்வாளர்களும் சரி, மார்க்சிய ரல்லாத ஆய்வாளர்களும் சரி பிரெஞ்சுப் புரட்சியை தேசியவாதத்தின் முக்கிய வெளிப்படாக அடையாளமாகக் கொள்கின்றனர். குறிப்பாக மார்க்சியர்கள் தேசியவாதத்தை பிரெஞ்சுப் புரட்சியுடன் அடையாளம் கண்டு அதனை சனநாயகப் புரட்சியாகக் குறிப்பிடுகின்றனர். அதாவது தேசியவாதத்துடன் சனநாயகப் புரட்சியை இணைக்கின்றனர்.

1789இல் பிரான்சில் ஏற்பட்ட புரட்சியோடு பிரென்ஸ் அரசானது மன்னன் அரசு என்ற நிலைமாறி மக்கள் அரசாகியது. அதுவே தேசிய அரசாக தாய்நாடாக மாறிற்று. இத்துடன் மன்னன் அரசுகளின் காலகட்டம் முடிந்தது. இவ்வாறு விளக்கம் கொள்ளும் பொழுதுதான் பிரெஞ்சுப் புரட்சிக்கான முக்கியத்துவம் ஆழமாகப் புரிந்து கொள்ளப்படும்.

பிரெஞ்சுப் புரட்சியில் சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகள் முதன்மையான சுலோகங்களாக இருந்தன. பிரெஞ்சுப் புரட்சியுடன் அரசியலானது ஒரு வெகுசன அரசியலாக வடிவம் பெற்றது. இதன் மூலம் புதிய சமூகத்தை புதிய அரசு நிறுவனத்தை புதிய சட்ட ஒழுங்கமைப்பை பிரெஞ்சுப் புரட்சி குறித்து நின்றது. 'மக்கள் இறைமை' என்ற பதம் வரலாற்றில் பிரவேசித்தது.

வாழ்முறையில் சிந்தனையில் தேசியவாதம் புதிய பொருள் கோடல் மரபுக்கு உள்ளாயிற்று. சமூகப் பொருளாதார விடுதலையையும் சமத்துவத்தையும் மக்கள் இறைமையையும் "தேசியவாதம்" குறித்து நிற்கும் எண்ணக்கருவாக மலர்ச்சி பெற்றது. பிரெஞ்சுப் புரட்சி தேசியவாதத்துக்கு புதுவிளக்கம் அளித்தது. மன்னராட்சியை நிறுவுவதற்குப் பதிலாக மக்களாட்சியை நிறுவுவது என்ற சுலோகம் தேசியவாதத்துக்குப் புதிய அர்த்தத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய வலிமையையும் சேர்த்தது. பிரான்சியப் புரட்சியின் தாக்கம் பல இடங்களில் எதிரொலித்தது.

தொடர்ந்து நவீனத்துவ அரசியலின் சில முக்கிய எல்லைப் புள்ளிகளாக பின்வருவனவற்றைக குறிப்பிட முடியும். அவை: 1789 (பிரெஞ்சுப் புரட்சி) 1848 (பொதுவுடைமை அறிக்கை) 1871 (பாரிஸ்கம்யூன்), 1917 (ரஷ்யப் புரட்சி) 1945-1950 (காலனிய விடுதலைகள், சீனப்புரட்சி...) முதலியன முக்கியமானவை. இரண்டாம் உலகமகா யுத்த முடிவின் போது பல நாடுகள் சுதந்திரம் பெறுவதற்கு தேசியவாதம் முதன்மைக் காரணமாக இருந்தன. 1945-1968க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 66 நாடுகள் சுதந்திரம் பெற்றன.

1949இல் நிகழ்ந்த சீனப்புரட்சி தேசியவிடுதலை இயக்கங்களின் பாய்ச்சலுக்கு உத்வேகம் அளித்தது. வரலாற்றில் முதற்தடவையாக தேசியவாதத்தின் துணையோடும் சுயநிர்ணய உரிமையின் துணையோடும் ஒரு நாடு முதலாளித்துவ சனநாயகப் புரட்சி அல்லாத புதிய சனநாயக சோசலிசப் புரட்சியை வெற்றிகரமாகச் செய்து முடித்தது. இந்தப் புரட்சியின் தாக்கம் கிழக்கு ஆசியா முழுவதும் எதிரொலித்தது. வியட்நாமில் ஹோசிமின் தலைமையில் சீனா முன்மாதிரியைப் பின்பற்றி தேசியவிடுதலைப் போராட்டத்தை சோசலிசப் புரட்சியுடன் இணைக்க முயற்சி செய்தது. அதன் பின்னர் பெரும்பாலான தேசிய விடுதலை இயக்கங்கள் சோசலிசப் புரட்சியை தமது இலக்காகக் கொள்ள ஆரம்பித்தன.

அதாவது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய மூன்றாம் உலக நாட்டு எழுச்சிகளில் பெரும் பான்மையானவை தேசியவடிவத்தைப் பெற்றுள்ளன. கியூபா, அங்கோலா, வியட்நாம், நிக்கரகுவ ஆகிய நாடுகளில் எழுந்த சோசலிச எழுச்சிகளும் கூட இதில் அடக்கம். (இவை பற்றி விரிவாக ஆராய வேண்டும்)

எவ்வாறாயினும் தேசிய உணர்வைத் தாண்டி சோசலிசப் புரட்சி கூட சாத்தியமில்லை என்பதை வரலாற்று வழிப்பட்ட சம்பங்கள் நிகழ்ச்சிகள் எமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறது. சமகால வரலாறு முழுமையிலும் தேசிய இன உணர்வும் தேசிய இன எழுச்சியும் பிரதான பங்கு வகித்து வருகின்றது. சில சமயங்களில் சோசலிசக் கருத்தியலைப் பின்னுக்குத் தள்ளி தேசியக் கருத்தியல் முன்னுக்கு வந்துள்ளது.

புகழ் பெற்ற ஆபிரிக்கப் புரட்சியாளரான பிரான்ஸ்பனான் புரட்சிக்குப் பிந்திய அல்ஜீரியாவைப் பற்றிப் பேச வரும் போது "அனைத்து மக்களின் உள்ளார்ந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடாக அமைய வேண்டிய தேசிய உணர்வு ஒரு வெற்றுக்குடுவையாக இருந்தது" எனக் குறிப்பிட்டார். பிறிதொரு தருணத்தில் பனான் "தேசியம் என்பது தீவிர தேசியம் ஆகவும் தேசிய வெறியாகவும் இறுதியில் இனவெறியாகவும் மாறியது" எனவும் குறிப்பிட்டார்.

மேலும் சில ஆய்வாளர்கள் தேசியவாதத்தை முற்போக்கு தேசியவாதம் பிற்போக்கு தேசியவாதம் எனவும் அடையாளப்படுத்துகின்றனர். தேசியம் எவ்வாறு யாரால் கட்டமைக்கப்படுகிறது? அதற்கான அரசியல் கருத்துநிலைத் தளம் யாது? போன்ற கேள்விகளுக்கான பதில்களைக் கொண்டே தேசியம் விளக்கப்பட முடியும். அதாவது 'தேசியம் தான் தேசத்தை உருவாக்குகிறதேயொழிய தேசம் தேசியத்தை உருவாக்கவில்லை' என்கிற கெல்னரின் கூற்று மிக முக்கியப்படுகிறது.

தேசியம் என்பது பல்வேறுபட்ட சூழல்களில் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாய்க் கட்டமைக்கப்படுகிறது. முதலாளிய எழுச்சியோடு கட்டமைக்கப்பட்ட தேசியம் உண்டு. பாசிசக் கட்டமைப்புக்கும் பயன்பட்ட தேசியம் உண்டு. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உருவாக்கப்பட்ட தேசியம் உண்டு. இதைவிட தேசிய இனங்களை ஒடுக்கி மையப்படுத்தப்பட்ட அரசுருவாக்கத்திற்காக மக்களை ஒருங்கிணைக்கும் தேசியம் உண்டு. மேலும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் ஒடுக்கும் தேசிய இனப்பெருமித்துக்கும் அதன் தேசிய வாதத்துக்கும் எதிராகக கட்டமைக்கும் தேசியமும் உண்டு. ஆகவே தேசம் என்பது அரசியல் ரீதியாக வரையறுக்கப்படுவது. இதற்கமையவே தேசியம் கட்டமைக்கப்படும். நாம் தேசியத்தை வர்க்கத்திற்கு

***தேசியம் எவ்வாறு யாரால் கட்டமைக்கப்படுகிறது? அதற்கான அரசியல் கருத்துநிலைத் தளம் யாது?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாற்பட்ட ஒரு சுயேச்சையான சக்தியாக பார்க்க முடியாது. அதே நேரம் தேசியம் என்பது தவிர்க்கமுடியாத இயலாமல் பாசிசத்திற்கே இட்டுசெல்லும் என்னும் உண்மையையும் மறுக்க முடியாது.

II

தேசம் என்பது வெறும் சூட்சுமான கருத்தாக்கம் அல்ல. மாறாக ஸ்தூலமான இருப்பாகும். தேசஅரசு அல்லது அதனை அமைப்பதற்கான போராட்டம் என்பதே தேசத்தில் ஸ்தூலமான வடிவமாகும். தேசம் என்பது அரசு என்பதுடன் பிரிக்கமுடியாத வகையில் நெருக்கமாக பிணைந்திருப்பதாகும். இந்த வகையில் தேசம் என்பது ஓர் அரசியல் வகையினமாகும் (Political Catagory). சுயநிர்ணய உரிமை என்பது முழுமையாகவும் பிரத்தியேகமாகவும் அரசியல் மற்றும் சனநாயகத்துறைகளுக்கு உரித்தாகிறது. அதாவது அரசியல் ரீதியில் பிரிந்து சென்று சுதந்திரமான தேசஅரசை உருவாக்குவது என்பதாகிறது என லெனின் திட்டவட்டமாக குறிப்பிட்டிருப்பதை இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

தேசம், தேச அரசு தொடர்பில் மேலும் சிந்திக்கும் பொழுது சில அடிப்படையான கருத்தாங்கங்கள் குறித்து நாம் தெளிவுபடுத்துவோம் அவை:

*தேசம் என்பது வெறும் சூட்சுமான கருத்தாக்கம் அல்ல. மாறாக ஸ்தூலமான இருப்பாகும். தேசஅரசு அல்லது அதனை அமைப்பதற்கான போராட்டம் என்பதே தேசத்தில் ஸ்தூலமான வடிவமாகும்.*

**கலாசாரகுழுமம் :** தமக்கென பிரத்தியேகமான தனித்துவம் மற்றும் கலாசார அடையாளங்களைக் கொண்டதும், அதே வேளை அந்தக் கலாசார வேறுபாடுகளின் அடிப்படையில் தமது விழுமியங்களை (Values) உருவாக்கிக் கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி பெறாததும், இதனால் தமது சமூக பொருளாதார அரசியல் கோரிக்கைகளுக்கு இந்த கலாசார வேறுபாடுகளை அடிப்படையாகக் கொள்ளாததுமான மக்கள் கூட்டமே கலாசார குழுமம் ஆகும்.

இங்கு குறிப்பிட்ட மக்களிடம் காணப்படும் புறநிலையான கலாசார அம்சங்கள் என்பவை தனிப்பட்ட அம்சங்களாக கருப்படுகின்றன.

**இனக்குழுமம்:** ஏனைய குழுக்களில் இருந்து தம்மை வேறுபடுத்தும் தனித்துவமான கலாசார வேறுபாடுகள் குறித்து சுயபிரக்ஞை கொள்வதுடன், இந்த கலாசார வேறுபாடுகளின் அடிப்படையில் தம்மை பிற குழுக்களை விட உயர்வானதாக அல்லது குறைந்த பட்ச பிற குழுக்களுக்குச் சமதையான ஒரு அங்கீகாரத்தை கோரும் நிலையில் அந்த மக்கள் கூட்டம் இனக்குழுமமாக அமையும்.

**தேசம் :** இனக்குழுமங்கள் அரசியலில் நுழையும் போது இனத்துவ அடிப்படையில் சமூக பொருளாதார கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கும் போது, அவை தேசியவாத அரசியலில் ஈடுபடத் தொடங்குகின்றன. இதன் ஒரு வளர்ச்சி நிலையாக தமக்கென தனியான அரசியல் அதிகார அலகுகளை பெறுவதை நோக்கிச் சிந்திக்கத் தலைப்படுகின்றன. இந்நிலையில் அவை தேசங்களாகப் பரிணமிக்கின்றன. தேசத்திற்குப் பொருத்தமான அரசியல் வடிவம் தேச அரசு தான் என்பதை தேசியவாத இயக்கத்தின் கடந்த இரண்டு நூற்றாண்டு கால வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்துள்ளது.

கலாசார குழுமம் என்பது ஒரு கலாசார வகையினமாகவும், இனக்குழுமம் என்பது ஒரு நிருவாக வகையினமாகவும், தேசம் என்பது ஒரு அரசியல் வகையினமாகவும் அமைகின்றன. பொதுவில் எந்தத்துறைகளாக இருப்பினும் கூட, குறிப்பிட்ட வகையினங்களை அவற்றிற்கே உரிய மட்டத்தில் வைத்து கையாளும் போதுதான் அந்தந்தத் துறைகளில் எழும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும்.

ஆசியப்பிராந்தியத்தில் தேசம், தேசியம், தேசியவாதம் தொடர்பிலான தனித்துவமான பார்வைகள் நோக்கில் நாம் கவனம் குவிக்க வேண்டும். சமகாலச் சிந்தனைகளது வெளிச்சத்தில் பரிசீலிக்க வேண்டும். பன்முகப் பரிமாண மிக்க கோட்பாட்டாக்க விரிவு வேண்டும். குறுகிய வெறித்தனமான பார்வைகள் சிந்தனைகள் முதலானவற்றில் இருந்து விடுபடவேண்டும். மூன்றாம் உலக நிலையில் இருந்து தேசியம் சார் புதிய சிந்தனைகள் எழுச்சி பெற வேண்டும். ஏகாதிபத்திய எதிர்புணர்வை வெளிப்படுத்தும் தேசிய போராட்டமாகவும் முன்னெடுக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III

# ஆசியாவில் தேசிய வாதத்தின் மூலங்கள்

பேராசிரியர் முனைவர் சி. அரசரத்தினம்

தற்கால வரலாற்றினை நிர்ணயிருக்கும் தனிப்பெரும அம்சங்களுள் தேசிய வாதமும் (Nationalism) ஒன்றாகும். இத்தேசிய வாதமானது ஐரோப்பாவில் ஆரம்பித்து முறையே அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா ஆசிய கண்டங்களிற் பரவி இன்று உலகம் முழுவதும் காணப்படுகின்றது. தேசியவாதம் ஓர் அரசியல் நியமமாகத் (Political Principle) ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இருந்த சாம்ராச்சியங்கள் பல சமூகங்களை உடையனவாயும் சர்வதேச நோக்குடையனவாயும் இருந்தன. இத்தகைய பல அம்சங்களை உடைய ஒரு நாடே இலட்சிய நாடென (Ideal State) அப்பொழுது கருதப்பட்டது.

இப்படியான ஒரு கொள்கை மேன் மேலும் மக்களையும் நாடுகளையும் கைப்பற்றி அடக்கியாளும்படி அரசர்களை எப்பொழுதும் தூண்டிக் கொண்டே இருந்தது. பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் (Renaissance Movement) தோற்றத்தோடும் கத்தோலிக்க திருச்சபையில் (Universal Catholic Church) உண்டான பிளவினோடும் நாடுகளை அமைப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய ஒரு வலிமையுள்ள நியமமாகத் தேசியவாதம் முதன்முறை எழுச்சி பெற்றது.

அப்பொழுது தேசியவாதம் நாட்டையாளும் மன்னனோடு இணைக்கப்பட்டு அவனுடைய அதிகாரப் பிரியத்திலும் சாதனைகளிலும் மட்டுமே வெளிப்படையாகி நின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டிலே தான் தேசியவாதம் ஒரு தேசிய இனநாட்டினுள் (Nation State) மேலும் விரிவான அடிப்படைகளை உடையதாக அமைவுற்றது. அப்பொழுதுதான் ஒரு தேசிய இனத்தைச் (Nation) சேர்ந்த பல்வேறு மக்கட் பிரிவினரும் தாம் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்ச்சியைப் பெற்றனர்.

மக்கள் போற்றி நின்ற தேசியவாதம் மேலும் முன்னேறுவதற்குப் பிரான்சிலே நடைபெற்ற அரசியற் புரட்சி மிகுந்த சக்தியளித்ததோடு, தற்காலத்து முக்கிய அரசியல் நியமங்களில் ஒன்றாகிய தாராண்மை வாதத்தோடும் (Liberalism) தேசியவாதத்தினை இணைத்தது. தாராண்மைவாதத்தால் வலுப்பெற்ற இத்தேசிய வாதம் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பிய வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது. அத்தோடு ஆசியா, ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களிலுள்ள அடிமை நாடுகளிலும் பரவியது.

ஒரு குறிப்பிட்ட சூழலிலே தோன்றி வளர்ச்சியுற்ற ஓர் அரசியல் நியமமானது, தான் தோன்றிய சூழ்நிலையிலும் பார்க்க முற்றிலும் அடிப்படையிலேயே வேறுபட்ட சூழ்நிலையிலே செழிப்புற வேண்டுமாயின், அந்நியமம் கட்டாயமாகப் பெருமளவு உருமாற்றமடைய வேண்டுமென்பது வெளிப்படையாகும்.

ஐரோப்பியத் தொடர்பின் விளைவாக இருபதாம நூற்றாண்டிலே ஆசியாவில் வளர்ச்சியடைந்த தேசியவாதம் அது தோன்றுவதற்கேதுவாயிருந்த ஐரோப்பிய தேசியவாத்தினைப் பெரிதும் ஒத்திருந்ததென்பதில் ஐயமில்லை. எனினும் அதற்கே சொந்தமான ஓர் அடையாளத்தைக் கொடுக்கவல்ல சில நிரகற்ற பண்புகள் அதற்குண்டு. மேலும் ஆசியத் தேசியவாதம் பல கிளைத் தேசியவாதங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது ஆசியத் தேசியவாதத்திற்கு மட்டும் சிறப்பாகவுள்ள பண்பன்று. உண்மையில் ஐரோப்பாவின் தேசியவாத்தினை "ஐரோப்பிய தேசியவாதம்" எனப் பொதுப்படக் கூறுதல் முடியாத காரியமாகும். ஏனெனில் மேற்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா, போல்கன் ஐரோப்பா, வடகிழக்கு ஐரோப்பா ஆகிய பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான தேசியவாதம் நிலவுகின்றது. இதனால் அவற்றிடையே பெரும் வேறுபாடுகளும் உள. இக்காரணங்களினால் தேசியவாதத்துக்கு அது உட்கொள்ளும் எல்லாக் கருத்துக்களும் அடங்கும் படியாக வரைவிலக்கணம் கூறுதல் எளிதன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியாவில் தேசியவாதம் தோன்றக்காரணம்

தென்கிழக்காசிய நாடுகளில் தேசியவாதம் எழுவதற்கு முதற் காரணமாக இருந்தது அந்நியருடைய அரசியலாதிக்கத்திற்கெதிராக எழுந்த கிளர்ச்சியே ஆகும். இது ஓர் எதிர்மறை அம்சம் (Negative Factor) என்பதில் ஐயமில்லை. எனினும் அந்நிய ராட்சியை நோக்கியெழுந்த இக்கிளர்ச்சியின் காரணமாக ஒரே நோக்குள்ள பல அம்சங்கள் செயலாற்றத் தொடங்கின.

இதன் விளைவாக ஒவ்வொரு நாட்டின் தேசியவாதமும் அதன் அடிப்படையாகக் கொள்ளக்கூடிய சில உறுதியான அம்சங்களை உருவாக்கின. இதுவே இக்கிளச்சியின் முக்கியத்துவமாகும். அந்நிய ராட்சியை எதிர்ப்பதற்கு ஒன்றுபட வேண்டிய அவசியம் அடிமைப்பட்ட மக்களிடையே சில "ஒற்றுமைத் தளைகளை" உண்டாக்கியது. ஆரம்பத்தில் இவ்வொற்றுமைத் தளையானது மேற்கூறப்பட்ட எதிர்மறைக் காரணத்தினால் உண்டானதொன்றெனினும், அதைத் தொடர்ந்து மிக விரைவில் திட்டவட்டமான அம்சங்கள் பல உருவாகின.

## ஆசிய தேசிய வாதத்திற்கும் ஐரோப்பிய தேசிய வாதத்திற்குமுள்ள தோற்ற வேற்றுமை

ஐரோப்பாவிலே தேசியவாத நியமமானது நடைமுறையில் சமூகப்பாகுபாடுகளையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. முதலாம் உலகமகாயுத்தத்தின் முடிவில் வேர்சைல்ஸில் (Versailles) கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கை சமூக அடிப்படையில் ஐரோப்பாவைப் பிரித்தமைப்பதையே நோக்கமாகக் கொண்டு, அதில் ஓரளவு வெற்றியும் கண்டது. இவ்வாறாக அவ்வுடன்படிக்கை மத்திய ஐரோப்பாவிலும், தென் கிழக்கைரோப்பாவிலும் புதுத் தேசிய இன நாடுகள் பலவற்றை அமைத்ததோடு, தங்கள் சுதந்திரத்தை இழந்திருந்த வேறு நாடுகளையும் மீண்டும் அமைத்துதவியது.

ஒரு இனம் ஒரு நாடு" (One Race, One State) என்று ஹிட்லர் கூறும் போது ஐரோப்பா முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நியமத்தினை அவன் மீண்டும் அறிவித்தானே யொழியப் புதிதாக ஒன்றுங் கூறவில்லை. ஒரே மொழி பேசும் ஒரே சமூக இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரே நாட்டின் எல்லைக்குள் வாழவிரும்புவதே தேசிய வாத மென்பது ஐரோப்பாவில் அக்காலத்தில் கொண்ட பொருளாகும். இதே உருவில் தேசியவாதம் தென்கிழக்காசிய நாடுகளில் எவ்வித ஆதரவையும் பெற்றிருக்க முடியாது. இந்நிலப் பகுதி பல்வேறு சமூகயினங்கள், மொழிகள், பண்பாடுகள் ஆகியன உள்ள இடமாகும். அங்குள்ள ஒவ்வொரு நாட்டிலும் பலவகையான மக்கள் பல நூற்றாண்டுகளாக ஒருங்கே வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஹிட்லர் தேசியவாதத்திற்குக் கொடுத்த வரைவிலக்கணத்தின்படி இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா மலாயா, ஆகிய நாடுகள் தங்களை நிர்மாணித்துக் கொள்ள முடியாது. இவற்றை நாம் "நாடுகள்" எனக் குறிப்பிடும்போது, அவை பெருமளவிற்கு வெறும் "புவியியற் சொற்கள்"* என்பதை நாம் அறிவோம். (Geographical Expressions) * (அதாவது புவியியற் கொள்கைகளின்படி நாடுகள் எனக்கூறலாமேயொழிய தேசிய அடிப்படையில் அவை நாடுகள் ஆகா என்பதாம்.)

ஒற்றுமையிழந்த இத்தாலியை ஒரு "புவியியற் சொல்லால் குறிக்கப்படுமிடம்" என மெற்றர்னிக் (Metternich) கருதினான். ஆனால் அக்கூற்றினால் அக்கால இத்தாலியின் முழு நிலையும் புலப்படவில்லை. ஏனெனில் அங்கு இத்தாலிய தேசியவாதம் ஒன்றிருந்தது; இத்தாலிய மக்கட் குழுவொன்றிருந்தது; இத்தாலிய மொழியிருந்தது; இத்தாலியப் பண்பாடிருந்தது; அத்தோடு கல்தோலிக்க சமயமுமிருந்தது. இவ்வம்சங்களிற் சில இங்கு நாம் எடுத்துக்கொண்ட ஆசிய நாடுகள் சிலவற்றில் காணப்பட்டமை உண்மையே. எனினும் ஐரோப்பியர் செல்வாக்கு இந்நாடுகளைப் பாதிக்கத் தொடங்கிய காலத்திற்கு முன், ஒரு இந்தியத் தேசியவாதம் இருந்ததாகவோ, அல்லது இலங்கைத் தேசியவாதம், மலாயாத் தேசியவாதம் எனப் பல தேசியவாதங்கள் இந்தனவாகவோ நாம் கொள்ள முடியாது.

இந்நாடுகளில் தங்களுக்குள் வரையாது பொருதிக் கொண்டிருந்த பிரிவுபட்ட இனங்களை, வெளியிலிருந்து வந்த ஐரோப்பியர் அடக்கி, அரசியல் ஒற்றுமையையும், நிர்வாக ஒற்றுமையையும் உண்டாக்கினர். இவ்வொற்றுமையே இந்நாடுகளிற் தேசியவாதம் வளர்ச்சியடையக் கூடிய அடிப்படை ஆதாரத்தையளித்தது. இந்நாடுகளிற் பல, சிற்சில காலங்களிற் சில ஏகாதிபத்தியங்களின் கீழ் ஒன்றுபட்டிருந்தன என்பது உண்மையே. ஆனால் இப்புது அரசியல் ஒற்றுமையோ, அவ்வொற்றுமையினின்றும் வேறுபட்ட தொன்றாக இருந்தது. ஏனெனில் (முன்பிருந்த ஏகாதிபத்தியங்களின் கீழ் நடந்தது போலல்லாது) ஒரு குறிப்பிட்ட இனம் மற்ற இனங்களை அடக்கி ஆதிக்கஞ் செலுத்தவில்லை. அதற்குப் பதிலாக எல்லா இனங்களும் ஒரு கூட்டமாக இணைவதற்குகந்த சூழ்நிலை உருவாகியது.

இந்தியாவில் பிரித்தானியருடைய பல்வேறு வகையான நேர்முக மறைமுக கட்டுப்பாடுகளுக்கு மேலாக இந்தியர் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர் என்னும் உணர்வு எழுந்தது. ஈழத்திலோ வெனில், பிரித்தானிய நிர்வாகம் நடைபெற்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்குள் உள்நாட்டுப் பிராந்திய வேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒருமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுடைய விசுவாசத்தை (Single Loyalty) மக்களிடையே ஏற்படுத்த வழிவகுக்கப்பட்டது. மலாயாவிலும் இதே போன்ற முறையான இயக்கம்தான் ஏற்பட்டது. ஆனால் அங்கு சுல்தான்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்பட்டமையால் ஓரளவு குறைவாகவே இவை காணப்பட்டன. இந்தோனேஷியாவிலோ இவ்வொற்றுமையானது முற்றிலும் ஐரோப்பிய ஆதிக்கத்தின் பயனாகவே உண்டாயிற்றெனலாம். ஒல்லாந்தரின் கீழ் தாமெல்லோரும் அடிமைப்பட்டமையொன்றே தங்களை இணைக்குந் "தளை" யாகக் கொண்டு, பல்வகைப்பட்ட முதிர்ச்சிபெற்ற பண்பாடுகளைக் கொண்ட எண்ணற்ற தீவுகளும் அற்புதமான முறையில் ஒன்றுபட்டுள்ளதை அங்கு நாம் காண்கிறோம்.

## ஆசியதேசிய வாதத்தில் சமயத்தின் பங்கு

தென்கிழக்காசியாவில் தேசியவாதம் சமயத்தோடு தெருங்கிய தொடர்புடையது. இது அதன் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். ஐரோப்பாவிலும் தேசியவாதம் பரவிய நாடுகள் சிலவற்றில் இத்தன்மை காணப்பட்டது. கிழக்கைரோப்பிய தேசியவாதத்திற்கு சமயக் கலப்பு பெருமளவுக்கு இருந்ததெனப் பொதுவாகக் கூறலாம். அந்நியராகிய துருக்கியரின் இஸ்லாமிய ஆதிக்கத்திற்கெதிராகப் போல்கன் பகுதியில் (Balkan Region) எழுந்த போல்கன் தேசியவாதம் சிறப்பாக இப்பண்பைப் கொண்டிருந்தது. பிற சமயமொன்றைத் தழுவி நிற்கும் அந்நிய வல்லரசு ஒன்றுக்கு கெதிராக உள்நாட்டுத் தேசியவாதம் (Local Nationalism) எழுகின்ற நாடுகளில் அத்தேசியவாதமானது பேரிடமளிக்கப்படும் நாடுகளில் இப்படி நடப்பது திண்ணம்.

நாம் எடுத்துக்கொண்ட ஆசிய நாடுகளில் தேசிய இயக்கங்கள் கிறித்தவ வல்லரசுகளை எதிர்த்து நின்றன. அத்துடன், இவ்வியக்கங்கள் பல சமயமொன்று தான் மேலான தெனக் கோருவதை எதிர்த்து, தங்கள் சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் நன்னம்பிக்கை யூட்டுவதை நாடிநின்கின்றன. அதன் விளைவாக தேசியவாதமானது எப்படி அரசியலுரிமைகளைப் பெற இயங்கும் ஓரியக்கமாயிற்றோ, அதே போலக் கலாசார சமய, மறுமலர்ச்சி இயக்கமுமாயிற்று. ஆகையால் இந்நாடுகளில் தேசியவாதம் தோன்றிய காலத்திலேயே, அங்கு பெரும்பாலும் பரவியிருக்குஞ் சமயங்களாகிய இந்து, பௌத்த, இஸ்லாமிய சமயங்களின் மறுமலர்ச்சியும் ஏற்பட்டத்தை தற்செயலாக ஒரே காலத்தில் நடந்த இரு சம்பவங்களெனக் கொள்ளலாகாது. சமயத்திற்களித்த இம் முக்கியத்துவம் தேசியவாதத்திற்கு சாதகமாகவும் பாதகமாகவும் முடிந்தது. அது தேசியவாதத்தினை ஒரு விரிவான அடிப்படையுள்ளதாகச் செய்வதற்கு முனைந்தது. அத்துடன் தனி அரசியல் இயக்கமெதுவுக்கும் கிடைத்திருக்க முடியாத பொது ஆதரவைத் தேசியவாதம் பெறுவதற்கு உதவியது. உதாணமாக இந்தியாவிலே காந்தியொருவர் முன் வந்து இந்தியத்தேசியவாதத்தினை இந்துக் கலாசாரத்தின் உயிர்நாடியோடு இணைக்கும் வரை இந்தியத் தேசியவாதம் பெரும்பாலும் ஒரு மத்திய வகுப்பினரின் இயக்கமாகவே இருந்தது. காந்தி அவ்வண்ணஞ் செய்தபோதுதான் இந்தியாவின் நாட்டு மக்களுள் Indian Peasantry பெரும் பகுதியினர் தேசியவாதத்தில் ஊக்கங்கொண்டனர். மற்ற நாடுகளிலும் பற்பல அளவுகளில் இப்படியான போக்கு ஏற்பட்டது. தூங்கிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தினைத் தட்டி எழுப்புவதற்குச் சமயத்திற்களித்த முக்கியத்துவம் சரியானதாக விருந்தது. ஆனால் பல மதங்கள் உள்ள நாடுகளிலே அது பல விபரீத விளைவுகளை உண்டுபண்ணக் கூடிய தாகும். இதனை இந்தியாவில் நடைபெற்ற சோக சம்பவங்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. அங்கு முஸ்லிம் மக்களுடைய தேசியவாதமானது, இந்திய ஒற்றுமையின்மீது கொண்ட விசுவாசத்திற்கும் மேலாகச் சமயத்திலே கூடிய ஆர்வங்கொண்டு, இந்திய முஸ்லிம்களின் தேசிய நோக்கங்கள் ஒரு தனி இஸ்லாமிய நாடு அமைப்பதாலேயே சாத்தியப்படுமென்ற முடிவுக்கு வந்தது. இந்திய தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட (Indian National Congress) இந்தியத் தேசிய காங்கிரசாலும் இத்தகைய பிளவினைச் சமாளிக்க முடியவில்லை. ஆகவே தென்கிழக்காசிய நாடுகளின் தேசியவாதத்தினை உருவாக்கி நின்ற பல்வேறு அம்சங்களும் ஒரே இயக்கத்திலே ஒன்று கூடியிருக்க முடியாத அளவிற்குத் தங்களுக்குள் முரண்பட்ட கோரிக்கைகளை உடையனவாக அமைந்தன.

## ஆசிய தேசிய வாதத்திற் கேதுவான பொருளாதாரச் சூழலும் மத்திய வகுப்பினோர் பங்கும்

தேசியவாதத்தின் வளர்ச்சிக்குப் பொருளாதார விருத்தியே எப்பொழுதும் அடிப்படையாக அமைந்துள்ளது. மிகுந்த கட்டுப்பாடுகளையும் மானியமுறைச் சமுதாயத்திற்கும் (Feudal Society) தேசிய இயக்கத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. ஐரோப்பாவிலே மானியமுறை முறிவடைந்து, புதுமுறைத் தொழிலியக்கம் (New Industrialism) ஆரம்பித்த போதுதான் தேசியவாதம் தன் கோரிக்கைகளைப் பெறுவதற்கு முனைந்து நின்றது. தேசியவாதத்தைப் பிரச்சாரம் செய்வதாக அமைந்த மத்திய வகுப்பினரே அரசியற் பொருளாதாரத் தூண்டுதல்களுக்கு ஏதுவாக உள்ளனர்.

மேலும் பிரஞ்சுப் புரட்சியின் பின் நடை பெற்றது போல மானியமுறை உரிமைகள் நீங்கிச் சட்ட ரீதியான சமத்துவ முறையிலே சமுதாயம் அமைக்கப்பட்டபோது தேசியவாதத்தின் எழுச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சாதகமான நிலை ஏற்பட்டது. குடியேற்ற ஆட்சிமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் (Colonial Economic Policies) தென்கிழக்காசியாவில் இதே தொழிலைப் புரிந்தன. அவை அங்கு நிலவிய மானிய முறைத் தொடர்புகளைத் தகர்த்தெரிந்தன. இப்பொழுது பரம்பரைச் சமுதாயமுறைக்குள் (Traditional Social Pattern) அடங்காது பெருமளவிற்கு அம்முறையினின்றும் நீங்கலாக நின்றுகொண்ட ஒரு புது வகுப்பாகிய மத்திய வகுப்பு இந்நாடுகளில் எழுச்சிபெற்றது. இவ்வகுப்பு ஒரு சிறுபான்மை வகுப்பாக இருந்த போதிலும் குடியேற்ற ஆட்சி நிலவிய நாடுகளில் தேசியவாதம் எழுவதற்கு அது புரிந்த உதவி பெரிதே. இவ்வகுப்பு பொருளாதார அடிப்படையில் தோன்றியமையால், தனிப்பட்ட ஆர்வம் அல்லது பிரிவினை ஆர்வம் (Particularist or Sectional Loyalties) எதுவுமின்றி, உண்மையான தேசிய நோக்கினையுடையதாக விருக்க முடிந்தது. பன்மொழிகளும் சமயங்களுமுள்ள ஒரு சமுதாயத்திற் காணப்படும் வகுப்புவாத இனங்களை (Commungal Groups) இம்மத்திய வகுப்பு இணைக்கக் கூடியதாகவும், முழுத் தேசத்தின் சார்பாகப் பேசும் உரிமையையும் கோரக் கூடியதாகவு மிருந்தது.

ஒரு நாட்டில் அந்நியரை அகற்றும் பிரச்சினை மிக்க அவசியமான தொன்றெனக் கருதியது மத்திய வகுப்பே யாகும். இக் கருத்து தன்னல நோக்கங்களினால் உந்தப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தினை அகற்றுவதால் இவ்வகுப்பினருடைய செல்வாக்கே பெருகும். ஏனென்றால் நாட்டில் அதிகாரம் பெறக்கூடிய அளவிற்கு அமைந்தியங்கும் ஒரேயொரு பகுதியினர் இவர்களேயாவர். பெருந் தேசிய இயக்கங்களிற் பெரும்பான்மையானவை (இந்தியத் தேசிய காங்கிரஸ், பர்மி, பாசிஸ எதிர்ப்பு மக்கள் விடுதலைக் குழு Anti Fascist People's Freedom League) மத்திய வகுப்பிலே தோன்றிய மத்திய வகுப்பினரையே தலைவராகக் கொண்டிருந்தன. ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியின் பயனாக வந்த புதிய அரசியற் கொள்கைகளையும், தாபனங்களையும், (Institutions) மேற்கொண்டவர்களும் அவர்களே. தங்களையாளும் குடியேற்ற வல்லரசின் மொழியைக் கற்றுக் கொண்டவர்களும் அவர்களே. அதனால் ஆள்பவர்களோடு நேருக்கு நேர் பேசிக்கொள்ளவும் முடிந்தது. இதே காலத்தில் மேற்கு ஐரோப்பிய அரசியல் விருத்தியின் பயனாக அங்கே தோன்றிய தாராண்மை இயக்கப் போக்கை (Spirit of Humanist Liberalism) மத்திய வகுப்பினர் மேற்கொண்டனர். இது நடந்ததும் ஏகாதிபத்திய ஆட்சியாளர் இவ் வகுப்பினருக்கு அதிகாரத்தில் ஒரு பங்கினை வழங்காமல் மறுப்பதற்கு எதுவித நியாயமும் இல்லாமற் போயிற்று.

## ஆசிய தேசிய வாதத்தில் இனப்பற்றின் முக்கியத்துவம்

தென்கிழக்காசிய தேசியவாதங்களிற் சில ஐரோப்பிய சமூக இனத்தை எதிர்ப்பதையே, (Anti European Recialism) அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை. நல்லகாலமாக இத்தகைய குணம் எல்லாவிடங்களிலும் காணப்பட்டதொன்றன்று. அப்படிச் சில இடங்களில் நடைபெற்றதற்கு ஐரோப்பியர்களுடைய கொள்கையே பெருமளவிற்குப் பொறுப்புள்ளதாகும். இந்தியாவில் தேசிய இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் அரசாங்கத்தவரல்லாத ஆங்கிலேயரிற் சிலர் அவ்வியக்கத்தில் ஊக்கங் காட்டினமையால் இத்தகைய சாதியினத் துவேஷப் போக்கு (Eacial Trend) இந்திய தேசியவாதத்தில் இடம்பெறவில்லை. ஆனும் ஐரோப்பியர் கொண்ட நோக்கத்தின் விளைவாக இந்தோனேஷியா, இந்துசீனா போன்ற கிழக்கே இருக்கும் நாடுகளில் எழுந்த கடுங் கிளர்ச்சி அப்படியானதன்று. எனினும் கறுத்தவர்களும், சிவத்தவர்களும் வெள்ளையருக்குச் சமானமானவர்கள் என்றுஞ். சில சமயங்களில் வெள்ளையரிலும் பார்க்க மேலானவர்களென்றும் உறுதிப்படுத்த வேண்டிய அவசிய மொன்றிருந்தபடியால் அங்குள்ள எல்லா நாடுகளிலும் அடிப்படையிலே இனப்பற்று (Racialism) இருக்கத்தான் செய்தது. இவ்வுணர்ச்சியானது அளவு மீறிச் சென்றதும் அந்நியரை விலக்க வேண்டுமென்னும் ஆவேசம் (Xenophobia) உண்டாயிற்று. கறுத்தவர்கட்கெதிராக வெள்ளையருக்கெதிரான நிறுத்தவேஷமாயிற்று. மேலைத்தேசங்களோடும், அவைகளின் நோக்கங்களோடும் தாம் கொண்ட தொடர்புகள் எல்லாவற்றையும் நிறுத்த வேண்டுமென்னும் பிடிவாதம் ஏற்பட்டது. சில தேசங்களில் இவ்வுணர்ச்சி உள்ளடக்கமாக விருந்தது. ஐரோப்பியரது அதிகாரம் அந்நாடுகளில் அற்றுப்போன பின்பே அது வெளிப்படையாயிற்று.

இப்படியான, வேறுபட்ட சிக்கலான காரணங்களினாலே தேசிய வாதம் எழுச்சி பெற்றது. ஒவ்வொரு நாட்டிலும் அது மேற்கொண்ட தனிப்போக்கு அந்தந்த நாட்டிலிருந்த வேறுபட்ட சூழ்நிலையைப் பொறுத்திருந்தது.

**(இக்கட்டுரை 1960களில் பேராதனைப் பல்கலைக்கழகப் பின்புலத்தில் இருந்து வெளிவந்த "சமூக மஞ்சரி" (தை - ஆனி, 1960) இதழில் வெளியானது. இக் கட்டுரை பலருடைய பார்வைக்கும் வாசிப்புக்கும் அகப்படவில்லை. ஆசிய பிராந்தியத்தில் தேசியவாதத்தின் தோற்றுவாய்க்கான மூலங்களை தெளிவுபடுத்தும் பாங்கு தனித்துவமாக வெளிப்படுகிறது.**

**இக்கட்டுரையை எழுதியவர் வரலாற்றுதுறையில் பேராசிரியராக இருந்தவர். தற்போது அமரர் ஆகிவிட்டார்.)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம்: ஐரோப்பிய வரலாறும் 'இந்திய' அறிவாளிகளும்

எஸ்.வி.ராஜதுரை

பதினெட்டாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் தேசியத்தின் எழுச்சி, மதச்சிந்தனைகளின் வீழ்ச்சி ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் பெனடிக்ட் ஆண்டர்ஸன் என்ற அறிஞர்! தேசியம் என்பதை பாசிசம், தாராளவாதம் போன்ற அரசியல் சித்தாந்தங்களுடன் சேர்த்துக் குழப்பிவிடக் கூடாது என்று கூறும் ஆண்டர்ஸன், குடும்பம், உறவு முறைகள் (Kinship), மதம் போன்ற பண்பாட்டு அமைப்புகளை ஒத்தது தான் தேசியம் பிரகடனப்படுத்தும் தேசம் என்ற கட்டமைப்பு என்கிறார். அது, மானுடச் சிந்தனையில் வளர்ந்து உருத்திரட்சி கொண்ட ஒரு அரசியல் சமூகம் ஆகும். அதனைத் தம் சிந்தனையில் கட்டியெழுப்புபவர்கள், திட்டவட்டமான வரம்புகளையுடைய ஒரு சமூகமாகவே அதை வரையறுக்கின்றனர். இன்னார் மட்டுமே இந்தச் சமூகத்தின் (தேசத்தின்) உறுப்பினராக இருக்கமுடியும் என்பது போன்ற வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட தேசத்தில் வாழும் மக்கள் அனைவருமே ஒரு பொதுவான தோழமையுணர்வால் பிணைக்கப்படுகின்றனர். அவர்களிடையே நிலவும் சாதி, மத, வர்க்கப் பிரிவினைகளை மீறிச் செயல்படும் தோழமையுணர்வுதான் அது. ஒரு தேசத்தில் ஏதோ ஒரு மூலையில் வாழ்பவன், அத்தேசத்தின் மையத்தில் வாழ்பவர் யார், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறியாமல் கூட இருப்பான். ஆயினும் அவர்களுடன் அவனைப் பிணைக்கும் வகையில் இந்தத் தோழமையுணர்வு செயல்படுகிறது. இவ்வாறு தன்னளவில் ஒரு அரசியல் சமூகமாய் விளங்கும் ஒவ்வொரு கட்டமைப்பும் தன்னைப் போன்ற பிற கட்டமைப்புகளிலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொள்ள விழையும். தனது தனித்தன்மையை, குறிப்பிட்ட அடையாளத்தைப் பிரகடனப்படுத்தும் தேசங்கள் வேறுபல தேசங்கள் இருப்பதையும் அங்கீகரிக்கும். ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்குமிடையே உள்ள வேறுபாடே குறிப்பிட்ட தேசத்தின் இறையாண்மையை உத்திரவாதம் செய்வதாகும். இறையாண்மையும் தனித்தன்மையுமுடைய சுதந்திரமான சமூகமாகத் தம்மைப் பாவித்துக் கொள்ளும் கூட்டமைப்புகள், இந்த இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொருட்டு கொலைபுரிவதையும் தமது மக்கள் உயிர் துறப்பதையும் கூட ஏற்றுச் செயல்படும்.





பெனடிக்ட் ஆண்டர்ஸன்

குறிப்பிட்ட தேசத்தில் வாழும் மக்கள் அனைவருமே ஒரு பொதுவான தோழமையுணர்வால் பிணைக்கப்படுகின்றனர். அவர்களிடையே நில வும் சாதி, மத, வர்க்கப் பிரிவினைகளை மீறிச்செயல்படும் தோழமையுணர்வுதான் அது.

இவ்வாறு கூறும் ஆண்டர்ஸன், தேசம் என்பது உலகின் பல்வேறு பகுதிகளில் பல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேறு வரலாற்றுப் போக்குகளின் எதேச்சையான இணைவால் உருவாகியதனைச் சுட்டிக்காட்டுகிறார். (தேசம் என்பதைப் பண்பாட்டு அடிப்படையில் அவர் விளக்கினாலும், அரசியல், பொருளாதாரக் காரணிகளை அவர் மறுப்பதில்லை) இவ்வாறு உருவாகிய வரலாற்று வடிவங்களும் கருத்தாக்கங்களும் பின்னர் முற்றிலும் மாறுபட்ட அரசியல், சமூகக் களங்களில் புகுத்தப்பட்டதையும், அவ்வாறு புகுத்தப்பட்ட வடிவங்களும் கருத்தாக்கங்களும் அந்தச் சமூகக்களங்களில் நிலவும் அரசியல், சித்தாந்த வடிவங்களுடன் எவ்வாறு இணைக்கப்பட்டன என்பதையும் அவர் விளக்குகிறார். தேசங்களின் உருவாக்கம் என்பது உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக நிகழவில்லை, நிகழ்வதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

தேசம் என்பது ஐரோப்பிய வரலாற்றிலும் சிந்தனையிலும் எவ்வாறு உருத்திரட்சி பெறத் தொடங்கியது என்பதை விளக்கும் ஆண்டர்ஸன், பதினெட்டாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் தேசியத்தின் எழுச்சி, மதச்சிந்தனைகளின் வீழ்ச்சி ஆகியன ஒரே சமயத்தில் நிகழ்ந்தாகக் கூறுகிறார்.

ஐரோப்பாவில் தேசங்கள் தோன்றுவதற்கு முன்பு, கிறிஸ்துவ மதம்தான் ஐரோப்பிய மக்களிடம் தாங்கள் ஒரு சமூகம் என்ற உணர்வை உருவாக்கி வளர்த்து வந்தது என்று ஆண்டர்ஸன் குறிப்பிடுகிறார். இவ்வகையில் ஐரோப்பிய மக்கள் எல்லார்க்கும் பொதுவான ஒரு கிறிஸ்துவ நாகரிகம் இருந்து வந்தது எனக் கூறலாம். மதம் என்ற பண்பாட்டு அமைப்பைப் பற்றிய சில விளக்கங்கள் தருகிறார் ஆண்டர்ஸன். உலகின் மாபெரும் மதங்கள் யாவும் மரணம், மரணத்தைக் கடந்த நிலை ஆகியன பற்றிய அக்கறையுடையன. அப்பிரச்சினைகளைப் பற்றிய விளக்கங்களையும் தீர்வுகளையும் வரையறுத்து வழங்குகின்றன. நான் ஏன் வாழ்க்கையில் தற்போது ஏதும் பெறவில்லை? எனது தாய் என் திடீரென மரணமடைய வேண்டும்?, எனது மகளுக்கு ஏன் சித்த சுவாதீனம் ஏற்பட்டு விட்டது?, மூப்பு, மரணம், வேதனை, துயரம். துக்கம் ஆகியவற்றுக்குக் காரணம் என்ன?, மரணம்தான் வாழ்வின் முடிவு என்றால் வாழ்வின் பொருள்தான் என்ன? மரணம் தான் வாழ்வின் சாவையும், பிறப்பையும் இறப்பையும் தொடர்புபடுத்திப் பார்ப்பது எவ்வாறு? இவ்வாறு மானுடப் பிரக்ஞையில எழும் இத்தகைய கேள்விகள், மானுட ஆதங்கங்கள் முதலியவற்றில் அக்கறை காட்டிச் செயல்பட்டுத் தம் இருப்பை நியாயப்படுத்தி வந்தன மதங்கள். விதி என்ற ஒன்றின் குருட்டுப் போக்கிற்கு மானுடம் அடிபணிந்து போய்விடா வண்ணம் அவர்கள் தமது வாழ்வை நடத்திச் செல்ல உதவக்கூடிய வழிமுறைகள், அறங்கள் முதலியவற்றை மதம் வகுத்தளித்துள்ளது. குறிப்பிட்ட வாழ்வில் நடக்கும் தனித்தனிச் சம்பவங்களை ஒரே கோவையாகக் காணும் வகையில் துவக்கம் - முடிவு பற்றிய விளக்கங்களை மதம் வழங்குகிறது.


உலகின் தொன்மையான மதங்கள் எனக் கருதப்படும் கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகியன பற்றி ஆண்டர்ஸன் கூறுகிறார்: இம்மதங்கள் மெய்ப்பொருள் விளக்கங்களை அவற்றிற்கே உரிய புனித மொழிகளினூடாகவே வெளிப்படுத்தின. தெய்வீகத்தன்மை கொண்டவையாகக் கருதப்பட்ட அம்மொழிகள் (இலத்தீன், அரபிய மொழிகள்) இனத்தாலும், பேசும் மொழியாலும், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றாலும் ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்ட மக்களுக்கு - மதத்தால் மட்டுமே ஒன்றுபட்டிருந்த மக்களுக்கு - அம்மதம்

**குறிப்பிட்ட வாழ்வில் நடக்கும் தனித்தனிச் சம்பவங்களை ஒரே கோவையாகக் காணும் வகையில் துவக்கம் - முடிவு பற்றிய விளக்கங்களை மதம் வழங்குகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதித்த உண்மைகளை எடுத்துரைத்தன. அந்தத் தெய்வீக மொழிகளான இலத்தீன், அரபு ஆகியனவும், விவிலியம், திருக்குர்ஆன் ஆகிய மறை நூல்களும் 'மாறாத்தன்மை' கொண்டனவாகக் கருதப்பட்டன. கிறிஸ்துவத்தைப் பொறுத்தவரை, அதன் போதனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்கென்றே புனித மொழியான இலத்தீனில் தோச்சி பெற்ற போதகர்கள் வளர்த்தெடுக்கப்பட்டனர். கிறிஸ்துவ மதத்தின் செல்வாக்கைப் பேணிக் காப்பதையே தமது கடமையாகக் கொண்ட அவர்கள், தமது இலத்தீன் மொழி அறிவைக் கொண்டே ஐரோப்பியக் கண்டத்திலும் கிறிஸ்துவம் பரவியிருந்த பிற இடங்களிலும் அம்மதத்தின் ஒருமையை நிலை நிறுத்தனர்.



சமுதாயத்தில் மதம் என்ற பண்பாட்டு அமைப்பு பெரும் தாக்கங்களை ஏற்படுத்திச் செயல்பட்டு வந்த அதே வேளையில், பரந்துபட்ட மக்களின் வாழ்வை வடிவமைக்கும் மற்றொரு அமைப்பும் செயல்பட்டு வந்தது மத்தியகால ஐரோப்பியச் சமூகங்கள் யாவும் அந்த அமைப்பின் அடிப்படையிலும் அதன் ஊடாகவும் தமது அன்றாட வாழ்வை நடத்திச் சென்றன. அதுதான் முடிமன்னனின் மேலாதிக்கத்தை ஏற்று இயங்கிய படிநிலைச் சமூக அமைப்பு ஆகும். முடிமன்னனை மையமாகக் கொண்டிருந்த அந்த அமைப்பு மன்னனின் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் நிலைநிறுத்தி அவற்றைச் சித்தாந்த ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் நியாயப்படுத்தியது.


ஒரு அரசர் குடும்பம் பிற அரசர் குடும்பங்களிலிருந்து பெண் எடுப்பதாலும் அல்லது அக்குடும்பங்களுக்குப் பெண் கொடுப்பதாலும் மன்னனின் அதிகாரம் உத்தரவாதம் செய்யப்பட்டது. திருமணங்கள் வழியாக ஏற்படுத்தப்பட்ட உறவுகள் அவ்வப்பொழுது விரிசல்கள் ஏற்படுவதும் பிற சமயங்களில் சுமுகமான உறவுகள் இருப்பதும் இயல்பாக இருந்தன. மன்னனின் அதிகாரம் சில சமயங்களில் மேலோங்கவும் சில சமயங்களில் குன்றவும் திருமண உறவுகள் காரணமாக இருந்தன. ஆனால் வளர்ந்தும் தேய்ந்தும் வந்த இந்த அதிகாரம்தான் பல்வேறு இனமக்களுக்கு ஒருவர் மன்னனாக இருப்பதற்குக் காரணமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட இனத்தவரால் அவன் இன்று வெறுக்கப்படலாம்; ஆனால் அவர்களிடம் பெண் கேட்டுச் செல்வானேயாகில் அவன் அவர்களில் ஒருவனாகி விடுகிறான்!

மதத்தின் மேலாண்மையும் படிநிலைச் சமூகத்தின் நிலைத்த தன்மையும் உலுக்கப்பட்ட காலத்தில்தான் தேசம் என்ற ஒரு அமைப்பு, அக்காலத்தின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உருவாகத் தொடங்கிற்று என்று கூறுகிறார் ஆண்டர்ஸன். ஐரோப்பிய வரலாற்றில் அறிவொளிக் காலம் எனக் கருதப்படும் 18ஆம் நூற்றாண்டில்தான் தேசியங்கள் எழுந்தன. அந்த நூற்றாண்டு கண்ட விஞ்ஞான அறிவின் வளர்ச்சி, மத நம்பிக்கையை அச்சுறுத்துவதாக இருந்தது. பிறப்பு, இறப்பு, மரணத்திற்குப் பிந்திய வாழ்வு முதலியவற்றைப் பற்றி மதம் முன்வைத்த வாதங்களைக் கேள்விக்குட்படுத்தியது விஞ்ஞான அறிவு. ஆறுதல் தந்துவந்த மதத்தில் மானுடருக்கு இருந்துவந்த நம்பிக்கை குறைந்து வர, வாழ்வையும் பேரண்டத்தையும் தனித்து எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள் மக்கள். பரலோகத்து இன்பம் தனக்காகக் காத்திருப்பதாக எண்ணி, பூலோகத்துத் துயரங்களைச் சகித்துக் கொண்டு வாழந்த மக்கள், அந்தப் பரலோகம் என்பது வெறும் கற்பனையே என்பதை அறிய வந்தனர். மதம் போதித்த முக்தி, மோட்சம் என்பன வாழ்வின் பொருளை உணர்த்துவதாக இல்லை என்பதை உணர்ந்தனர். பழைய கேள்விகளுக்கு (நான் ஏன் பிறந்தேன்? எனக்கு விதிக்கப்பட்ட மார்க்கம் என்ன? எனது வாழ்வின் முடிவை எவ்வாறு எதிர்கொள்வது?) விடை காணப்

**மதத்தின் மேலாண்மையும் படிநிலைச் சமூகத்தின் நிலைத்த தன்மையும் உலுக்கப்பட்ட காலத்தில்தான் தேசம் என்ற ஒரு அமைப்பு, அக்காலத்தின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உருவாகத் தொடங்கிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதிய தேடல்களில் மானுடம் தன்னை ஈடுபடுத்த வேண்டியிருந்தது.

ஒரு மாபெரும் பண்பாட்டு அமைப்பாக இயங்கிய மதத்தின் செயல்பாடுகள் வலுவிழந்த நிலையில் இச்செயல்பாடுகளை வேறு வகையிலும் வேறு வடிவங்களிலும் நிறைவேற்றக்கூடிய பண்பாட்டு அமைப்பாக, பரந்துபட்ட மக்களிடையே தோழமையுணர்வையும் கூட்டுணர்வையும் நிறுவி மானுட வாழ்விற்குப் பொருள் வழங்கும் அமைப்பாக தேசம் செயல்பட்டது என்று ஆண்டர்ஸன் கூறுகிறார்.

தேசம் என்ற அமைப்பு உருவாகியதற்கான பிற காரணங்கள் என அவர் கூறுபவை: படிநிலைச் சமூக அமைப்பின் நிலைத்த தன்மை உலுக்கப்பட்டமை (சந்தையின் வளர்ச்சியும் பூர்ஷ்வா வர்க்கத்தின் எழுச்சியும்); முடிமன்னனின் செல்வாக்குக் குறைந்தமை; புனித மொழியான இலத்தீனுக்குச் சவாலாக பிற ஐரோப்பிய மொழிகள் வளர்ச்சியடைந்தமை; உலகில் பிற நாடுகள், பிற சமூகங்கள், பிற பண்பாடுகள் ஆகியன இருப்பது பற்றி ஐரோப்பியர்கள் அறிய வந்தமை; விஞ்ஞான வளர்ச்சிகள், தகவல் தொடர்பு ஊடகங்களின் (நாவல்கள், செய்தித்தாள்கள் முதலியன) வளர்ச்சி, காலம் பற்றிய கிறிஸ்துவ மதக் கண்ணோட்டம் மறைந்து, வரலாற்றுணர்வு வளர்ச்சியடைந்தமை. பரந்த சந்தையைப் பிடிப்பதற்கான பூர்ஷ்வா வர்க்கத்தின் தேடலாலும் அதற்கிருந்த உந்துதலாலும் மட்டுமே தேசங்கள் உருவாக்கப்படவில்லை என்றும் ஆண்டர்ஸன் கூறுகிறார்.

**ஐரோப்பிய நாடுகளில் தேசம், தேசியம், தேச அரசு ஆகியவற்றின் உருவாக்கத்தில் மிகப் பெரும் பங்கு வகித்தது அச்சு முதலாளித்துவம் என்று ஆண்டர்ஸனால் அழைக்கப்படும் ஒரு விஷயமாகும்.**

குறிப்பிட்ட புவியியல் பகுதியில் மக்கள் பேசி வந்த மொழிகள் ஏதோ ஒன்றுடன் முதலாளித்துவம் ஏற்படுத்திக் கொண்ட பிணைப்பும் முக்கியப் பங்கு வகித்தது என்கிறார். இந்த மொழிகள் பழைய புனித மொழியின் (இலத்தீன்) அல்லது நிர்வாக நோக்கிற்காக அரசர்களால் பயன்படுத்தப்பட்ட அயல்மொழிகளின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. மார்ட்டின் லூதர் துவக்கி வைத்த புரோட்டடஸ்டண்ட் சீர்திருத்த காலத்தில் விவிலியம் ஜெர்மானிய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு இலத்தீன் மொழியறிவைக் கொண்டிராத பாமர மக்களும்கூட இலத்தீன் மொழிப் புலமையுடைய பாதிரிமார்களின் உதவி இல்லாமலேயே ஆன்மீக உலகை நேரடியாகச் செய்றடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

## அச்சு முதலாளித்துவம்

ஐரோப்பிய நாடுகளில் தேசம், தேசியம், தேச அரசு ஆகியவற்றின் உருவாக்கத்தில் மிகப் பெரும் பங்கு வகித்தது அச்சு முதலாளித்துவம் (Print Capitalism) என்று ஆண்டர்ஸனால் அழைக்கப்படும் ஒரு விஷயமாகும். அதாவது, குறிப்பிட்ட வர்க்க நலன்களைக் கொண்டவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த, மக்களின் பேச்சு மொழிகளிலேயே உருவாக்கப்பட்ட தொடர்பு சாதனங்களான நாவல்கள், பத்திரிகைகள் ஆகியவற்றை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு விற்பனை செய்தமை தேசங்கள் என்ற பெரும் சமூகங்கள் உருவாக்கப்படக் காரணமாக இருந்தன. இவை ஒருவரையொருவர் நேரில் சந்திக்க, பார்க்க, பழக வாய்ப்புள்ள சிற்றூர்வாசிகளடங்கிய சிறு சமூகங்கள் அல்ல. 'அ' என்ற ஊரில் வசிக்கும் ஒரு ஆண்/பெண் 'ஆ' என்ற ஊரில் வசிக்கும் தன்னையொத்த வேறு ஆணையோ பெண்ணையோ நேரில் பார்த்திருக்கமாட்டான்(ள்). ஆனால் இவருக்கும் பொதுவான, இருவரும் பேசுகின்ற /எழுதுகின்ற பொதுவான மொழியில் எழுதப்பட்டுள்ள/வெளி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடப்பட்டுள்ள ஒரு நாவல் அல்லது பத்திரிகையின் மூலமாக அவர்கள் ஒருவருடனொருவர் இணைக்கப்படுகின்றனர். இருவருக்குமிடையே பொது உணர்வுகள் உருவாகின்றன. தாங்கள் நேரில் பார்த்துப் பழகாத வேறு மனிதர்களையும் உள்ளடக்கிய ஒரு தேசிய சமூகத்தை உருவாக்கி அதனை வளர்ச்சியடையச் செய்வதற்கும், அத்தகையதொரு சமூகத்தைக் கட்டிக்காக்கின்ற தேசியத்தின் வளர்ச்சிக்கும் தொடர்பு சாதன நுட்பங்களின் வளர்ச்சியும் அச்சாதனங்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்களும் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

இத்தகைய தேசியம் பரவலாகி வந்ததற்குக் காரணம் அது மக்களின் இறையாண்மை (Sovereignty of the People) என்ற முழக்கத்தை எழுப்பியது; அரசவைகளிலும் மத நிறுவனங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்த புனித மொழிகள், அயல்மொழிகள், உயர்குடியினர் பயன்படுத்திய மொழிகள் ஆகியவற்றுக்கு மாறாக மக்கள் பேசி வந்த மொழிகளின் வளர்ச்சியை ஊக்குவித்தது; மக்களிடையே வரலாற்றுணர்வை வளர்த்தது. அச்சு - முதலாளித்துவமும் தொடர்பு சாதன நுட்பங்களும் தோன்றுவதற்கு முன்பு அரசர்கள், அரசுகள், வரலாறு ஆகியன பற்றிய அறிவு கற்றறிந்த உயர்குடியினரிடம் (பாதிரிகள், மதத்தலைவர்கள்) மட்டுமே இருந்தது. அவை தோன்றிய பிறகு வரலாறு பற்றிய உணர்வும் அறிவும் மக்களிடையே பரவலாகச் சென்றடைந்தன.

வட்டார வேறுபாடுகள் நீங்கிய ஒரேபடித்தான மொழிகள், தேசிய மொழிகள் உருவாவதற்கும் அச்சு - முதலாளித்துவம் முக்கிய பங்காற்றியது. இத்தகைய மொழிகள் பரவலாக்கப்பட்டதன் காரணமாக சமுதாயமும் ஒரேபடித்தான தன்மையைப் பெற்றது. இந்த ஒரேபடித்தான தன்மை முதலாளித்துவ உற்பத்திக்கும் பரிவர்த்தனைக்கும் இன்றியமையாததாகும். புரட்சிக்குப் பிந்திய பிரெஞ்சு அரசு, பாரிஸ் நகரில் பேசப்பட்டு வந்த பிரெஞ்சு மொழியையே நாடு முழுவதற்கும் பொதுவான பிரெஞ்சு மொழியாக்குவதற்காக கடுமையான எல்லா முயற்சிகளையும் செய்து அதில் வெற்றி பெற்றது. வட்டார வேறுபாடுகளைக் கொண்ட வட்டார மொழிகள் ஊக்குவிக்கப்படவில்லை.

வட்டார வேறுபாடுகளையெல்லாம் உள்ளிழுத்துக் கொண்ட தேசங்களாகவே பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவை தோன்றின. ஆயினும் பிரான்ஸில் மட்டுமே தேசியம் என்பதும் ஜனநாயகத்தின் வளர்ச்சியும் ஒரே சமயத்தில் உருவாயின. இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அத்தகைய நிலைமைகள் இருக்கவில்லை.



அவற்றின் அரசியல் - சட்ட வடிவமாகவே அங்கு அரசுகள் அமைந்தன. ஒரு தேசம் - ஒரு அரசு என்கிற வகையில் தேச - அரசு (Nation - State) உருவாயிற்று. ஐரோப்பிய கிறிஸ்தவ நாகரிகமும், பண்பாட்டு மரபும் நிலவிய நிலப்பகுதியில்தான் பல்வேறு மூலதனச் சக்திகள் உருவாயின. ஆனால் அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட மொழியுடன் தன்னை இனங்காட்டிக் கொண்டதன் மூலம் பழைய பண்பாட்டிலிருந்தும் அதற்கு எதிராகவும் தேசியப் பண்பாட்டை, தேசத்தை உருவாக்கின.


## ஆட்சியாளரின் தேசியம்

இத்தகைய மொழில் தேசியத்திற்குப் (Language Nationalism) பிறகு 'ஆட்சியாளரின் தேசியம்' (Official Nationalism) என்று ஆண்டர்ஸன் பெயரிட்டழைக்கும் தேசியம் தோன்றியது. இது ஜார் ரஷ்யாவில் (பின்னர் சோவியத் யூனியனில்) ஊக்குவிக்கப்பட்ட தேசியமாகும். பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் கூட்டங்களைக் கொண்டிருந்த ஜார் ரஷ்யாவின் ஆட்சியாளரின் தேசியத்தின் முக்கிய அம்சம், ரஷ்ய மொழி பேசாத மக்கள் வாழும் பகுதிகளை ரஷ்யமய-

**வட்டார வேறுபாடுகள் நீங்கிய ஒரேபடித்தான மொழிகள், தேசிய மொழிகள் உருவாவதற்கும் அச்சு - முதலாளித்துவம்முக்கிய பங்காற்றியது. இத்தகைய மொழிகள் பரவலாக்கப்பட்டதன் காரணமாக சமுதாயமும் ஒரேபடித்தான தன்மையைப் பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாக்குதலாகும். பால்ட்டிக் நாடுகளிலும் இஸ்லாமிய (மத்திய ஆசிய) நாடுகளிலும் வலுக்கட்டாயமாக ரஷ்ய மொழி ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டது. இஸ்லாமிய மரபுகளும் பாரசீக - அராபிய மரபுகளும் நிராகரிக்கப்பட்டு அந்த நாட்டு மொழிகள் மீது ரோமன் வரிவடிவம் திணிக்கப்பட்டது. பிறகு ஸ்டாலின் காலத்தில் சிரில்லிக் (ரஷ்ய) வடிவத்திலேயே அம்மொழிகள் எழுதப்பட வேண்டும் என்கிற அளவுக்கு ரஷ்யமயமாதல் நிகழ்ந்தது.

ஐரோப்பிய அனுபவங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட அரசியல், பொருளாதார, பண்பாட்டு அனுபவங்களைக் கொண்ட உலகின் பிறபகுதிகளிலும் கூட ஐரோப்பிய தேச - அரசை முன்மாதிரியாகக் கொண்ட தேச - அரசுகளை உருவாக்கும் போக்கு வளர்ந்ததை ஆண்டர்ஸன் தமது நூலில் விரிவாக விளக்குகிறார். காலனியாதிக்கத்தின் வழியாகவே இவ் அனுபவங்கள்' காலனி நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்த நாடுகள் பலவற்றிலும் தேசியத்தை உருவாக்கியவர்கள் பூர்ஷ்வா (வாணிப) வர்க்கங்கள் அல்ல. இந்த தேசியம் அவர்களின் நலன்களுக்குப் பலசமயங்களில் சேவை புரிந்தபோதிலும் மாறாக, மேலை மரபு - கீழை மரபு ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு கலப்புச் சூழ்நிலைமையில் உருவாகிய அறிவாளிகள் தான் இங்கு தேசியத்தை உருவாக்கினர் என்கிறார் ஆண்டர்ஸன். (இவர்களை இருமொழி அறிவாளிகள் (Bilingual Intellectuals) என்ற பெயரால் அழைக்கிறார்).

**இந்து என்ற கருத்தாக்கத்தை முதலில் புனைந்தது அராபியர், ஆங்கிலேயர் போன்ற வெளிநாட்டவர்தாம். எனினும், இந்துமதம் என்பது ஒரு பண்டைய நாகரிகத்துப் பழக்க வழக்கங்களின் தொகுப்பு என்றே கூற வேண்டும்.**

ஆண்டர்ஸனின் மேற்காணும் கருத்துகளின் அடிப்படையில் இந்தியாவில் வளர்ந்த தேசியம் பற்றி இனி காண்போம்.

## இந்திய தேசியமும் இருமொழி அறிவாளிகளும்

இந்தியாவில் தேசியமும், பூர்ஷ்வா ஜனநாயகமும் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகளிலேயே தோன்றின. இந்திய தேசியம் என்ற ஒரு அரசியல் இயக்கம், தேசியத் தனித்தன்மை அல்லது அடையாளம், தேசியச் சித்தாந்தம் ஆகியன இங்கு மதத்தின் வீழ்ச்சியையொட்டி எழுந்தவை அல்ல. மாறாக ஒருவகையான இந்து மீட்பு வாதம்தான் மேற்காணும் மூன்று விஷயங்களும் உருவாவதற்குக் காரணமாக இருந்தது என்று கூறலாம்.

இந்து என்ற கருத்தாக்கத்தை முதலில் புனைந்தது அராபியர், ஆங்கிலேயர் போன்ற வெளிநாட்டவர்தாம். எனினும், இந்துமதம் என்பது ஒரு பண்டைய நாகரிகத்துப் பழக்க வழக்கங்களின் தொகுப்பு என்றே கூற வேண்டும். இந்த நாகரிகம் தென்னாசியா நெடுகப் பரவியிருப்பதால், தென்னாசிய - குறிப்பாக இந்தியா என்ற நிலப்பரப்பு - நாகரிக அடிப்படையில் ஒன்று பட்டிருப்பதாகக் கொள்ளலாம். இந்து மதத்தின் தனிமுத்திரையாக ஆதி முதற் கொண்டே இருப்பது சாதி முறையும் சாதித் தனித்துவமும்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இச் சாதி முறை பல பிரிவுகளைக் கூட்டுச் சேர்த்துக் கொள்ளவும் எல்லாப் பிரிவுகளுக்கும் இடமளிக்கவும் வல்ல ஒரு அமைப்பாக உள்ளது. ஒரு பக்கம் எண்ணற்ற 'சாதிகளும் - சாதிக்கு வெளியே' என்ற மிக இறுக்கமான, சிறிதும் நெகிழ்ச்சியற்ற தன்மையும் நிலவுகிறது. இந்த நெகிழ்ச்சியற்ற அமைப்புக்குள்ளேயே கணிசமான அளவுக்கு உயர்குடியாக்கத்திற்கும் இடம் இருக்கிறது. இதன் காரணமாகவே, முகலாய அரசு உட்படப் படையெடுத்து வந்த பல அந்நியர்களிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்த 'இந்துக்கள்' தமது பண்பாட்டு - நாகரிக ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொண்டனர்.

இந்து மதத்தின் குறியீடுகளாக விளங்கும் தெய்வங்கள் பெருகி வந்துள்ளன. அதே சமயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய மதங்களில் இருப்பதுபோல, எல்லாவற்றையும் தொகுத்து முறைப்படுத்துதல் என்பது இந்த சமயத்தில் சாத்தியமில்லாது போயிற்று. ஏனெனில் முன்கூட்டியே வரையறுக்க முடியாத, கட்டிறுக்கமற்ற (கருத்து முதல்வாதத்) தத்துவங்களையே இந்து மதம் கொண்டு வந்துள்ளது.

பிரிட்டிஷ் காலனியாட்சியால் ஏற்பட்ட நவீன மயமாக்கலே இந்து சமயத்திற்கு ஏற்பட்ட முதல் மரண அபாயமாகும். ஆங்கிலேயர் கொண்டு வந்த நவீனத் தொழில்கள், சாதி அமைப்புக்குள் ஒரு சாதியினர் மற்றொரு சாதியினரைச் சார்ந்திருக்கும் நிலையைக் குலைத்தது. சாதி அடிப்படையிலான தொழில்களைப் பாதித்து. புதிய சாதிகளைக் தோற்றுவித்தது. ஏற்கெனவே இருந்த சில சாதிகளை அழித்தது. சமூகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் சில சாதிகள் ஏற்றம் பெறுவதைச் சாத்தியமாக்கியது. சாதிகளுக்குள்ளேயே புதிய ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியது. முன்பு ஒருவரிடமிருந்து மற்றொருவர் விலகி வாழ்ந்த சாதியினரை நெருக்கமான, முற்றிலும் புதிய உறவுகளுக்குள் பிணைத்தது. ஆங்கிலேயர் கொண்டுவந்த மேற்கத்திய தாராளவாதக் கருத்துக்கள் பரவத் தொடங்கின. அவை சமத்துவம், அடிப்படை மனித உரிமைகள், சமூக நீதி ஆகியவற்றுக்கான கோரிக்கைகளை ஊக்குவித்தன.

நிலவுகின்ற சமூக, மத, பண்பாட்டு நிறுவனங்கள், நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவார்ந்த மதிப்பீடுகள் தோன்றலாயின; இத்தகைய நிறுவனங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை நியாயப்படுத்தி வந்த மரபுவழி சிந்தனைப் போக்குகளும் விமர்சனத்துக்கு உள்ளாயின. ஆங்கிலேய அரசு தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் புதிய அதிகாரக் கட்டமைப்புகளை உருவாக்கியது. ஏற்கெனவே நிலவிய சமூக அமைப்பைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. பழைய சாதிகள் சிலவற்றைப் புதிய பெயர்களின் கீழ் வகைப்படுத்தியது. இன்று நாம் காணும் சாதிப் பட்டியலை வகுப்பதற்கும் முன்னோடியாக இருந்தது ஆங்கிலேய அரசுதான்.[2]

இதுபோன்ற காரணங்களினால் பழைய சமூக அமைப்பு, தன்னைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றால், தனக்குள் மாற்றங்களை ஏற்படுத்தியே தீர வேண்டும் என்ற நிலை உருவாயிற்று. இந்து தர்மம் என்பது வருணாசிரம தருமத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சாதிய அமைப்புடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருணதருமத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து சமூகம், பொருளாதார நெருக்கடியையும் மட்டுமல்லாது



ஒரு ஆழமான தார்மீக, ஆன்மீக நெருக்கடியையும் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவாகவே, சாதி அடையாளங்களுக்கு அப்பால் எல்லாரையும் ஒன்றிணைக்கும் வகையில் இந்து மத்திற்குப் புதிய விளக்கங்கள் தரப்படலாயின. இந்து மதத்திற்குப் பொதுவான கோட்பாட்டு அடிப்படைகளை உருவாக்கும் முயற்சிகளும் செய்யப்பட்டன. இதன் பொருட்டு பகவத் கீதை போன்ற நூல்களுக்குப் புதிய அர்த்தங்கள் தரப்பட்டன. இந்து மதம், இந்திய நாகரிகம் ஆகியவற்றின் பழம்பெருமைகள் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டன. (இந்து மத்ததை மறுவரையறை செய்யும் செயல்களில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் வட இந்தியாவைச் சேர்ந்த படித்த உயர்சாதி இந்துக்களே) இத்தகைய முறையில் புதிய அர்த்தங்கள் வழங்கப்பட்ட இந்து மதமும் இந்திய நாகரிகமும் இந்திய தேசியத்தின் சிறப்பியல்பாக இருந்து வந்துள்ளன. இந்தியாவின் வரலாற்றை, பண்டைய இந்தியா, முகலாயர் கால இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சிக்கால இந்தியா என்ற ஐரோப்பிய (குறிப்பாக ஆங்கிலேய) சிந்தனையாளர்கள் வகைப்படுத்தினர். இவ்வாறு

**ஆங்கிலேய அரசு தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் புதிய அதிகாரக் கட்டமைப்புகளை உருவாக்கியது. ஏற்கெனவே நிலவிய சமூக அமைப்பைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. பழைய சாதிகள் சிலவற்றைப் புதிய பெயர்களின் கீழ் வகைப்படுத்தியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப்படுத்துவது இந்திய தேசியவாதிகளுக்கு உகந்ததாகவே இருந்தது.

காலனி நாடுகளில் சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய பலர் பெனடிக்ட் ஆண்டர்ஸன் கூறும் இருமொழி பேசும் அறிவாளிகள் (Bilingual Intellectuals) என்ற திணைக்குள் அடங்குவர். இருமொழி பேசும் அறிவாளிகள் என்பதன் பொருள் அவர்கள் இருமொழிகளைப் பேசுபவர்கள் என்பது மட்டும் அல்ல. அவர்கள் யாவரும் தாங்கள் வாழ்ந்த நாட்டின் ஆதிக்க மொழியை நன்கு கற்ற அம்மொழியின் மூலம் ஆதிக்க காலனித்துவ நாடுகளின் (குறிப்பாக மேற்கு ஐரோப்பாவின்) அரசியல். வரலாற்று, பண்பாட்டு மரபுகளை, அல்லது நவீனத்துவம் (Modernity) என்பதைக் கற்றுக்கொண்டவர்கள்.

அவ்வாறு கற்றுக் கொண்டபின் அவற்றைத் தமது சொந்த நாடுகளுக்கும் பொருத்திப் பார்க்க விரும்பியவர்கள். அவர்கள் மேற்கு ஐரோப்பிய தேச - அரசு, ஆட்சியாளரின் தேசியம், மேற்கத்திய பூர்ஷ்வா ஜனநாயக நிறுவனங்கள், நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பம், ஒரு பொது ஆட்சி மொழி ஆகியவற்றைத் தமது நாடுகளிலும் உருவாக்க விரும்பினர். இவற்றைக் காலனியாட்சியாளர்கள் உருவாக்கியிருந்த அரசியல் புவியியல் எல்லைகளுக்குள்ளேயே காலனியாட்சியாளர்களால் தன்னிச்சையாக, தமது சுரண்டலின் பொருட்டு உருவாக்கப்பட்ட ஆட்சி அமைப்புகள் ஆகும். இந்த ஆட்சி அமைப்புகளுக்குள் வாழ்ந்து வந்த பல்வேறு இனங்கள், பல்வேறு மொழி பேசும் சமூகங்கள், பழங்குடிகள் முதலியோர் வரலாற்றுரீதியாகத் தமது இயல்பான வளர்ச்சியைப் பெறுவதை இவ் ஆட்சி அமைப்புகள் தடுத்து நிறுத்தியிருந்தன.

இந்தியாவின் இரு மொழி பேசும் அறிவாளிகளில் பெரும் பாலானவர்கள் இந்திய தேசியக் காங்கிரசின் முக்கியத் தலைவர்களாக இருந்தவர்கள். ஆங்கில அறிவு, மேற்கத்தியப் பண்பாட்டுடன் பழக்கம், மேற்கத்திய தாராளவாதச் சிந்தனைபால் ஒருவித மோகம் ஆகியவற்றைக் கொண்டிருந்த இருமொழி பேசும் அறிவாளிகள் தமக்கிடையே சமத்துவம் நிலவுவதாகக் கருதினர். ஆங்கிலக் கல்வி தமக்கிடையே தோற்றுவித்திருந்த ஒரு செயற்கை ஒருமையில் இச்சமத்துவத்தைக் கண்டனர். ஆங்கிலேய ஆட்சியாளர்களை அவர்கள் எதிர்த்த போதிலும், ஆங்கிலேயர் உருவாக்கிய அரசு அமைப்புகளையோ, அதிகார மையங்களையோ மாற்றியமைக்க விரும்பவில்லை. மாறாக, அவற்றைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளவே விரும்பினர்.

அதே போல ஆங்கில வரலாற்று நிபுணர்கள் பண்டைய இந்திய நாகரிகம், இந்திய வரலாறு, இந்தியப் பண்பாடு ஆகியன பற்றி முன் வைத்தக் கருத்துக்களை இவ்விரு மொழிபேசும் அறிவாளிகள் ஏற்றனர். ஆங்கிலேயரின் வருகையினால் இந்தத் தொன்மையான நாகரிகமும் பண்பாடும் சீரழிந்து போயிருந்ததைப் பற்றித் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். இவ்வாறு ஒரு இந்திய தேசிய அடையாளத்தை உருவாக்கி, அதன் பெயரால் ஒரு சுதந்திர இந்தியாவைக் கட்டியெழுப்ப முனைந்தனர்.

ஆங்கில அறிவு, மேற்கத்தியப் பண்பாட்டுடன் பழக்கம், மேற்கத்திய தாராளவாதச் சிந்தனைபால் ஒருவித மோகம் ஆகியவற்றைக் கொண்டிருந்த இருமொழி பேசும் அறிவாளிகள் தமக்கிடையே சமத்துவம் நிலவுவதாகக் கருதினர்.

**அடிக்குறிப்பு:**

[1] Benedict Anderson, Imagined Communities; Reflectionson the Origin and Spread of Nationalism Verso, London, 1983 (See Chapters 1, 2, 3, 6 & 7)

[2] Achin Vanaik, The Painful Transition :- Boargeois Democracy in India, Verso, London, 1990 (See Chapter 4)

(தமிழகத்தின் முன்னனி ஆய்வாளர்களில் ஒருவரான எஸ்.வி. ராஜதுரை "இந்து இந்தி இந்தியா" என்னும் நூலை 1993ல் எழுதினார். இந்திய தேசியம் என்ற சித்தாந்த வடிவத்தை கொண்டு தமது மேலாண்மையையும் அரசியல் அதிகாரத்தையும் ஆதிக்க சக்திகள் எவ்வாறு நிலைநிறுத்திக் கொண்டுள்ளன என்பதை இந்நூல் விரிவாக ஆய்வு செய்தது. இந்நூலில் மூன்றாம் அத்தியாயமாக எழுதப்பட்ட "தேசம்: ஐரோப்பிய வரலாறும் இந்திய அறிவாளிகளும்" என்னும் பகுதியை இங்கு நாம் மீள்பிரசுரம் செய்துள்ளோம்.

இந்திய தேச உருவாக்கத்தை புரிந்து கொள்வதற்கு தேசம், தேசியம், தேசியவாதம் தொடர்பிலான சமகால சிந்தனைகளை இக்கட்டுரை தொகுத்துத் தருகின்றது. தேசிய இனப்பிரச்சினையை மார்க்சிய கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதற்கான அடிப்படைகளையும் இது தெளிவு படுத்தியுள்ளது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லரின் நாசிசமும்

## வழக்காறும் தேசியப்பண்பாடும்

முனைவர் ஆ.தனஞ்செயன்

இன ஓர்மை, இன விடுதலை, தேசியக் கட்டுமானம், தேச விடுதலை, வர்க்கப் போராட்டம் என்பன உள்ளிட்ட புரட்சிகரமான அரசியல் நிகழ்வுகள் உலக அரங்கில் அரங்கேறிய போதெல்லாம், அந்நிகழ்வுகளின் ஊடுபாவாகப் பண்பாடு பயன்படுத்தப்பட்டிருந்ததைக் கடந்த கால வரலாறு பேசுகிறது. இங்கு பண்பாடு என்று சொல்லும் போது, அது மக்களுடைய வழக்காற்றினையோ பாரம்பரியத்தையோ குறிக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். 19ஆம் நூற்றாண்டு மற்றும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில ஐரோப்பிய நாடுகளின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. இனம், மொழி அடிப்படையில் ஒருங்கிணைந்திருக்க வேண்டிய மக்கள், கூட்டங் கூட்டமாகச் சிதறிக் கிடந்த நிலையில் அவர்களை அன்றைய சூழலில் ஒருங்கிணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தத் தேவையை நிறைவேற்றக் கூடிய ஒருங்கிணைக்கும் சக்தியாக 'இன முன்னோர், புனிதமான ரத்த உறவு, 'பொதுவான ஆன்மா' என்பன போன்றவை முன்னிறுத்தப்பட்டன. இவற்றைத் தேடி இனங் காண்பதற்குரிய ஆதாரங்களாக மக்களுடைய வழக்காறுகள் சுட்டிக்காட்டப்பட்டன. துருக்கி, ஃபின்லாந்து, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளின் நாட்டார் வழக்காற்றியல் அறிஞர்கள், மக்களுடைய வாய்மொழி மரபுகளைச் சேகரித்துத் தொகுத்து வெளியிட்டனர். ஆவணப்படுத்தினர். தேசியத்தைக் கட்டமைக்கும் செயல் திட்டத்தை மையப்படுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

மொழி, இனம், பண்பாடு, தேசியம் என்று இவற்றை ஒருங்கிணைத்துத் தீவிரமான ஒரு அரசியல் சூழல் நிலவச் செய்த நாடு ஒன்றைச் சுட்டிக்கட்ட வேண்டுமென்றால், அது ஜெர்மனியாகத் தான் இருக்கும். மக்கள் வழக்காறுகள் பற்றிய ஆய்வுக்கான அரசியல் தலைமையகத்தைத் தோற்றுவித்த முதல் தேசிய அரசு அடால்ஃப் ஹிட்லரின் தேசிய சோசலிச அரசே ஆகும். 1930களில் ஜெர்மனியில் நாட்டார் இலக்கியப் படைப்புகள் ஏராளமாக வெளியிடப்பட்டன. ஜெர்மானியத் தேசிய உணர்வுகள், மொழி, பண்பாடு மற்றும் ஏனைய மரபுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இனவாதக் கூறுகள் மேற்கண்ட நாட்டார் இலக்கியப் படைப்புகளில் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. இந்த நாசியக் கருத்தாக்கமானது ஹொர்ரன்வோக் (Herrenvolk) எனப்பட்டது.



மொழி, இனம், பண்பாடு, தேசியம் என்று இவற்றை ஒருங்கிணைத்துத் தீவிரமான ஒரு அரசியல் சூழல் நிலவச் செய்த நாடு ஒன்றைச் சுட்டிக்கட்ட வேண்டுமென்றால், அது ஜெர்மனியாகத் தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிர்த்தன்மை கலந்த குருதித் தொடர்பு, மொழி, பண்பாடு, மரபு ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்ட ஒரு கருத்துருவம்தான் நாசிகளின் 'ஹொர்ரன் வோக்' என்னும் கொள்கை ஜெர்மானிய முன்னோடிக் கவிஞரான காட்ஃப்ரைட்வோன் ஹொர்டர் காலம் முதற் கொண்டே வோக் என்னும் சொல், ஒரு வகைப் புதிர்மைப் பொருளையே கொண்டிருந்தது. *1920*-களில் அச்சொல், அரசியல் ரீதியிலான புதிய அர்த்தத்தைக் கொள்ளத் தொடங்கியது. 'வோல்க்' என்றால் 'தேசம்' என்று அர்த்தம் மாறியது. 'தேசிய இன ஒருமைப்பாடு', 'ஜெர்மானிய இனமேலாண்மை' என்னும் ஹிட்லரின் அரசியல் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்த நாசிகள், அது வரையில் தாங்கள் போற்றிக் கொண்டாடிக் கொண்டிருந்த ஹன்ஸ் நாவ்மன் என்பவருடைய நாட்டார் வழக்காற்றின் தோற்றக் கொள்கையை உதறித் தள்ளினார். "நாட்டார் வழக்காறுகள் மேட்டுக்குடி மக்களான அறிவு ஜீவிகளிடமிருந்தே தோன்றின. பின்னர், அம்மக்களிடமிருந்தே வேளாண்குடி மக்களிடம் சென்று சேர்ந்தன." என்று ஹன்ஸ் நாவ்மண் முன் வைத்த வழக்காறுகளின் தோற்றம் பற்றிய படியிறக்கக் கோட்பாட்டைக் கைவிட்டனர். அத்துடன், தங்களுடைய ஆன்மீக முன்னோரைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நாசிச நாட்டார் வழக்காற்றியலாளர்கள், தங்கள் நாட்டின் புகழ்பெற்ற நாட்டார் வழக்காற்றியல் அறிஞர்களான கிரிம் சகோதரர்கள், மண்ஹாட், கோஹ்லர், போல்தே போன்றோரைப் புறக்கணித்தனர்.

**ஹிட்லரின் அரசியல் வியூகத்தில் நாட்டார் வழக்காற்றியலின் இடம் மேலும் முக்கியத்துவம்**

இவ்வாறு, முன்னோடி நாட்டார் வழக்காற்றியல் அறிஞர்களைப் புறக்கணித்த நாசிசவாதிகள், "நாட்டிற்கான பணிகளில், நாட்டார் வழக்காற்றியலைப் பயன்பாட்டு அறிவியலாகப் பயன்படுத்த வேண்டும்" என்னும் கொள்கையை முன்வைத்த வில்ஹெல்ம் ரெய்ல் (Wilhelm Reihl) என்பவரை அரவணைத்துக் கொண்டனர். சமூகவியலறிஞரும், பயண எழுத்தாளருமான இவர் *1858*-ல் 'நாட்டார் வழக்காற்றியல் ஒரு விஞ்ஞானமே' என்னும் நூலை வெளியிட்டிருந்தார். 'நாட்டார் வழக்காற்றியலும், சமூக அறிவியல்களும் ஜெர்மானியப் பண்பாட்டின்பால் முழுக் கவனத்தையும் செலுத்துவதோடு, அத்தகைய அறிவினை நாட்டின் நடைமுறை நோக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும்" என்று வலியுறுத்தினார். ரெய்லின் இக்கருத்துக்களை நாசிவாதிகள் வரவேற்றனர்.

இவ்வாறு, ஹிட்லின் நாசியக் கொள்கையோடு இணைத்துக் கொண்டு செலுத்தப்பட்ட ஜெர்மானிய நாட்டார் வழக்காற்றியல், *1920*-களின் இறுதியில் மற்றொரு கட்டத்தை எட்டியது. அந்நாட்டின் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் நாட்டார் வழக்காற்றியல் புகழ்பெற்ற பாடமாக வளர்ந்தது. விருப்பப் பாடமாகவும் துணைப் பாடமாகவும் நாட்டார் வழக்காற்றியலை விரும்பிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

ஹிட்லரின் அரசியல் வியூகத்தில் நாட்டார் வழக்காற்றியலின் இடம் மேலும் முக்கியத்துவம் பெற்றது. தீவிரமாக ஜெர்மானிய தேசிவாத்தைத் தூண்டிவிட்டு இயக்கியவரான ஹிட்லர் ஜெர்மானிய மக்கள் பண்பாட்டின் பாதுகாவலராகவும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டார். தன்னுடைய அரசியல் சித்தாந்தத்தின் மையப் பொருளாக 'நாட்டார் மயப்படுத்தப்பட்ட அரசையே' (Folkish State) எடுத்துக் கொண்டார். *1937*ல் நாட்டார் வழக்காற்றியல் கழகம் உருவாக்கப்பட்டது. ஹிட்லரின் அரசில் முதன்மை நிலையில் இடம் பெற்றிருந்த முக்கியப் பிரமுகர்கள், நாட்டார் வழக்காற்றியல் கழகத்தின் நிறுவனர்களாக விளங்கினர்.

நாசிசப் புரட்சியின் தத்துவவாதியான ஆல்ஃப்ரட ரோசன்பெர்க், ஹிட்லரின் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த வால்டர் டாரே (Walter Darre), ஹிட்லர் இளைஞர் இயக்கத் தலைவரான பால்தூர் வான் ஸ்சிராக் (Baldur on Schirach) ஹிட்லர் அமைச்சரவையில் முக்கியத்துறையான உள்துறை அமைச்சகத்தின் மந்திரியான ஹென்ரிச் ஹிம்லர் (Heinrich Himmler) ஆகியோர், நாட்டார் வழக்காற்றியல் கழக நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவெறியும் இனப்படுகொலையும்

இவ்வாறு ஹிட்லரின் ஜெர்மனியில் நாட்டார் வழக்காற்றியல் அதிமுக்கியத்துவம் பெற்ற நிலையில் அது கண்மூடித்தனமான தேசியவாதம், இனவெறி, பிற இனங்களின் மேல் மிதமிஞ்சிய வெறுப்பு ஆகியவற்றினைத் தூண்டிவிட்டு, நாசிசசித்தாந்தத்திற்குப் பேரளவில் உதவியது. ஜெர்மனியில் நாட்டார் வழக்காற்றியலைக் குறிக்கும் சொல்லான வோல்க்ஸ்குந்தே (Volkskunde) என்பதை ஹிட்டலரும் அவருடைய நாசிஞூக் கட்சியும் ஒரு சில நோக்கங்களுக்காகத் தெளிவாகப் பயன்படுத்திக் கொண்டனர். 'ஜெர்மானியர்கள் அனைவரும் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள், உலக இனங்களிலேயே மிகவும் உயர்ந்தவர்கள்' என்று ஹிட்லர் கருதினார். இந்த ஜெர்மானிய இன மேலாண்மை உணர்வு காரணமாக ஜெர்மனியில் இருந்த யூதர்கள் உட்பட பிற இனத்தினர் அனைவரையும் நாட்டை விட்டு வெளியேற்றவும் விரும்பினார். இவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் திட்டத்தோடு நாட்டார் வழக்காற்றியல் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. பிற நாடுகளின் மீதான போரை நியாப்படுத்துவதற்கும் வழக்காறு பயன்படுத்தப்பட்டது. நாசிய சித்தாந்தத்தை நோக்கி மக்களைத் திரட்டுவதற்கும் நாட்டார் வழக்காறுகள் கையாளப்பட்டன. உதாரணத்திற்கு இந்துப் பண்பாட்டிலிருந்து கடன் வாங்கப்பட்ட ஸ்வஸ்திக் சின்னத்தைக் குறிப்பிடலாம். நாசிக் கட்சியின் தேசியச் சின்னமாக ஸ்வஸ்திக் பயன்படுத்தப்பட்டது. நாசிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களின் ஜெர்மானியப் பண்பாட்டை ஆரிய இனத்தோடு இணைத்து நோக்கச் செய்வதற்கு ஸ்வஸ்திக் சின்னம் பயன்பட்டது. இந்தியச் சூழலில் ஸ்வஸ்திக் சின்னத்திற்கு வளமை, நற்குறி ஆகிய பொருளுண்டு. ஆனால், உலகெங்கும் உள்ள யூதர்களுக்கோ, அச்சத்தையும் மரணத்தையும் உட்கொண்டிருக்கும் சின்னமாகத் தோன்றியது. ஓர் அரசியல் சூழலில் நாட்டார் வழக்காற்றினைத் தவறாகவும் மோசடியாகவும் பயன்படுத்தியதற்கு இது ஒரு மிகவும் பயங்கரமான உதாரணமாகும். (Claus, Korom, 1991:18)).

யூதர்களுக்கு இணையாக வெறுத்து ஒதுக்கப்பட்டு, நாசிகளால் மிகவும் கொடூரமாகத் துன்புறுத்திக் கொல்லப்பட்டவர்கள் நாடோடிகள் (Gypsies). சித்ரவதை முகாம்களில் அடைத்து வைத்துக் கொல்லப்பட்ட ஜிப்சிகளின் எண்ணிக்கை மட்டும் சுமார் ஐந்து லட்சம் பேர் என்று கூறப்படுகிறது. (D.P. Singhal, 1982: 14) முகாம்களில் தாங்கள் அடித்து வதைக்கப்பட்டதை ஜிப்சிகளின் பாடல்கள் பல கண்ணீரோடு புலம்பி வெளிப்படுத்துகின்றன.



*முகாமிலே, அந்த முகாமிலே*
*அவர்கள் கடுமையாக உழைத்தார்கள்*
*உழைப்புக்குப் பலனாக அடி உதையும் பட்டார்கள்*
*அய்யோ என்னை உதைக்காதே*
*அய்யோ என்னை அடிக்காதே*
*இல்லேன்னா ஒரே அடியா என்னைக் கொன்று போட்டு விடு*
*நான் பெற்ற குழந்தைகள் வீட்டில் உண்டு*
*நான் செத்தால் யார் வளர்ப்பார்கள் சொல்லு?*

(செக்கஸ்லோவேக்யா, ஜிப்சி பாடல்)

### ப்ரெக்ட்டின் ஃபாசிச எதிர்ப்பு

இவ்வாறு ஆரிய இனத்தவர் என்று தங்களைக் கற்பிதம் செய்து கொண்ட ஜெர்மானியர்களால் யூதர்களும், ஜிப்சிகளும், வேறு பல இனத்தவர்களும் அழித்தொழிக்கப்படுவதற்குக் காரணமான இனவெறி ஜெர்மானியர்களிடையே தலைவிரித்தாடிய சூழலில், நாசிச அரசியலையும் அதன் அட்டூழியங்களையும் எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் மூர்க்கமான தாக்குதலுக்கு ஆளானார்கள். பெர்ட்டோல்ட் ப்ரெக்ட் (Bertolt Brecht) போன்றோர் தலை-

**யூதர்களுக்கு இணையாக வெறுத்து ஒதுக்கப்பட்டு, நாசிகளால் மிகவும் கொடூரமாகத் துன்புறுத்திக் கொல்லப்பட்டவர்கள் நாடோடிகள் சித்ரவதை முகாம்களில் அடைத்து வைத்துக் கொல்லப்பட்ட ஜிப்சிகளின் எண்ணிக்கை மட்டும் சுமார் ஐந்து லட்சம் பேர் என்று கூறப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவாக இருந்து, நாசிச எதிர்ப்பில் செயல்பட்டனர். 1930களில் நட்டார் (Folk) என்று பொருள் தரக்கூடிய Volk என்னும் ஜெர்மானிய மொழிச் சொல்லிற்குப் பதிலாக மக்கள் என்று பொருள் கொடுக்கக்கூடிய ஜெர்மானிய மொழிச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று ப்ரெக்ட் வலியுறுத்தினார். தலை மறைவாக இருந்து இயங்கிய நாசிச எதிர்ப்பாளர்கள் வெளியிட்ட ஃபாசிச எதிர்ப்பு இதழ் ஒன்றில், ப்ரெக்ட்டின் கோரிக்கை 'உண்மையை எழுதுவதில் உள்ள ஐந்து வகையான இடர்ப்பாடுகள் என்னும் தலைப்பில் 1934ல் வெளியானது. ஜெர்மனியின் தேசிய சோசலிச அரசின் (Nationalist Socialist State) அரசியல் செயற்பாட்டிற்கு உட்படும் வகையில் 'வோக்' என்பதன் கருத்தாக்கம் ஒரு சார்பினதாக அரசியல் மயப்படுத்தப்பட்டதால், ப்ரெக்டுக்கு அதனை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்தப் பின்னணியின் ஊடாகத் தான் ஹெர்மண் பாசிங்கரின் 'நாட்டார் வழக்காறு பற்றிய விரிவாக்கக் கோட்பாடு' அவருடைய தொழில் நுட்ப உலகில் நாட்டார் பண்பாடு என்னும் நூலின் வாயிலாக முன்வைக்கப்பட்டது.

**தற்காலச் சமூகத்தில் நிகழும் மாற்றங்களை எதிர்கொண்டு போராடி அவற்றோடு ஒத்தியைந்து போகும் வகையில், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளை நவீன யுகத்தை நோக்கி நெறிப்படுத்தியவர் என்று பாசிங்கர் கருதப்படுகிறார்.**

## தொழில் நுட்ப உலகில் நாட்டார் பண்பாடு

தொழில் நுட்ப உலகில் நாட்டார் பண்பாடு (Folk Culture in a World of Technology) என்னும் இந்நூல் ஹெர்மன் பாசிங்கர் (Herman Bausinger) ஜெர்மனியில் எழுதினார். 1961ல் ஆங்கிலத்தில் இந்நூல் வெளியான போது, (மொழியாக்கம்: Elke Dettener) அமெரிக்காவில் எந்த ஒரு பத்திரிகையிலும், இது பற்றிய விமர்சனம் எதுவும் வெளிவரவில்லை. ஆய்-வுலகிலும் இது அவ்வளவாகக் கண்டு கொள்ளப்படவில்லை. ஆனால், ஜெர்மனியில், நூல் வெளியாகி 25 ஆண்டுகள் கழித்து, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளில் பாசிங்கரின் கோட்பாட்டு முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்பட்டது; விவாதிக்கபட்டது.

## பாரம்பரியப் பண்பாடு பற்றிய விரிவாக்கக் கோட்பாடு

கடந்த சுமார் நாற்பது ஆண்டுகளில் (அ.)நகர வழக்காறுகள், (ஆ.)தற்கால மரபுக் கதைகள், (இ.)வெகுமக்கள் பண்பாடு, (ஈ.)புத்துருவாக்க வழக்காறுகள், (உ.)சுற்றுலாப் பயணிகளுக்குக் காட்சிப்படுத்தி, வியாபாரப்படுத்தப்படும் வழக்காறுகள் எனப் பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய ஆய்வுகளை ஒருங்கிணைத்து, முறைமைப்படுத்தி, ஒரே கோட்பாட்டிற்குள் அடக்குகிறார் பாசிங்கர். மேற்குறிப்பிட்ட நகர்சார் வழக்காறுகள் முதல், சுற்றுலாத் தளங்களில் காட்சிப்படுத்தப்படும் வழக்காறுகள் வரையில் யாவும் தொழில்நுட்ப அறிமுகத்தால் உண்டான விளைவுகளே என்று அவருடைய கோட்பாடுவியாக்கினாம் செய்கிறது.

"தொழில் நுட்ப அறிவின் வளர்ச்சியால், நம்முடைய பாரம்பரியச் சமுதாயம் மாறிப் போய் விட்டதே" என்று கவலைப்பட்ட போது, பாசிங்கர் அதனை வேறுவிதமாகப் பார்த்தார்.

'மனிதனுடைய சுற்றுச் சூழல் மாறும் போது, மரபின் ஜீவன் அல்லது இயக்காற்றல் (Dynamics of Tradition) என்பது படிநிலை மாற்றத்தைப் பெறலாமே ஒழிய, அது மறைந்து போய்விடுவதில்லை' என்று அவர் ஆராய்ந்து கூறினார். இதனை அவர் 'தொழில்நுட்ப யுகத்தில் மரபான பண்பாட்டின் விரிவாக்கம் பற்றிய கோட்பாடாக' முன்வைத்தார்.

இக்கோணத்திலிருந்து பார்க்கும் போது, அவருடைய நூல், புரட்சிகரமான ஒரு படைப்பாகக் கருதப்படுகிறது. மேலும், தற்காலச் சமூகத்தில் நிகழும் மாற்றங்களை எதிர்கொண்டு போராடி அவற்றோடு ஒத்தியைந்து போகும் வகையில், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளை நவீன யுகத்தை நோக்கி நெறிப்படுத்தியவர் என்று பாசிங்கர் கருதப்படுகிறார். மேலும், புனைவியல் பாங்கு, லட்சியமயப்படுத்தப்பட்டு வாழ்க்கை முறை ஆகியவற்றிலிருந்து நாட்டார் வழக்காற்றினை மீட்டெடுத்தவர் என்றும் அவர் சிறப்பித்துப் பேசப்படுகிறார்.

இந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்தில் கிராமத்தோடு வழக்காற்று வடிவங்களை இணைத்துப் பார்ப்பதென்பதே எப்போதும் நம்முடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறையாக இருந்துள்ளது. 'நாட்டுப்புற வழக்காறு', 'நாட்டுப்புறவியல்' எனும் கலைச் சொல்லாட்சிகளும் அதன் விளைவுகளே. ஆனால், பர்சிங்கர் பார்வை வேறு மாதிரியானது. நகரத்தை மையப்படுத்தியது அவருடைய நாட்டார் வழக்காற்றியல் பார்வை. இடுக்கு முடுக்கான, நசநசத்த நகரச் சந்துக்கள், அசுத்தமான காற்று, பல்வேறு இனச்சார்புடைய மக்கள் - என்று இவற்றைக் கொண்ட நகரம்தான், அவருடைய கோட்பாட்டில நாட்டார் வழக்காற்றிற்கான ஓர் இயற்கையான சூழலாக அமைகிறது. அவரைப் பொறுத்த வரையில் நகரம்தான், நாட்டார் வழக்காற்றிற்கான திறந்த வெளியாகவும், தெளிந்த வானமாகவும், மரபு தோய்ந்த கிராமப்புற வேளாண்மைச் சமூகமாகவும் அமைகிறது.

நகரம் - நாடு (கிராமப் புறம்) ஆகிய இரண்டிற்கும் இடையே நிலவும் ஒரு வகை முரண். பழங்கால நாட்டம் (Nostalgia) என்னும் உணர்வில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இம்முரணே நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளின் உந்து சக்தியாகத் திகழ்கிறது. ஆனால், அதுவே, பாசிங்கரின் கோட்பாட்டில் தொழில் நுட்ப உலகின் செயற்பாடகவும் அமைந்து விடுகிறது.

அவ்வாறே, நாட்டார் வழக்காற்றின் ஓர் உரைகல் கருத்தாக்கமாக விளங்கும் மரபு (Tradition) என்பது, பாசிங்கரின் கோட்பாட்டில் முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது, அவருடைய கோட்பாட்டில் முதல் காரணியாக அல்லாமல், சமூகத்தில் நாட்டார் வழக்காற்றின் இறுதி விளைவாக முக்கிய இடம் பெறுகிறது.

மரபு என்பது, மொழி, கலை ஆகியவற்றில் அறிவு மற்றும் விழுமியங்களின் காலங் கடந்து நிற்கும் தொகுப்பாகத் தலைமுறைத் தலைமுறையாகக் கையளிக்கப்படுவதில்லை. மாறாக, அது தொடர்ந்து சீர்குலையும் நிலையினதாகவே உள்ளது. மாற்றங்களின் நெருக்கடிகளுக்கு ஆளாகி, சீர்குலையத் தொடங்குகிறது. ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அம்மரபினைத் தத்தம் புதிய சடங்குகள், நிகழ்த்துதல்கள், வெவ்வேறு வகையான கேளிக்கை வடிவங்கள் ஆகியவற்றில் மீட்டெடுத்துப் பாதுகாக்க முனைகின்றனர். சடங்குகள், நிகழ்த்துதல்கள் போன்றவற்றை உருவாக்குகின்றார்கள். அவசியப்பட்டால் புதிதாகக் கண்டுபிடிக்கின்றனர் அல்லது பழையனவற்றைப் புத்துருவாக்கம் செய்கின்றனர். பாசிங்கரைப் பொறுத்தவரையில், மரபு என்பது பண்பாட்டு அளிப்பாக (Cultural given) அல்லாமல், பண்பாட்டுக் கட்டமைப்பாகப் பார்க்கப்படுகிறது.



**மூன்று முக்கியக் கருத்தாக்கங்கள்**

பாசிங்கரின் நூலில் காணப்படும் சிந்தனைகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் எத்துணை அளவிற்குப் புதியனவாக விளங்கினவோ, அவ்வாறே தற்போதும் திகழ்கின்றன என்று டான்பென்-ஆமோஸ் போன்ற வழக்காற்றியல் அறிஞர்கள் பெருமையோடும் நிகழ்காலத் தேவையை எடைபோட்டும் கூறுகின்றனர். அவருடைய நூலில் காணப்படும் சிந்தனைகளில், முக்கியமாக மூன்று வகையான கருத்தாக்கங்கள் இன்றைக்கும் மிகவும் பொருத்தமானவையாக உள்ளன. அவை:


1. நாட்டிற்கும் வழக்காற்றிற்கும் இடைப்பட்ட தொடர்பினை அறுத்தல் (Denationalization of Folklore).
2. நாட்டார் வழக்காற்றின் விரிவாக்கம் (Expansion of Folklore).
3. நாட்டார் வழக்காற்றினை வணிகமயப்படுத்தல் (Commodification of Folklore).

இம் மூன்று கருத்தாக்கங்களுள், நாட்டார் வழக்காற்றின் விரிவாக்கம் என்பது மிகவும் முக்கியமானது. இடம், காலம் மற்றும் சமூகப் பரி-

***நகரம் - நாடு (கிராமப் புறம்) ஆகிய இரண்டிற்கும் இடையே நிலவும் ஒரு வகை முரண். பழங்கால நாட்டம் என்னும் உணர்வில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இம்முரணே நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளின் உந்து சக்தியாகத் திகழ்கிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணங்களின் அடிப்படையில், நாட்டார் வழக்காற்றின் விரிவாக்கம் என்பது, பாசிங்கரின் முதல்நிலைப் பகுப்பாய்வுக் கருத்தாக்கமாக அமைகிறது. ஆனால், ஏனைய இரண்டு கருத்தாக்கங்களான தேசியத் தொடர்பு அறுப்பு, வணிகமயமாக்கல் ஆகியவை, முதலாவதோடு ஒப்பிடும் நிலையில் முக்கியத்துவம் குறைந்தவை என்று பொருள் அல்ல.

இனி, இம்மூன்று கருத்தாக்களையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

**குறுகிய தேசியவுணர்வு என்னும் கிடுக்குப் பிடியில் இருந்து நாட்டார் வழக்காற்றினை மீட்க வேண்டும் என்று பாசிங்கர் உணர்ந்தார். ஏனென்றால், நாசிச ஜெர்மனியில் குறுகிய தேசிய வாதத்திற்கு மேற்கண்டவாறு நாட்டார் வழக்காறு பயன்படுத்தப்பட்டது.**

### வழக்காற்றின் தேசத்துடனான தொடர்பறுப்பு

ஒரு நாட்டிற்கும் அதன் வழக்காறுகளுக்கும் இடைப்பட்ட தொடர்பினை அறுத்தல் என்பது மரபான பண்பாட்டில் நிகழக்கூடிய நாட்டார் வழக்காற்றுப் படிமுறையைக் (Process of Folklore) குறிப்பிடவில்லை. ஆனால், தற்காலச் சமூகம், நாட்டார் வழக்காறுகளின்பால் உண்டாக்கிக் கொள்ளக் கூடிய ஓர் அணுகுமுறையையே இது குறிப்பிடுகிறது. இது, நாட்டார் வழக்காறுகள் பற்றிய மதிப்பீட்டினைப் பிரதிபலிக்கிறது, அதாவது, நாட்டார் வழக்காறுகள் பற்றிய மதிப்புக் குறைவான (Disvaluation) அணுகுமுறையை மக்கள் சமூகமே உருவாக்கிக் கொள்ள வேண்டுவதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

ஜெர்மனியில், கடந்த காலங்களில், குறிப்பிட்ட மக்களுடைய தேசியச் சார்பு நிலைக்கு, நாட்டார் வழக்காறுகள் இன்றியமையாதவை என்று மதிப்பீடு செய்யப்பட்டன. ஆனால், ஹெர்மன் பாசிங்கர் இதனை வேறுவிதமாகப் பார்க்கிறார். அதாவது, நாட்டார் வழக்காறுகள் தேசத்துடன் கொண்டிருக்கும் ஒட்டுறவின் அடிப்படையில், அவை குறைத்து மதிப்பிடப்பட வேண்டும் என்று வாதிடுகிறார். நாட்டார் வழக்காறுகள் பற்றிய ஆய்வு என்பது, தேசியத்தைக் கண்டறிய உதவும் வழிமுறையாக அல்லாமல், மனித நடத்தை வழிமுறைகளைப் பகுத்தாராய்ந்து, புரிந்து கொள்வதற்கு உரிய வழிமுறையாக அமைய வேண்டும் என்கிறார். தேசியவுணர்வு : நாட்டார் வழக்காறு ஆகிய இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட உறவு என்பது, நவீன அரசியல் சித்தாந்தங்களோடு ஒருங்கிணைக்கப்பட்டது. அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள், நாட்டார் வழக்காறுகளைத் தேசிய உணர்வின் ஆதாரமாகவும் பிரதிபலிப்பாகவும் கருதின. அத்துடன் பிற மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை ஏவுவதற்கும் அத்தேசிய உணர்வைப் பயன்படுத்திக் கொண்டன.

எனவே, இத்தகைய ஒரு நெருக்கடியான சூழல் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் நிலவியதை அனுபவப் பூர்வமாக உணர்ந்த நிலையில்தான், மக்கள் மரபுகளுக்கும் - நாட்டிற்கும் இடைப்பட்ட தொடர்பினை அறுக்க வேண்டிய வழிமுறையைப் பற்றிச் சிந்திக்க முற்பட்டார் பாசிங்கர்.

குறுகிய தேசியவுணர்வு என்னும் கிடுக்குப் பிடியில் இருந்து நாட்டார் வழக்காற்றினை மீட்க வேண்டும் என்று பாசிங்கர் உணர்ந்தார். ஏனென்றால், நாசிச ஜெர்மனியில் குறுகிய தேசிய வாதத்திற்கு மேற்கண்டவாறு நாட்டார் வழக்காறு பயன்படுத்தப்பட்டது. எனவே, பாசிங்கர், தேசிய வாதப் பிடியிலிருந்து நாட்டார் வழக்காற்றினைப் பிரித்தெடுக்க வேண்டுவது அவசியம் என்று உணர்ந்தார். தேசியப் பிடியிலிருந்து நாட்டார் வழக்காற்றினை விடுவித்து, அதனை ஓர் ஆய்வுக் கல்வியாக, சமூக அறிவியலாக (Social Science) மாற்ற வேண்டும் என்று கருதினார். இந்தக் கருத்தின் அடிப்படையில், நாட்டார் வழக்காற்றியலை சமூகவியலின் ஒரு துணைக் கல்விப் புலமாகக் கருத வேண்டும் என்கிறார். இதன் அடிப்படையில், நாட்டார் வழக்காற்றியல் என்பது கலப்பு அறிவுப்புலக் கல்வி நெறிமுறையைப் பெற்றுப் பரிமளிக்க வேண்டிய புலமாக பாசிங்கர் அணுகுகிறார். இப்பண்பாட்டு ஆய்வுக் குறித்து பாசிங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க சமூகவியல் கோட்பாட்டையோ, முறையையோ கொடுக்கவில்லையாயினும், சமூகவியல், நாட்டார் வழக்காற்றியல் இரண்டிற்கும் பொதுவான ஒரு விவாதப் பொருள் (Subject Matter) உள்ளது எனினும் அடிப்படையில், இரண்டினுக்கும் இடைப்பட்ட தொடர்பை அவர் இனம் காட்டுகிறார்.

அதாவது, இரண்டிற்கும் பொதுவான ஆய்வுப் பொருள் என்ற அவர் குறிப்பிடுவது நகரம்தான். நகரம், நாட்டார் வழக்காற்றியலுக்குப் புதிது; ஆனால், சமூகவியலுக்கு அது நீண்ட காலத்தளமாக இருப்பது. இதில், மானிடவியலை விட சமூகவியலுக்குத்தான் கூடுதலான சாதகநிலை இருப்பதாகவும் பாசிங்கர் கருதுகிறார். ஏனெனில், சமூகவியல் கோட்பாடு மற்றும் முறையியலில், நகர் சார்ந்த பிரச்சினைகள், நவீன சமூகம், தொழில் நுட்பத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள், பிரச்சினைகள் போன்றவை முக்கிய இடம் பெறுவதால், சமூகவியல்தான், வழக்காற்றியலைத் தேசியத்திலிருந்து பிரித்தெடுப்பதற்குப் பொருத்தமான துறை என்று அவர் கருதுகிறார்.

ஆய்வுத் தளத்தை கிராமத்திலிருந்து நகரத்திற்கு மாற்றுவது என்பதில்தான் தேசியத்திலிருந்து வழக்காற்றினை / வழக்காற்றியலைப் பிரித்தெடுக்கும் வினைமுறை (Function) இருப்பதாக அவர் பார்க்கிறார். இதன் மூலம், நாட்டார் வழக்காற்றியலில் காணப்படும் கற்பனாவாதம் அல்லது புனைவுநிலை (Romanticism) பின்னுக்குத் தள்ளப்படும். இனம் மற்றும் வட்டார அடிப்படையிலான வேறுபாடுகளைக் களைந்து, ஒருமைப்படுத்தும் சமூகச் சூழலை நாட்டார் வழக்காற்றியல் தனது கவனத்தில் எடுத்துக் கொள்ளும். நகர வாழ்க்கையில் பழமைவாத, விரிவாக்க சக்திகள் இரண்டுமே மரபான பண்பாடுகளில் இயங்கக்கூடிய நகரத்தில் கிராமவாசிகளின் இடப்பெயர்வு நடைபெறுகிறது. ஆனால், அவர்களுக்கு நகரம், பழைய மரபுகளுக்கான சாதகச் சூழலை வகுத்துக் கொடுப்பதில்லை. மாறாக, நகர வாழ்க்கைச் சூழல் என்பது, அவர்களுக்கான புதிய மரபுகளைப் படைத்தளிக்கக்கூடிய வாய்ப்பையே ஏற்படுத்துகிறது. இந்தப் புதிய மரபுகள், முற்றிலும் நகரம் சார்ந்தவை. இம்மரபுகள் வேறுறுந்தவை; புதிய வேர்கள் பாய்ந்தவை. இவற்றிற்குத் தேசியவாத லட்சியங்கள் என்பன கிடையாது. எனவே இம்முறையை கையாளுவதாடு மட்டுமல்லாமல், பாசிங்கர் விவாதிக்கும் பண்பாடு என்பதும் இதன் மூலம் தேசியத்திலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.

### நாட்டார் வழக்காற்றின் விரிவாக்கம்

கற்பனாவாதத்திற்கு (Romanticism) எதிரான தளத்தில் வைத்து, நாட்டார் வழக்காறுகளை அணுக வேண்டும் என்கிறார் பாசிங்கர். அவ்வாறு அணுகுவதற்குத் தோதாக, விரிவாக்கம் (Expansion) என்னும் முற்போக்கான கருத்தாக்கத்தினைப் பயன்படுத்தித் தொழில் நுட்ப உலகில் இடம் பெறும் நாட்டார் வழக்காறு பற்றிய கோட்பாட்டை உருவாக்கியுள்ளார்.

பரபரப்பு மிக்க நகரச் சூழல், தொழில்நுட்ப அனுபவங்கள் ஆகியவற்றால் மரபு என்பது ஒரு போதும் சிதைந்து போய்விடுவதில்லை. மாறாக, அது விரிவடைகிறது என்கிறார் பாசிங்கர். இதுதான் விரிவாக்கம் பற்றிய கருத்தாக்கத்தின் சாராம்சம். இதனைச் சற்று விளக்கமாக நோக்கலாம்.

விரிவாக்கம் என்று சொல்லும் போது, உள்ளுக்குள் - அதாவது, ஒரே குழுவுக்குள் அது நிகழ்வதில்லை. மாறாக, நாட்டார் வழக்காற்றின் சமூகத்தளத்தைப் பரவல்படுத்துகிறது. பன்முகத் தன்மையுடைய உறவுகளை ஏற்படுத்துகிறது. இடம், காலம், சமூகம் ஆகிய பரிமாணங்களில் இவ்வுறவுகளை பாசிங்கர் ஆராய்கிறார். இக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அணுகும்போது, நாட்டார் வழக்காறுகள், பழைய சடங்கியல் தன்மைகள், புராணக் கூறுகள் போன்றவற்றை உதிர்த்து விடுகின்றன. ஏனெனில், இத்தகைய இயல்புகள், நவீனயுகப் பார்வையில், பண்டைக்கால உலகத்திற்கோ, மரபான உலகத்திற்கோ மட்டும் உரியவையாகும்.

எனவே, சடங்கு, புராணம் மற்றும் பாரம்பரியக் கூறுகளில் இருந்து மக்கள் வழக்காறுகள் தம்மை விடுவித்துக் கொண்ட நிலையையே பின்னை நவீனத்துவ நாட்டார் வழக்காற்றியல் என்பது குறிப்பிடுகிறது. இதில் நாட்டார் வழக்காறு சுயநிலையானது அல்லது சுயச்சார்புடையது

*விரிவாக்கம் என்று சொல்லும் போது, உள்ளுக்குள் - அதாவது, ஒரே குழுவுக்குள் அது நிகழ்வதில்லை. மாறாக,நாட்டார் வழக்காற்றின் சமூகத்தளத்தைப் பரவல்படுத்துகிறது. பன்முகத் தன்மையுடைய உறவுகளை ஏற்படுத்துகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மட்டுமல்லாமல் அது வியாபாரத்திற்கான பொருளாகவும் ஆகிவிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு குறிப்பிட்ட இனச் சமூகம் என்னும் சார்பு நிலையிலிருந்து, பொதுவான சமூகத் தளத்தினை நோக்கி நகரும் தனது படிநிலை மாற்றத்தில், பல்வேறு கோணங்களிலிருந்து அணுகுவதற்கும், வெவ்வேறு மதிப்பீட்டு ஒழுங்கமைப்புகளுக்கும் உரிய பொருளாக நாட்டார் வழக்காறு அமைந்து விடுகிறது. மேலும். அது புதிய குறியீட்டு முக்கியத்துவங்களையும் பெற்று விடுகிறது. இந்நிலையில் போலி அல்லது நகல் (Spurious) என்பதோ, தன்னுடைய சூழல்களில் ஒரு போலிமையற்ற தன்மையைப் (Genuiness) பெற்றுவிடுகிறது. அதே சமயத்தில் மெய்யான வழக்காறு என்பதோ தனது வழக்காறு என்பதோ தனது வரலாற்று முக்கியத்துவத்தை இழந்து, அதன் தொல்பழமை (Antiquity)யைக் கருதி, மதிக்கப்படும் நிலையை அடைகிறது. அதுவே பின்னல், ஒரு சூழலில் போலியானதாகவும் ஆக்கப்படலாம்.

ஆகவே, விரிவாக்கம் என்பது குறிப்பிட்ட வழக்காற்று வடிவம் மற்றும் அதனுடைய தொடர்புகள் ஆகியவற்றின் விரிவாக்கமும். பழைய மரபுகளையும், கிராமியப் பண்புகளையும் மிகவும் போற்றி வரவேற்கக்கூடிய மக்களைக் கொண்ட தொழில்நுட்ப உலகில், மறுமலர்ச்சிக் கால மேய்ச்சல் நில மக்களுடைய மரபுகள் மிகவும் புகழ் பெற்றன. இக்காலத்தில் தயாரிக்கப்பட்ட பல வகையான கலைப்பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்ட நிகழ்த்துதல் வடிவங்களும் பாரம்பரியப் பெருமைக்குரிய மரபுகளையும் கிராமியப் பண்புக் கூறுகளையும் பிரதிபலித்தன.

*விரிவாக்கத்தின் மூலம், நாட்டார் வழக்காறு வெவ்வேறு அர்த்தங்களைப் பெறுகிறது. அதே சமயத்தில் இந்த அர்த்தங்கள் என்பன, தொடர்ந்து நிகழக் கூடிய படிநிலை மாற்றங்களுக்கும் உள்ளாகக் கூடும்.*



அவை, அம்மக்களுக்குக் குறியீட்டு ரீதியில் மிகப் பெரும் உற்சாகத்தையும் தெம்பு ஆகியவை இன்றைய நவீன உலகில் - அதாவது, எந்திரமயமான அவசர உலகில் காணப்பட முடியாதவை. ஒரு பக்கம், குறிப்பிட்ட வழக்காறானது வட்டாரம், காலம், வர்க்கம் ஆகிய வற்றை எல்லாம் கடந்து, வேறு வட்டாரம், வரலாற்றுக் காலம், வேறு மக்கள் என்பனவற்றை உட்படுத்துகிறது. மறுபுறம், அது முன்னவற்றோடு தொடர்புடையதாகவும் உள்ளது. விரிவாக்கக் கண்ணோட்டத்திலிருந்து மதிப்பீடு செய்யப்படுவதால், சமுதாயத்தின் பல்வேறு உறுப்பினர்கள், அவர்கள் வாழும் வெவ்வேறு காலக்கட்டங்கள் ஆகியவற்றால், அவ்வழக்காறு, பல்வேறு அர்த்தங்கள் புகட்டப்படுகிறது. அதாவது, விரிவாக்கத்தின் மூலம், நாட்டார் வழக்காறு வெவ்வேறு அர்த்தங்களைப் பெறுகிறது. அதே சமயத்தில் இந்த அர்த்தங்கள் என்பன, தொடர்ந்து நிகழக் கூடிய படிநிலை மாற்றங்களுக்கும் உள்ளாகக் கூடும்.

### நாட்டார் வழக்காற்றினை வணிகமயப்படுத்துதல்

வழக்காறு, வியாபாரப் பொருளாகப் படிநிலை மாற்றம் பெறுவதையே 'நாட்டார் வழக்காற்றினை வணிகமயப்படுத்தல்' என்பது குறிப்பிடுகிறது. இங்கு, குறிப்பிட்ட பண்பாட்டினைச் சேர்ந்த மக்களுடைய மரபு, வருவாய்க்கு உரிய ஆதாரமாகப் பரிமாணம் கொள்ளும் கட்டத்தையே பார்க்கிறோம். பொதுவாக, மரபான அல்லது கிராமியப் பின்னணி கொண்ட சமூகங்களில், இயற்கையான சூழல்களில் வெவ்வேறு வகையான நிகழ்த்துதல் கலைவடிவங்கள் பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தப்படுகின்றன. இவற்றை நிகழ்த்தும் கலைஞர்களுக்கு வெகுமதி அல்லது சம்பளம் கொடுப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கம். இது மிகவும் இன்றியமையாததும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு அல்லது வழக்காற்றினை வணிகமயப்படுத்தல் என்பது, பொருட்களை விற்கும் போதும், நிகழ்த்துதல் கலை வடிவங்களைப் பார்வையாளர்களுக்கு முன்னால் நிகழ்த்திக் காட்டும் போதும் நடப்பது. இவ்வாறு, கலைப்பொருட்களை விற்பதும், நிகழ்த்துதல் கலைவடிவங்களைக் காட்டுப்படுத்துவதும் அப்பொருட்களுக்காகவோ அவற்றின் செயற்பாட்டிற்காகவோ நடைபெறுவதில்லை. மாறாக, அவை யாவும் மரபென்னும் சாராம்சத்தில் தோய்ந்தவையாக உள்ளன என்பதே காரணம். இம்மரபு என்னும் கருத்து, வட்டாரம், இனம், தேசியம் என்னும் கூறுகளில் ஏதேனும் ஒன்றைத் தழுவியதாக இருக்கலாம். இப்படிக் குறிப்பிட்ட வட்டாரம், இனம் அல்லது தேசிய மரபினைத் தோய்த்துக் கலைப்படைப்புக்களை உற்பத்தி செய்வது என்பது அப்படைப்புக்களை அதிகமாக விற்கும் வியாபார நோக்கத்தையே பிரதிபலிக்கிறது. எனவே, குறிப்பிட்ட வட்டாரம் அல்லது இனக்குழு என்னும் அடிப்படையில், இக்கலைப் பொருள் உற்பத்தியானது. மரபு பற்றிய வார்ப்பு மாதிரிக் கருத்துக்களையே சார்ந்திருக்குகிறது. ஒரு குறிப்பிட்ட கலைவடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதைவிட, நுகர்வோர் அல்லது பார்வையாளர்கள் என்ன மாதிரியான படிமங்களைத் தங்கள் மனதில் பதித்துள்ளார்களோ அவற்றிற்கேற்றாற்போல், வட்டாரத்தன்மை அல்லது இனக்குழுத் தன்மை என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றைத் தங்கள் படைப்புகளில் பிரதிபலிக்கச் செய்வதே உற்பத்தியாளர்களின் பிரதான நோக்கமாக உள்ளது.

இவ்வாறு, வணிகமயப்பட்ட மரபு என்பது, ஏற்றுமதிச் சந்தையின் ஒரு பகுதியாகும். அதாவது, சுற்றுலாப் பயணிகளையும் கவரக்கூடிய வகையில் பண்பாட்டு மலர்களை (Souveniers) வெளியிடுதல், கலைக்குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல் என்பனவெல்லாம் இதன் சில உதாரணங்களாகும்.

## இந்துத்துவா - ஹெரன்வோக்

ஹெர்மன் பாசிங்கர் முன்வைக்கும் கோட்பாடுகள், ஒரு நாட்டின் வரலாற்றுச் சூழலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டவைதாம் என்றாலும், அவை இந்தியச் சூழலோடு இணைத்து விவாதிப்பதற்குப் பொருத்தமானவை; அதற்கான தேவை உள்ளது. சாதியம், சமய அடிப்படைவாதம் போன்றவை மாநில மற்றும் தேசிய அரசியலோடு பின்னிப் பிணைந்துள்ள நிலையில், பன்முகப் பண்பாட்டுத் தன்மைக்கு அடையாளமாகத் திகழும் இந்தியா, அபாயகரமான சூழலுக்கு ஆட்பட்டு வருவதைப் பல நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. புதிர்மைப் பண்பு தோய்ந்த குருதித் தொடர்பு மற்றும் மொழி, மரபுகள், பண்பாடு ஆகியவற்றால் பின்னிப்பிணைக்கப்பட்டதான ஹெரன்வோக் (Heren Volk) என்னும் நாசிகளுடைய சித்தாந்தம், இந்து சமய அடிப்படைவாதிகளுடைய 'இந்துத்துவா' கொள்கைக்கு இணையானதாக ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே ஹெர்மன் பாசிங்கரின் 'நாட்டார் வழக்காற்றின் தேசியத் தொடர்பு அறுப்பு (Denationalization of Folklore), நாட்டார் வழக்காற்றின் விரிவாக்கம் (Expansion of Folklore) ஆகியவை காலம், இடம் ஆகியவற்றைக் கடந்து நமது அரசியல் கலாச்சாரச் சூழலில், சம காலத்தியத் தன்மைப் பெற்றவையாகத் திகழ்கின்றன என்பதைப் புரிந்து கொண்டு, இத்தகைய கோணத்தில் விவாதத்தைத் தொடர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

**துணை நூல்கள் :**


Bausinger, Hermann, 1990: Folk Culture in a World of Technologhy, Bloomingtion, Indiana University Press.

Claus, Peter, S., Frank J.Korom, 1991 : Folkloristics and Indian Folklore, Udupi: RRC.

Dorson, Richard, M.1972: Folklore and Folklife, Chicago; The University of Chicago Press.

Singhal, D.P., 1982: Gyphis: Indians in Exile, Meerat: Archana Publications.


(சமூக மானிடவியல் பண்பாட்டியல் ஆய்வாளரான முனைவர் ஆ.தனஞ்செயன் "தாமரை" இதழில (பெப்-2006) ஹிட்லரின் நாசிசமும் நாட் டார் வழக்காறுகள் பற்றிய விரிவாக் கக் கோட்பாடும் என்னும் கட்டுரையை எழுதியிருந்தார். இது எமக்கு தேசியம், தேசம் பண்பாடு முதலான புலங்களின் வேறுபட்ட வாசிப்பை தருகின்றது.)

*மரபு அல்லது வழக்காற்றினை வணிகமயப்படுத்தல் என்பது, பொருட்களை விற்கும் போதும், நிகழ்த்துதல் கலை வடிவங்களைப் பார்வையாளர்களுக்கு முன்னால் நிகழ்த்திக் காட்டும் போதும் நடப்பது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியவாதமும் தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகளும்

பேராசிரியர். செல்லையா கிருஷ்ணராசா

**பிரச்சினை பற்றிய அறிமுகம்**

எந்தவொரு நாட்டிலோ அல்லது இனங்களுக்குள்ளோ தனித்துவமான முறையில் "அடையாளம் காண்பதன்" அடிப்படையிலேயே தம்மை "ஒரு நாட்டினர்" என்றோ அல்லது "இனத்தினர்" என்றோ இதற்கும் மேலாக "மதத்தினர்" என்றோ குறிப்பிட்டுக் கொள்ள முடியும். ஐந்தறிவு படைக்கப்பெற்ற விலங்குகள் கூட இத்தகைய "தனித்தன்மையை" இனங்காணும் ஆற்றலினால் இனம் இனமாகவும், மொழித்தனித்துவம் மிக்க இறைமை உணர்வடிப்படையிலும் வாழ்ந்து கொண்டிப்பதனை கண்டுகொள்ள முடிகிறது. இதே போன்றதொரு நிலைமையை தத்தம் பாரம்பரியப்பரப்பில் உருவாக்குகின்ற போக்கில் இன்று உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அப்பால் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆசிய நாட்டு மக்கள் மத்தியிலும், அங்கு மொழிவழிச் சிறுபான்மைகளாக, பொருளாதார, பண்பாட்டடிப்படையில் நசிக்கபட்டுப்போன ஆனால் வாழத்துடித்துக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியிலும் நன்கு கண்டு கொள்ள முடிகிறது.

நவீன நோக்கில் மேற்கைரோப்பிய நாடுகளில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட "தனித்தன்மை" "தனிமனித வாதம்" போன்ற இயக்கங்களானவை பின்னர் கீழைத்தேய நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் மேற்கைரோப்பிய குடியேற்றவாதிகளினுடைய மேலாதிக்கவாத நடவடிக்கைகளினூடாக நன்கு வேரூன்றிக் கொண்டமையை காணமுடிகிறது. ஆபிரிக்க நாடுகளிலும் கீழைத்தேயங்களிலும் குடியேற்ற வாதிகளினுடைய மேலாதிக்கவாதம் மிகவும் பலமடைந்து, அவர்களது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்ட பொழுதிலிருந்தே அவர்களுக்கெதிரான எதிர்ப்பியக்கங்களும், ஒத்துழையாமை மற்றும் போராட்ட வடிவங்களும் தோற்றுவிக்கப்பட்டு, வளர்த்தெடுத்துச் செல்லப்பட்டமையினை "விடுதலை" அடைந்த நாடுகளினுடைய வரலாறு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

அவ்வாறு மேலாதிக்கவாதத்தினால் ஆக்கிரமிப்பிற்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் கிளர்ந்தெழுந்த சமயத்தில் தம்மைத்தாம் தனித்துவம் வாய்ந்த "தேசிய இனத்தினராகவும்" "கௌரவ பிரசையாகவும்" ஒன்றில் மொழிவாரியாகவோ அல்லது இனவாரியாகவோ இதற்கும் மேலாக சமய ரீதியாகவோ அடையாளம் காட்ட வேண்டிய ஒரு முக்கியமான பணி அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக தத்தமது இனம், அதன் தோற்றம், அதன் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் நீண்ட போக்கு, கலாச்சார ரீதியான வடிவங்களை உள்ளடக்கியிருந்த பகைப்புலம் போன்றவை தொடர்பாக ஆராய்வு நடாத்த வேண்டிய ஓர் இன்றியமையாத பணிக்குள்ளும் அவர்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டியவர்களானார்கள். இதனால் தம்மை மேலதிகாரம் செலுத்துபவனுடைய சிறப்பியல்புகளிலும் பார்க்க, தம்மையொத்த, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களது பாரம்பரியமானது மிகச் சிறப்பானது என்பதனையும்


> "தனித்தன்மை" "தனிமனித வாதம்" போன்ற இயக்கங்களானவை பின்னர் கீழைத்தேய நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் மேற்கைரோப்பிய குடியேற்றவாதிகளினுடைய மேலாதிக்கவாத நடவடிக்கைகளினூடாக நன்கு வேரூன்றிக் கொண்டமையை காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பல நூற்றாண்டுகள் பழமைவாந்திருந்தது என்பதனை எடுத்துக்காட்டவேண்டிய ஓர் அத்தியாவசிய தேவை உருவாக்கப்பட்ட அப்பின்னணியில் தம்மை இறைமையுள்ள, நாட்டு வரையறையுடனான, சுதந்திரமான பிரஜைகளாக விடுவித்துக் கொண்டும் சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்திய வகையில் சுதந்திர உணர்வுடன் வாழ்வதற்குரிய பண்பாட்டுச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கவும் முடிந்தது.

இவ்வாறான பண்பாட்டுச் சுதந்திர உணர்வுடன் கூடிய வாழ்க்கை முறையானது விடுதலையடைந்த நாடுகளில் மொழி, மத, இன அடிப்படையில் ஏதாவதொன்றினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதனையும் காணலாம். இவ்வாறு மொழி, மத, இன அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூகபண்பாட்டுப் போராட்ட இயக்கங்களினது பின்னணியில் அவர்களது பண்பாடு பற்றிய விழிப்புணர்வானது தொல்லியல் ஆய்வுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையினை விளக்குவதாகவே இவ்வாய்வுக் கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது.



**தேசியவாதம் என்றால் என்ன?**

"தேசிய வாதம் என்பது தனித்துவமானதும், உபகுழுமங்கள் யாவும் இணைக்கப்பட்டதுமான ஒரு நிலையில் சுதந்திரத்தினை அடைந்துகொள்வதற்கும் அதனைப் பாதுகாப்பதற்குமான ஒரு கருதுகோளையுடைய இயக்கம்" என்று குறிப்பிடலாம். சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குவதாயின் தேசிய வாதம் என்பது சிறுபான்மை நிலையில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கருத்தளவிலும், இயக்கநடைமுறையிலும் சர்வதேசத்திற்குத் தம்மை வெளிப்படுத்தமுனையும் முறையிலும் ஒரு நாட்டு அமைப்பினை உருவாக்கிக் கொள்ள விரும்புவோர்களாக செயற்படுவதனையே குறிப்பிடுகின்றது. நாட்டு அமைப்பு என்று குறிப்பிடும் பொழுது அங்கு மூன்று முக்கிய அடிப்படையான நோக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். ஒன்று குறிப்பிட்ட குழுக்களுக்கான அல்லது பிரிவினருக்கான சுயாதிபத்தியத்தையும், தன்னரசாங்கத்தினையும் உருவாக்குகின்ற நிலை, இரண்டு, அங்கீகரிக்கப்பட்ட நிலப்பரப்பில் அல்லது தாயகத்தில் அல்லது பாரம்பரியப்பிரதேசத்தில் அக்குறிப்பிட்ட குழுக்களுக்கான அல்லது பிரிவினருக்கான ஒற்றுமை உணர்வும், சகோதரத்துவமும் நிலைப்படுத்தப்பட் வகை மூன்று. கேள்வியளவிலானது அக்குறிப்பிட்ட குழுக்களுக்கான அல்லது பிரிவினருக்கான தனியலகாகக் கொள்ளக் கூடிய பண்பாட்டுத் தனித்துவமும், வரலாறும் வரையப்பட்டுள்ள முறை என்பவையே அவையாகும். இந்த மூன்று அம்சங்களையும் ஆணித்தரமாகக் குறிப்பிடுவதன் மூலம் அப்பிரஜைகளுடைய தன்னாட்சியமைப்பு, தயாக நிலப்பரப்பு, தனித்துவமான சமூக அல்லது இன அந்தஸ்த்து மற்றும் வரலாறு இந்த மூன்ற அம்சங்களையுமே எந்தவொரு நாட்டிலும் வளர்ச்சி பெற்ற தேசியவாத இயக்கமொன்றின் அடிப்படையான மூன்று குறிக்கோள்களாக அமையும், அல்லது கொள்ளமுடியும். அவ்வகையில் அவர்கள் அமைக்கவிருக்கும் "நாடு" என்பதற்குரிய மூன்று தூண்களாக அவை அமையும் என்பதனை இங்கு அழுத்திக் கூறவேண்டிய தேவை இல்லையெனலாம்.

தேசியவாதம் என்ற நிலையில் நாடு என்பதற்கு பலவகையான விளக்கங்கள் இன்று கொடுக்கப்படுவதையும் காணலாம். பண்பாட்டுப் பகைப்புலம் ஒன்று இன்றியே இன்று தேசியவாதக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையில் பல இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. Pan Nationalism அல்லது Internationalism என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற பதங்களுக்கு கொடுக்கப்படுகின்ற "சர்வதேசியவாதம்" என்ற கருத்து அதனை

***"தேசிய வாதம் என்பது தனித்துவமானதும், உபகுழுமங்கள் யாவும் இணைக்கப்பட்டதுமான ஒரு நிலையில் சுதந்திரத்தினை அடைந்துகொள்வதற்கும் அதனைப் பாதுகாப்பதற்குமான ஒரு கருதுகோளையுடைய இயக்கம்" என்று குறிப்பிடலாம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவிற்குத் தெளிவாக்குகின்றது. இன்று மத்திய கிழக்கிலும் ஆசியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் தம்மை இஸ்லாம் மத அடிப்படையில் மட்டும் வைத்து சர்வதேசிய மட்டத்தில் பலம் வாய்ந்த ஒரு சமூகக் குழுவினராக வெளிப்படுத்த முற்படுவதனை அச் சர்வதேசிய வாத்திற்குச் சிறந்த உதாரணமாக எடுத்துக் காட்டலாம். இருந்தும் Nation என்பதனைக் குறிக்கப்பயன்படுத்தும் "நாடு" என்ற பதமானது எந்தவொரு தேசியவாத மட்டத்திலும் ஆரம்பத்தில் "ஓர் உருவற்ற ஐதீகமாக"வே (Abstract myth) இருக்கும் என்பதனையும் கண்டுகொள்ளலாம். அவ்வுருவற்ற ஐதீக மட்டத்தினுள் "அக்குறிப்பிட்ட பிரிவினரின்"" சமூகக் கோட்பாடு, நிலக்கூட்டமைவு குடியேற்ற அலகுகள் என்ற மூன்று அம்சங்களுமே உருகி, ஒன்றாகி, அடங்கிப்போன தன்மையைக் காணலாம். அவ் அடங்கிப் போன தன்மையிலிருந்து படிப்படியாக "அக்குறிப்பிட்ட பிரிவினரை" மீட்டெடுக்கும் (விடுதலைப் போராட்டம் என்ற) வழியிலிருந்தே தேசியவாத இயக்கமொன்றின் வெற்றியையும், தோல்வியையும் தீர்மானிக்க முடியும். அம் மீட்பு வழியானது "அக் குறிப்பிட்ட பிரிவினருள் காணப்படும் பல மட்டத்தினரையும் ஒன்றிணைப்பதாகவும், அதே நேரத்தில் அவ்வவர்க்குரிய நிலைகளில் அவர்களை வைத்து திருப்திப்படுத்துவதாகவும், அவர்கள் தம்மளவில் சுதந்திரமானவர்கள் என்ற எண்ணப்பாட்டினை அவர்கள் தாமாகவே உணரக்கூடிய வகையிலும் போராட்ட நடைமுறை அமையும் போதே எந்தவொரு நாட்டிலும் விடுதலைப் போராட்டமானது வெற்றியளிப்பதனைக் காணலாம். ஆனால் சீனாவும் ருஸ்யாவும் இக்கோட்பாட்டிற்கு விதிவிலக்காக இருந்தாலும் அந்நாடுகளின் இன்றைய நிலை மேற்கூறப்பட்ட கருத்தனை மீட்டுருச் செய்கின்றதெனலாம்.

## தேசியவாதத்தினை முன்னெடுத்துச் செல்லும் கருவிகள் (Bearers of Nationalism)

ஒரு தேசியவாத்தினை முன்னெடுத்துச் செல்லும் கூறுகளை அடையாளம் கண்டு, சமூக - பண்பாட்டு விடுதலைப் போராட்டத்தினை வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டிய ஒரு மார்க்க நிலையை குறிப்பிட்ட அம் மக்கட் கூட்டமானது நன்குணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் கட்டியெழுப்பப்பட்ட மண்வாசனை மாற்றும் தாயகப்பற்று உணர்வானது, எந்த விதமான மேற்கட்டுமானமும் இல்லாமல் நாளடைவில் மறைந்து, அழிந்து விடக் கூடிய ஆபத்தும் நேரலாம் (மாயா (MAYA) இன்கா (INCA) நாகரீகங்கள் மத்திய அமெரிக்காவில் நகரங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தாலும் தொடர்பாடலுக்கானதும், ஒன்றுதிரட்டப்பட்ட அறிவனைச் சேமித்து வைத்து, பிற்காலச்சந்ததிக்கு வழங்குவதற்கு ஏதுவானதுமான பரவலான எழுத்துக்களின் உபயோத்தினை உணர்ந்திருக்காத ஒரு தன்மையினால் அந்நாகரிகங்கள் விரைவிலேயே அழிந்து விட்டன). பல நாடுகளில் இத்தகைய சம்பங்கள் நிகழ்ந்துமிருக்கின்றன. எனவே இச்சந்தப்பத்தில் தேசியவாத்தினை முன்னெடுத்துச் செல்லும் கூறுகளை அடையாளம் காண வேண்டிய தேவை ஒன்றுள்ளது எனலாம்.

ஒரு தேசியவாத்தினை முன்னெடுத்துச் செல்லும் கூறுகளை அடையாளம் கண்டு, சமூக - பண்பாட்டு விடுதலைப் போராட்டத்தினை வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டிய ஒரு மார்க்க நிலையை குறிப்பிட்ட அம் மக்கட் கூட்டமானது நன்குணர்ந்திருக்க வேண்டும்.

தேசிய நிலையில் சமூக - பண்பாட்டு விடுதலைக்கான போராட்ட உணர்வினை, அது தோற்றுவிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட நிலையிலிருந்து, காலத்திற்குக்காலம் பல இடங்களுக்கும் நிறுவனங்களினூடாகக் காவிச்செல்லும் முக்கிய கூறுகளுள் "சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள்" அல்லது ஜீவனோபாயத் தொழிலை மேற்கொள்ளுவோர் என்ற நிலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. தேசிய பண்பாட்டு சமூக விடுதலைப் போட்ட உணர்வினை தோற்றுவித்த நிலப்பரப்பிற்குள்ளேயும், வெளியேயும் அவ்வுணர்வலையைப் பரப்புபவர்களாக அவர்களே தொழிற்படுவர் என்பதுபொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும். ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன அமைப்பு முறைக்கூடாகவும் தொழிற்றிறமைக்கூடாகவும் அத்தொழிற் தலைவர்கள் சமூக - பண்பாட்ட விடுதலைப் போராட்ட உணர்வுக்கான ஆதரவினை ஈட்டிக்கொள்ள முடியுமாயினும், சமூகத்தில் ஏனைய மட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அவர்களுக்கான கருத்தியலடிப்படையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவின் அடிப்படையிலேயே தேசிய-வாத உணர்வின் பரம்பலை விரிவாக்கிக் கொள்ள முடியும். இதனால் வேறொரு பல்பக்க நோக்க-முடைய இயக்கசக்தியொன்று அல்லது சர்வ-தேசப்பற்றுடைய இயக்கங்கள் அத்தேசியவாத மக்களின் உணர்வலையை தனது அல்லது தமது கைகளில் முறையே எடுத்து திசைதிருப்பி, மாற்றி விடக்கூடிய சூழலையும் ஏற்படுத்திவிட முடியும். அவ்வாறான ஒரு சூழலை உருவாக்குவதற்கு உதவியாக பேச்சளவிலேனும் வர்க்கப்பகுபாடற்ற ஒரு சமூக நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். அவ்வாறான அந்நிலையைத் தோற்றுவிக்க முடி-யாத பட்சத்தில், அங்கு உருவாக்கப்பட்ட தேசிய வாதக் கொள்கையானது சமூகத்திலுள்ள பல்-வேறு மட்டங்களினாலும். முரண்படக்கூடிய வகையில் அமைந்த ஒரு முரண்பாட்டு சமூக உற-விற்குரிய வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ள வைக்கும் நிலையை சர்வதேச சக்திகள் உருவாக்-கலாம். அது இறுதியில் பண்பாட்டுப் போராட்ட உணர்வினையே முற்றாக அழித்தொழிக்கவும் உதவுவதாகலாம். அல்லாவிடில் தேசியவாதக் கருத்துக்களையுடைய பலரை பல கொள்கை-களுடன் ஓரியக்க அமைப்புக்குள்ளேயே உரு-வாக்க வழிசமைக்கும். அது இறுதியில் இயக்க மறைவுக்கு காரணமாகலாம். போலந்திலும், ஹங்கேரியிலும் ஏற்பட்ட அனுபவங்களை இங்கு நினைவு கூர்வது மேலே சொல்லப்பட்ட கருத்-திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

தேசியவாத உணர்வினை முன்னெடுத்துச் செல்வோர் என்ற வகையில் மதத் தலைவர்களது பங்களிப்பானது அடுத்த நிலையில் முக்கியத்தவம் வாய்ந்ததாகும். ஆசியாவின் தேசிவாத நடவடிக்-கைகளில் மதத்தலைவர்களே முக்கியமான பங்கினை வகித்திருந்தனர் என்பதனை உதார-ணங்களுடன் எடுத்துக்காட்ட முடியும். ஆசி-யாவிலுள்ள சமூக அமைப்புக்கள் தத்தமது சமய அடிப்படையில் அடையாளம் காணப்பட்டமை-யினூடாக மதத்தலைவர்கள் அவர்களிடையே தேசியவாத உணர்வினைப் பரப்புபவர்களாகச் செயற்பட்டிருந்தனர். பாகிஸ்தான், பர்மிய நாடு-களில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த மத-வடிப்படையிலான தேசிய உணர்வினைச் சிறந்த சான்றாக கொள்ள முடியும். பர்மாவில் Pangyis என அழைக்கப்பட்ட அரசியல் பிக்குமார் அங்கு Say Sab புரட்சி முறியடிக்கப்பட்டதன் பின்னர் மாணவர்களுடனும், அரசாங்க உத்தியோத்தர்-களுடனும் மோதிக் கொண்டமையைக் காண-லாம். இந்தோனேசியாவில் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற தேசியவாதம் கூட மதவடிப்-படையிலேயே ஆரம்ப உணர்வினைப் பெற்று ஜனநாயக வாதிகளிடையே செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டது.



தேசியவாத உணர்வினை வளர்த்தெடுத்துச் செல்வோர் என்ற வகையில் ஆசியாவில் வர்த்தகர்கள் முக்கியமான ஓரிடத்தினை வகிக்கின்றார்-கள். தேசியவாத நடவடிக்-கைகளின் ஆரம்பகட்டகங்-களில் இவர்களது பங்களிப்பு இன்றியமையாததாக விளங்-கும். உதாரணமாகக் குறிப்-பிடுவதாயின் இந்தோனேசிய சரேகட் இஸ்லாமிய எழுச்-சிக்கும், அனைத்துல துருக்-கிய ஜாடிக் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் வர்த்தகர்களே அடிப்படையாகத் தொழிற்-பட்டிருந்தனர். எனவே வர்த்-தகர்களுடனான கொள்கையு-டன்பாடானது சமூக - பண்-பாட்டு விடுதலையுணர்வினை மேலும் வளர்த்து எடுப்பதற்கு உதவுவதாகலாம். பொருளா-தார விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் நாடுகளில் வர்த்தகர்கள் பிர-தான ஒரு கருவியாக நின்று தொழிற்பட்டிருந்தமையை அண்மைக்கால நிகழ்வுகள் பல எமக்கு எடுத்துக்காட்டு-கின்றன. பண்பாட்டுப் போரா-ட்ட உணர்வலையுடன் மண்-வாசனைக்குரிய கலைவடிங்-களுடன் அவர்களை மிக நெருக்கமாகப் பிணைத்து வைத்திருப்பதன் அடிப்படை-யில் போராட்ட சூழ்நிலைக்-கேற்ப பொதுகமக்களை போ-

**ஆசியாவின் தேசிவாத நடவடிக் கைகளில் மதத்தலை வர்களே முக்கியமான பங்கினை வகித்திருந்தனர் என்பதனை உதாரணங் களுடன் எடுத்துக்காட்ட முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராட்ட வடிவங்களிலிருந்து அந்நியப்படாத வகையில் வைத்திருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும். இது மாத்திரமன்றி, தேசிய மொழி மற்றும் பண்பாட்டு விடுதலைப் போராட்டமானது வெறுமனே அரசியலை மட்டும் கொண்டிருக்காததாலும் பொருளாதார பண்பாட்டு வடிவங்களை மீட்டெடுப்பதற்குரிய முயற்சியாகவும் அமைவதன் காரணத்தினாலும் வர்த்தகர்களின் நெருக்கமான தொடர்பு அடிக்கடி போராட்ட சக்திகளுடன் ஒன்றிணைக்கப்படவேண்டிய தேவையும் ஏற்பட்டுக்கொள்ளும். குறிப்பாக பண்பாட்டு, கலாச்சார அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு வர்த்தகர்களே தலைமை தாங்க வேண்டிய நிலை ஏற்படும். எந்தவொரு நாட்டிலும் பண்பாட்டு விழிப்புணர்வுக்கும் வர்த்தக - வாணிப நடவடிக்கைகளுக்குமிடையே மிகநெருங்கிய தொடர்பிருப்பதனைக் காணலாம். வர்த்தக மார்க்கங்களும், கலாச்சார மையங்களுமே பண்பாட்டினை வளர்த்தெடுக்க தொட்டில்களாக விளங்கின. கலாச்சார விழாவுக்கான கால்கோள், அவற்றின் வடிவம் போன்றவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளுள் வர்த்தகர்களே முக்கிய பங்கு வகிப்பர். அவ்வகையில் வர்த்தகப் பெருமக்கள் வழிப்புணர்வு பெற்ற மக்கட் கூட்டத்தினருள் தம்மையும் இணைத்து, ஒன்றாகக் கலந்து பண்பாட்டு நடவடிக்கைகளுடாக தேசிய சமூக - விடுதலைப் போராட்ட வடிவங்களுடன் கலந்து நிற்பர்.

**பண்பாட்டு விழிப்புணர்வின் முக்கியமான ஓர் அம்சமாக அமைய வேண்டியது "அச்சுயாதிபத்தியத்தினையும், தன்னரசாங்த்தினையும்" அமைக்க விரும்புகின்ற அம்மக்கட் கூட்டத்தினரின் சமூகத் தோற்றம் பற்றிய ஆய்வு ஆகும்.**

## போராட்டமும் பண்பாட்டு வழிப்புணர்வும்

தேசியவாதத்தின் மூன்று முக்கிய அடிப்படைகளுள் ஒன்றான பண்பாடானது சமூக விடுதலைப் போராட்ட உணர்வினை ஊட்டி வளர்க்கக் கூடிய பிரதான உந்து சக்தியாக அமைகின்றது. போராட்ட காலகட்டத்தல் குறிப்பிட்ட அம்மக்கட் கூட்டத்தினரின் எல்லா மட்டத்தினரையும் இணைக்கக்கூடிய ஓர் அடிப்படையாகப் பண்பாட்டு அம்சங்கள் இடம் பெற்றுக் கொள்கின்றன. பண்பாடு என்று இங்கு குறிப்பிடும் பொழுது அற்புதமான மிகப் பரந்த அடிப்படையிலான கருத்தியலினைக் கொண்ட தாய், சுயாதிபத்தியத்தினையும், தன்னரசாங்கத்தினையும் அமைக்க விரும்புகின்ற அம்மக்கட் கூட்டத்தினரின் பாரம்பரிய தனித்துவத்தினை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். பாரம்பரிய தனித்துவத்தினைப் போற்றிப்பாதுகாத்து வளர்த்துவந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்குரிய புத்தாக்கத்தினை இக்கால கட்டத்தில் போராட்ட சக்திகள் வழங்க வேண்டும். இந்நிறுவனங்களினூடாக எஞ்சியிருக்கும் அல்லது தேசியவாத இயக்கத்தில் தம்மை இதுவரைக்கும் பிணைத்துக்கொண்டிருக்காத மக்கட் கூட்டத்தினரையும் மிகவும் இலகுவாகவும், உணர்வு பூர்வமாகவும் பிணைத்துக் கொள்ள முடியும்.

பண்பாட்டு விழிப்புணர்வின் முக்கியமான ஓர் அம்சமாக அமைய வேண்டியது "அச்சுயாதிபத்தியத்தினையும், தன்னரசாங்த்தினையும்" அமைக்க விரும்புகின்ற அம்மக்கட் கூட்டத்தினரின் சமூகத் தோற்றம் பற்றிய ஆய்வு ஆகும். அச்சமூகத்தினரின் தோற்றம், வளர்ச்சி தொடர்பாக வரலாறு சமூகவியல் ரீதியாக ஆராயப்படும் போது பெற்றுக் கொள்ளப்படும் முடிவுகளே அத்தேசியவாத இயக்கத்தினை மிகவும் பலமுடையதொன்றாக மாற்றியமைக்க உதவும். அச்சமூகத்தினது தோற்றம் பற்றிய ஆய்வகளானவை மொழி ரீதியாகவும், இன ரீதியாகவும் இவை இரண்டுடனும் இணைந்த வகையிலும் அமைந் கலை வடிவங்களின் அடிப்படைகளில் இருந்தும் ஆராயப்படலாம். இங்குதான் தொல்லியல் ஆய்வுகளின் இன்றியமையாமை எடுத்துக் காட்டப்படுகின்றது.

பிரிந்து செல்லும் தேசியவாத நிலையை உருவாக்ககின்ற ஒரு கூறாகவே அக்குறிப்பிட்ட சமூக வேர்கள் பற்றிய ஆய்வு அமையும். ஒரு புறத்தில் பெரும்பான்மையான சமூக அமைப்பிலிருந்து, அக்குறிப்பிட்ட சமூகத்தின் தோற்றம், இயல்புகள் அமைப்பு என்பன தெளிவான முறையில் வேறுபடுத்தப்பட்டு, தனித்துவமாக அடையாளம் காணப்படகூடிய நிலை ஏற்படுமாயின் அதுவே அங்கு தேசியவாத உணர்வினை வலுப்படுத்தும் காரணியாகவும் அமையலாம். அவ்வாறான தனித்துவமான வேறுபாடானது, ஒன்றில் மொழி ரீதியாகவோ அல்லது பழக்கவழக்கங்கள் ரீதியாகவோ அல்லது மத, நிறுவன ரீதியாகவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொள்ளப்படலாம். இருந்தும் அவை எல்லாம் அவசியம் என்று கொள்வதற்கில்லை. இதற்கும் மேலாக, தன் அயல் சமூக அமைப்பிலிருந்து அக்குறிப்பிட்ட சமூகமானது கலாசாரரீதியில் தன்னைத் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கும் போதுதான் அது தன்னைப் பிரிந்து செல்லும் தேசிய வாத இயக்கப் போக்கினுள் உட்படுத்திக் கொள்ள முடியும் வங்காளம், பையாவ்ரா (Biafra), வளான்டர்ஸ் (Flanders) ஆகிய நாடுகளில் ஏற்பட்டிருந்த தேசியவாத நடவடிக்கைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.



"தேசம்", "தேசியவாதம்" என்ற பதங்களுக்கடிப்படையாக "மொழி" மிக முக்கியமான அளவீடாக இருக்க வேண்டும் என Herder என்பவர் வற்புறுத்துகின்றார். குறிப்பிட்ட அம்மக்கட்கூட்டத்தினரின் "தாயக நிலத்தின்" ஆளுமையை அறிவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் தாய்மொழியில் அமைந்த இலக்கிய வடிவங்களே பயன்படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிடுவது மொழிக்கும், நிலத்திற்கும் இடையே இருக்கின்ற பாரம்பரியப் பண்பாட்டுப் பிணைப்பினை வெளிப்படுத்துவதற்கேயாகும். (தற்காலங்களில் இலக்கிய விமர்சனக்காரர் அடிக்கடி குறிப்பிட்டுக் கொள்ளும் "இலக்கியமும் மண்வாசனையும்" என்ற தொடர் அதனையே குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.) அப்பிணைப்பின் ஊடாக மாத்திரம் தொடர்பு கொள்ளும் போதே மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் தாயகத்துக்குரிய "தேசியவாதத்தைப்" பெற்றுக் கொள்கின்றார்கள்; அல்லது தாயக மண்ணுக்குரிய உண்மையான பிரஜைகளாக்கப்படுகின்றார்கள் எனலாம். அவ்வகையில் தாய்மொழியில் அமைந்த இலக்கியங்கள் மக்களை "தேசிய தராதரத்தினை" அடைய வைக்கும் "சட்டத் தொகுப்புக்கள்" எனக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும். எனவே மொழி வாரியான வேறுபாடுகள் தேசியவாத உணர்வு மேலோங்கிய நிலையில் மொழியியல் அடிப்படையிலான தாயகக் கோட்பாடுகள் வளர்ச்சி பெறுவதற்கும், பிரிந்து செல்லும் விடுதலைப் போராட்ட உணர்வு மேலோங்குவதற்கும் வழிசமைக்கும். (இந்திய உபகண்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள மொழிவாரியான கொந்தளிப்பு நிலை ஒரு வேளை மொழி ரீதியான தாயக நோக்கில் மக்களை தேசியவாத நிலைக்கு முன் தள்ளிவிடக்கூடும்)

நவீன தேசியவாத நடவடிக்கைகளில் மொழி என்பது முக்கியத்துவம் வாய்ந்த கருவியாக பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். இதனால் மொழியில் மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. வளர்ந்து வரும் அறிவியல் துறைகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் மொழியின் கையாள் கை அமையவேண்டும் என்பதற்காகப் புதிய புதிய சொல்லாட்சிகளை உருவாக்கிக் கொள்கின்ற ஒரு நிலையினையும் மொழி மறுசீரமைப்பு முயற்சி களில் காணமுடிகிறது. அதே நேரத்தில் மொழியில் தூய்மை பேணும் முயற்சியும் மொழி சீரமைப்பு முயற்சிக்கும் பக்கம் பக்கமாக ஊக்கம் பெற்று வருவதனைக் காணலாம் தமிழ் மொழியை எடுத்துக் கொண்டால் கூட தற்பொழுது இந்த இரண்டு நிலைகளையும் காண முடிகின்றது. எழுத்துச் சீர்திருத்தம் வேண்டி தமிழ் எழுத்துக்களில் குறிப்பிடத் தக்க மாற்றங்களை புகுத்துகின்ற அதே நேரத்தில் பாரம்பரிய அல்லது வழக்கிலிருந்து மறைந்து போன அல்லது பிரதேசவழக்கிற்குரிய சொல்லாட்சிகளை தமிழ் மொழியில் மீட்க முனைவது தேசிய வாத உணர்வலையில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி நிற்கும் என்றோ, அல்லது வளர்ந்துவரும் அறிவியற்துறை மாற்றங்களோடு ஒரு மொழி என்ற ரீதியில் கருத்துத் தொடர்பு ஊடகமாக எந்தளவிற்குத் தாக்குப்பிடிக்கும் என்றோ கூறமுடியாது. இப்பிரச்சினையானது அம்மொழியைக் கை-


**நவீன தேசியவாத நடவடிக்கைகளில் 'மொழி' என்பது முக்கியத்துவம் வாய்ந்த கருவியாக பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். இதனால் மொழியில் மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.**

யாளும் சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்தே சாதககமாகவும் பாதகமாகவும் அமையக்கூடிய வாய்ப்புமுள்ளது.

## தொல்லியல் ஆய்வும் பண்பாட்டு விழுமியங்களும்

தேசியவாத உணர்வு மேலோங்கிய ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பினுள் அதன் பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரவேண்டிய தலையாய பணி சமூகவிடுதலை முன்னெடுப்பு இயக்கத்துடன் தொடர்புபட்டிருப்பதனைக் காணலாம். போராட்டச் சூழ்நிலையில் அக்குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு விழுமியங்களை முழுமையான வகையில் முறையாக வெளிப்படுத்துவதன் அடிப்படையிலோ அல்லது குறிப்பிட்ட அம்மக்கட் கூட்டத்தினரை அவர்களது பண்பாட்டு நடவடிக்கைகளுடன் நேரடியாகத் தொடர்புபடுத்துவதன் மூலமோ பண்பாட்டு விழிப்புணர்வினை அப்பிராந்தியத்தில் ஏற்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு அக்குறிப்பிட்ட மக்கட்கூட்டத்தினரின் பண்பாட்டுப் பகைப்புலத்தினை தாயகப் பரப்புடன் இணைத்த வகையில் வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்ட முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில், ஐதீகமளவிலேனும் அக்கருத்துக்களினை நிலைநிறுத்தப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வரலாற்று அடிப்படையில் அம்மக்களினது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்காட்ட முடியாத நிலை ஏற்படுமானால் (உண்மையிலேயே அம்மக்கட் கூட்டத்தினருக்கு நீண்டகால வரலாறு இல்லாதிருக்குமானால்) ஐதீகமளவிலேனும் அவர்கள்



அநாதியானவர்கள் என்ற கருதுகோளினை நிலைநிறுத்த முயற்சிக்க வேண்டும். இம்முயற்சி தோல்வியுறுமானால் தேசியவாத உணர்வு நிலையும் மழுங்கடிக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படலாம். (இன்று இஸ்ரேலியர் என்றவொரு இனம் தாயகம் அமைத்து, அதற்குரிய புராதன வரலாற்றையும் "படைத்து" பைபிளுடன் தம்மை இணைத்து, சர்வதேச ரீதியில் தம்மைத் தனித்துவமான ஓரினமாகக் காட்டிக் கொண்ட வரலாறு அந்த ஐதீகக் கோட்பாட்டினை நிலைநிறுத்துவதாக உள்ளது.

இஸ்ரேலில் இன்று வளர்ச்சி பெற்றிருக்கும் தொல்லியல் ஆய்வு நடவடிக்கைகள் யாவும் பைபிள் என்ற புனித நூலுடன் தொடர்புபட்ட வகையில் அமைந்துள்ளமையே யாருமே எளிதில் காணலாம். தம்மை சர்வதேசிய மட்டத்தில் தனித்துவமான ஓரினமாகக் காட்டுவதற்காகப் பைபிளுடன் தொடர்புபட்ட வகையில் இஸ்ரேலியர் தம்மை அமைத்துள்ளமையை யாரே எளிதில் காணலாம். தம்மை சர்வதேசிய மட்டத்தில் தனித்துவமான ஓரினமாகக் காட்டுவதற்காகப் பைபிளுடன் தொடர்புபட்ட வகையில் தொல்லியல் நடவடிக்கைகளினை யூதர்களும் ஆற்றிவருகின்றனர். எனவே தான் தொல்லியல் ஆய்வுகளானவை ஓரினத்தின் இனப் பழமையை எடுத்துக் காட்டுவதோடல்லாமல், அவ்வினத்தின் பண்பாட்டுப் பரப்பினையும் தாயகக் கோட்பாட்டுன் இணைத்துக் காட்டுவதாக அமையும். இலங்கைத்தீவினைப் பொறுத்தமட்டில் "சிங்கள பௌத்தம்" என்ற உணர்வு மேலோங்கி வளரக்கூடிய வகையில் இந்நாட்டு தொல்லியற் திணைக்களத்தின் நடவடிக்கைகள் யாவும் வரையறுக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இதனை நன்கு அவதானிக்க ஜப்பானிய அறிஞரான Kanozo Saito பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமையை நோக்கத் தக்கதாகும்.

**இஸ்ரேலில் இன்று வளர்ச்சி பெற்றிருக்கும் தொல்லியல் ஆய்வு நடவடிக்கைகள் யாவும் பைபிள் என்ற புனித நூலுடன் தொடர்புபட்ட வகையில் அமைந்துள்ளமையே யாருமே எளிதில் காணலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூனெஸ்கோவினால் அளிக்கப்பட்ட கலாசார முக்கோணத்திட்டம் என்ற வரத்தினைப் பயன் படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட 2000 வருடங்களுக்கும் மேலான பழமை வாய்ந்த பெருந்தொகையான பௌத்தக் கலைக் கருவூலங்களை, இலங்கை அரசாங்கமானது தமிழ்ப் பேராளிகளுடனான மோதலில் அரசியல் குண்டாந்தடியாக (Political Bludgeon) பயன்படுத்துவதனைக் காணலாம்."

இலங்கையைப் பொறுத்தவரையில் அளவுக்கதிகமாக தொல்லியல் அகழ்வுகளை அது மேற்கொண்டு வருவதாகவும், எந்தவிதமான தொல்லியல் ஆய்வு முறைகளின் அடிப்படைகளுமன்றி பயிற்றப்படாத வேலையாட்களைக் கொண்டு, போலி வேலைப்பாடுகளுடன் அப்பணிகளை முடித்து வருவதாகவும் அவ்வறிஞர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது எந்தளவிற்கு தொல்லியல் அகழ்வாய்வினைப் பயன்படுத்தி இலங்கையரசானது "சிங்கள பௌத்த" உணர்வினை மேலோங்க வழிசமைக்கின்றது என்பதனையே எடுத்துக் கொட்டுகின்றது.

**யாழ்ப்பாண அரசும் தொல்லியலும்:**

இத்தீவினைப் பாரம்பரியமாகக் கொண்டு தொடர்ச்சியாக வாழ்ந்து கொண்டு வரும் தமிழ் மக்களின் வரலாறானது அதே பிராந்தியத்தில் தொடர்ச்சியற்ற முறையில் காணப்படுவதற்குரிய காரணம், இத்தீவின் ஒருபக்கப் பண்பாட்டுப் பகைப்புலத்தினையே பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்கள் வெளிக்கொணர்வதற்கு பெருமளவு ஆர்வம் காட்டியதனாலாகும். இதனால் இலங்கைத் தமிழரின் பண்பாட்டுப் பரப்பினையும், வரலாற்றினையும் இணைத்துச் சென்றிருக்கக் கூடிய வரலாற்று மூலகங்களை அலட்சியம் செய்துவிட்டிருந்தனர் என்றோ அல்லது அவற்றின் முக்கியத்துவத்தினை உணராமல் கைவிட்டிருந்தனர் என்றோ குறிப்பிடலாம். இதுவே இன்று "யாழ்ப்பாண அரசின்" தொடர்ச்சியற்ற வரலாற்றுத் தன்மை, அதன் வரலாற்றெழுத்தியல் போக்குத் தொடர்பாக நாம் எதிர் நோக்குகின்ற பிரச்சினையுமாகும். இப்பிரச்சினையானது அவ்வரலாறு பற்றிய பொதுவான நிலைப்பாடொன்று காணப்படாததிலிருந்தே உருவானது. இதற்குக் காரணம் எம்மவர் மத்தியில் வரலாறு பற்றிய பொதுமையான உணர்வோ, அல்லது வரலாறு தொடர்பான விமர்சன மரபொன்று உருவாகாது இருந்தமையே காரணமாகக் குறிப்பிடலாம்.

இச்சந்தப்பத்தில் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புராதன நகரங்களைப் பற்றியதும் மையங்களைப் பற்றியதுமான முதலாய்வுகளும், அகழ்வாய்வுகளும் பல புதிய கருத்துக்களையும், அடிப்படைத் தகவல்களையும் யாழ்ப்பாண வரலாறு தொடர்ச்சியான முறையில் அமையக்கூடியவாறு தருகின்ற தன்மையைக் காணலாம். இவ்வழியே இலங்கைத் தமிழ் மக்களது தொடர்ச்சியான பூர்வீக வரலாற்றினை இனங்கண்டு கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டுக் கொள்ளும் எனவும் எதிர்பாக்கலாம்.


1. Smith, A.D., An Introduction :- The Formatino of Nationalist Movements. London, 1968.
2. Kanzo Saito, 'A Political Dig' Asahi Shimbur News Service, Colombo.
3. See An, Article Entitled 'Terrorists are not Fighting for Language and Culture,, The Island. 24th Jan.1986.

See an Article entitled 'Lalith on a Kingdom of Jaffna, The Island. 23rd July, 1983


(பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா "தேசியவாதமும் தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகளும்" என்னும் கட்டுரையை சமகாலப் பொருத்தப்பாடுடன் எழுதியுள்ளார். தேசம், தேசியம், தேசியவாதம் முதலான கட்டுமானங்களை தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகள் வகிக்கும் முக்கியத்துவம் என்ன? அடையாள அரசியல் எழுச்சியில் இவற்றின் முக்கியத்துவம் என்ன? ஆசியாவில் தேசியவாத முகிழ்ப்பில் எதிர்மறை அரசியல் கண்ணோட்டத்தில் தொல்லியல் பண்பாட்டு ஆய்வுகள் வகிக்கும் இடம் என்ன? போன்ற பல்வேறு வினாக்களை எழுப்பி சிந்திக்க தூண்டும் கட்டுரை இது. இக்கட்டுரை "நெல்லிக்கனி" - 2008 (கரவட்டி) மலரில் வெளியானது.)

*தமிழ் மக்களின் வரலாறானது அதே பிராந்தியத்தில் தொடர்ச்சியற்ற முறையில் காணப்படுவதற்குரிய காரணம், இத்தீவின் ஒருபக்கப் பண்பாட்டுப் பகைப்புலத்தினையே பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்கள் வெளிக்கொணர்வதற்கு பெருமளவு ஆர்வம் காட்டியதனாலாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லனின் உலைக்களம்:

## இலங்கையின் கிழக்குக் கரையோரத்தின் தமிழர்களும், முஸ்லிம்களும்: மக்ஜில்வ்ரேயின் புதிய நூல் - ஓர் அறிமுகம்

கந்தையா.சண்முகலிங்கம்

'குரூசிபிள் ஒவ் கொன்விலிக்ட்' (Crucible of Conflict) என்னும் தலைப்பில் மக்ஜில்வ்ரே எழுதியிருக்கும் புதிய நூல் 2008ம் ஆண்டில் பிரசுரமாகியுள்ளது. 'குரூசிபிள்' என்ற ஆங்கிலச் சொல் 'உலோகங்களை உள்ளே போட்டு கொதிக்க வைக்கும் பானை' என்ற அர்த்தம் உடையது. கடந்த 25 வருடங்களாக வன்முறைகளால் கொதிநிலையில் இருந்து வந்த ஒரு பிராந்தியம் பற்றிய மானிடவியல் ஆய்வாக அமையும் இந்நூலின் தலைப்பை தமிழில் 'கொல்லனின் உலைக்களம்' என்று மொழிபெயர்த்துக் கொள்ளலாம்.

1970களில் அக்கரைப்பற்றுப் பகுதியில் கள ஆய்வு மேற்கொண்ட மக்ஜில்வ்ரே மட்டக்களப்பின சாதியமைப்பு, தாய்வழிக் குடிமுறை, முக்குவ வன்னிமையும் கருத்தியலும் ஆகிய விடயங்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். மக்ஜில்வ்ரே 1993ம் ஆண்டில் கள ஆய்வுக்காக மட்டக்களப்பிற்கு மீண்டும் வந்தார். இதன்பின் இவரது ஆய்வுகளின் விடயப்பரப்பு விரிவு பெற்றது. கிழக்கிலங்கையின் சமகால அரசியல் வரலாற்றையும், இனக்குழும மோதல்களையும் பற்றி மானிடவியல் நோக்கில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். டியுக் பல்கலைக்கழ வெளியீடாக வந்திருக்கும் 'குரூசிபிள் ஒவ் கொன்விலிக்ட்' நூல் சுமார் 575 பக்கங்களைக் கொண்டது. முன்னுரையுடன், பத்து அத்தியாயங்களையும் கொண்ட நூலின் பிரதான பகுதி 426 பக்கங்களைக் கொண்டுள்ளது. பின்னிணைப்புக்கள், நூலடைவு, நூற்பட்டியல் என்பன 150 பக்கங்கள் வரை உள்ளன. இலங்கையின் மானிடவியல், அரசறிவியல், சமூகவியல், வரலாறு ஆகிய கற்கைத்துறைகளைச் சேர்ந்த புலமையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பெருவிருந்தாக அமையும் சிறப்பு மிக்க இந்நூல் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைகிறது.

**மக்ஜில்வ்ரே 1993ம் ஆண்டில் கள ஆய்வுக்காக மட்டக்களப்பிற்கு மீண்டும் வந்தார். இதன்பின் இவரது ஆய்வுகளின் விடயப்பரப்பு விரிவு பெற்றது.**

மக்ஜில்வ்ரேயின் நூலின் பொருளடக்கம் பற்றி முதலில் பார்ப்போம். இந்நூல் நான்கு பகுதிகளைக் கொண்டது.

**பகுதி-1 :** அறிமுகக் கட்டுரையும், ஆய்வுக் களத்தின் பின்னணியை விளக்கும் முதலாவது அத்தியாயமும் இப்பகுதியில் உள்ளன.

**பகுதி-2 :** 'வரலாறும் மானிடவியலும் சார்ந்த ஆய்வுப் பிரச்சினைகள்' என்பது இப்பகுதியின் தலைப்பு. 'கடந்த காலமும் நிகழ்காலமும்' 'ஒப்பீட்டு இனவரைவியல் சார் பிரச்சினைகள்' என்னும் இரு கட்டுரைகள் முறையே 2ம் 3ம் அத்தியாயங்களாக உள்ளன.

**பகுதி-3 :** தமிழர்களதும் முஸ்லிம்களதும் சமூகமும் பண்பாடும் என்னும் விடயம் பற்றிய ஆறு அத்தியாயங்கள் இப்பகுதியில் உள்ளன. தமிழர்களின் சாதியமைப்பு, தாய்வழிக் குடிமுறை, இந்துக் கோவில்களின் நிர்வாகம், சமூகம், பண்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு ஆகியன 4, 5, 6, 7 என்ற நான்கு அத்தியாயங்களில் ஆராயப்பட்டுள்ளன. 8ம், 9ம் அத்தியாங்கள் முஸ்லிம் சமூகம் பற்றிய ஆய்வாக உள்ளன. நூலின் மையமான விடயப் பொருள் பகுதி - 3 இல் விளக்கப்படுகிறது.

**பகுதி-4 :** இனக்குழும முரண்பாடும் யுத்தமும் என்னும் விடயம் பற்றிய நான்காம் பகுதியில் 10 வது அத்தியாயமும் பின்னுரையும் என்னும் தலைப்பிலான கட்டுரையும் உள்ளன.

## தமிழர்களின் சமூக அமைப்பும் சாதிமுறையும்

மட்டக்களப்பின் சாதிமுறை பற்றிய முழுமையான ஒரு தோற்றத்தைத் தரக் கூடிய புலமைத்துறைசார் ஆய்வு நூல் மக்ஜில்வ்ரேயின் இந்த 2008ம் ஆண்டு வெளியீடுதான் என்று சொன்னால் அது மிகைக்கூற்றன்று. இதற்கான மறுப்புரையை மக்ஜில்வ்ரே பின்வருமாறு கூறக்கூடும். "என்னுடைய நூலோடு மண்டூரில் களஆய்வு நிகழ்த்-தியவரான மானிடவியலாளர் விக்ரேக்கர் கட்டுரைகளையும் நூல்களையும் படியுங்கள். ஏனெனில் சீர்பாதர், கரையார், கோவிலார் ஆகிய மூன்று சாதிகள் நான் கள ஆய்வு செய்த அக்கரைப்பற்றில் முக்கியம் பெறவில்லை; கணிசமான தொகையினராக இச்சாதியினர் அங்கு இல்லை" என்று அவர் கருத்-துரைத்தல் கூடும்.

மட்டக்களப்புத் தமிழர்களிடையே 12 பிரதான சாதிகள் உள்ளன. இவற்றைவிட மேலும் 11 சிறு சிறு சாதிகள் உள்ளன. உத்தியோக ரீதியான சனத்தொகைக் கணக்கெடுப்புகள் இந்தியாவில் சாதியடிப்படையில் செய்யப்படும். இலங்கையில் அப்படிச் செய்யப்படுவதில்லை. பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையின் காலனித்துவ சமூகத்தின் பிரதான இயல்பு-களை இனம் (Race) என்ற வகைமையைக் கொண்டே கணக்கிடவும் மதிப்பிடவும் விரும்பினார்கள். அதனால் சாதிகள் பற்றிய துல்லியமான சனத்தொகை கணக்கெடுப்புகள்கிடையா. மட்டக்களப்புப் பிராந்தியத்தில் கடந்த காலத்தில் வெவ்வேறு சாதிகளின் சனத்தொகையும் பரம்பலும் எப்படி இருந்தது? இப்பொழுது எவ்விதமாக உள்ளது? என்ற கேள்விகளுக்கு ஆய்வாளர்கள் புள்ளிவிபரச்சான்றுகளைக் காட்டி பதில் தருதல் முடியாது. ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். முக்குவர், வேளாளர் என்ற இருபெரும் சாதிகள் மட்டக்களப்பில் உள்ளன. இச்சாதிகளோடு வீரசைவக்குருக்கள் என்ற சிறிய சாதிக்குழுவையும் சேர்த்தால் அக்கரைப்பற்றில் உயர்சாதிகள் மூன்று உள்ளன.

மட்டக்களப்பின் எல்லாச் சாதிகளிடையும் தாய் வழிக்குடிமுறை உள்ளது. ஒவ்வொரு குடியும் ஒரு குடிப்பெயரால் அழைக்கப்படும். தாய்வழிக் குடிமுறையோடு மூன்று விடயங்கள் தொடர்புபட்டு உள்ளன.

i) சமய நிறுவனங்களான கோவில்களின் பதவிகள்

ii) சமூக அந்தஸ்தும், சலுகைகளும்

iii) மதிப்பும், கௌரவமும் உடைய பட்டங்கள்

உ+ம 'ஊர்ப்போடியார்'

ஒவ்வொரு சாதியினதும் தலைமைக்காரன் அந்தஸ்து அந்தந்தச் சாதியின் முன்னணித் தாய்வழிக்குடிகளிற்குச் சேரும். ஒவ்வொரு சாதியிலும் செல்வாக்குடைய குடிகள் இருக்கும். அக்குடிகளின் பிரதிநிதிகள் கோவில் நிர்வாகக் குழுவில் வண்ணக்கர்களாக இருப்பர். சில கோவில்களில் ஒரு சாதியின் பிரதிநிதிகளே வண்ணக்கர்களாக இருப்பர். வேறு சிலவற்றில் பலசாதிகளிற்கும் 'பங்கு' எனப்படும் பிரதிநிதித்துவ உரிமை இருக்கும்; பலசாதிகளின் வண்ணக்கர்களின் கூட்டு நிர்வாகத்தில் கோவில்களின் ஆண்டுத் திருவிழா நடைபெறும். அக்கரைப்பற்றில் எட்டுச் சாதிகளுக்கு கோவில் பங்கு உள்ளது. அச்சாதிகளாவன.

*முக்குவர்*
*வேளாளர்*
*வீரசைவக்குருக்கள்*
*தட்டார்*
*சாணடார்*
*வண்ணார்*
*நாவிதர்*
*வள்ளுவர்.*

('பறை' என்னும் தோல்வாத்தியத்தை இசைப்பவர்களை இன்று 'வள்ளுவர்' என்றும் அழைப்பர்)

அக்கரைப்பற்றின் சாதிகளின் குடியிருப்புக்கள் புவியியல்

**மட்டக்களப்பின் எல்லாச் சாதிகளிடையும் தாய் வழிக்குடிமுறை உள்ளது. ஒவ்வொரு குடியும் ஒரு குடிப்பெயரால் அழைக்கப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக அடையாளம் காணக்கூடிய எல்லைகளை உடையவை. சனத்தொகைப் பெருக்கம் காரணமாக இன்று இக் குடியிருப்புக்கள் அருகருகே நெருங்கி அமைந்துள்ளன. எண்ணிக்கையில் குறைந்த அளவான குடும்பங்களைக் கொண்ட மூன்று சாதிகள் அக்கரைப்பற்றில் உள்ளன. சீர்பாதர் (விவசாயிகள்) கரையார் (மீன்பிடிப்போர்) கோவிலார் (கோவில்பணியுடன் தொடர்புடையவர்கள்) என்பனவே அச்சாதிகள். இவை பிராந்திய ரீதியில் முக்கியத்துவம் உடையவை. ஆனால் அக்கரைப்பற்றில் முக்கியத்துவம் பெற-வில்லை.

அக்கரைப்பற்றின் ஏனைய சாதிகள் கைவினைகளுடனும், சேவைகளுடனும் தொடர்புடையவை. தட்டார் பொற்கொல்லர் தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்கள். சாண்டார் மரமேறுதல் தொழில் செய்வோர். ஏனைய மூன்று சாதிகள் குடிமைச் சேவைகளுடன் தொடர்புடையவை. பிள்ளையார் ஆலயத்தின் திருவிழாவில் இச்சாதிகள் யாவற்றுக்கும் பங்கு உள்ளது. வருடாந்தம் நடைபெறும் திருவிழாவில் 'பங்கு' உரிமை பெறுதல் ஒரு சடங்கியல் நிலைப்பட்ட அந்தஸ்து ஆகும். கோவில்களின் உண்மையான நிர்வாக அதிகாரம் முக்குவர், வேளாளர், வீரசைவர் என்ற மூன்று சாதிகளிடமே இருக்கிறது. ஊர்ப் போடியார் என்னும் தலைவர் முக்குவர் சாதி ஆளாக இருப்பார். இன்று 'ஊர்போடியார்' பட்டம் செல்வாக்கிழந்து மறைந்து வருகின்றது.

அக்கரைப்பற்றின் தமிழ்ச் சமூகத்தின் 'வெளி ஆட்கள்'



என்று கருதக் கூடிய நான்கு பிரிவினர் உள்ளனர். ஒருங்கிணைவுள்ள சாதிக் கட்டமைவுக்கு வெளியே உள்ளவர்கள் என்ற கருத்திலேயே 'வெளி ஆட்கள்' என்ற தொடரைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**சிங்களவர்** - கத்தோலிக்கர், பௌத்தர்கள் என்ற இரு சமயப் பிரிவினர் இவர்களிடை உள்ளனர்.

**கடையர்** - சுண்ணாம்பு சுடும் தொழிலைச் செய்யும் கடையர் மெதடிஸ்த சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாய் உள்ளனர்.

**குறவர்** - தெலுங்கு தேசத்தில் இருந்து வந்தவர்கள்.

**சக்கிலியர்** - சுத்திகரிப்பு தொழில் செய்யும் இவர்கள் இந்திய வம்சாவழியினர்.

பேசும் மொழி, சமயம், வாழ்வாதாரம் என்ற மூன்று விடயங்கள் மேற்குறிப்பிட்டவர்களை அக்கரைப் பற்றின் 'வெளி ஆட்கள்' ஆக கருத வைத்துள்ளன.

மட்டக்களப்பின் சாதி ஒழுங்கமைப்பில் கோவில் முக்கியமான வகிபாகத்தைப் பெறுகிறது. கோவிலை மையமாகக் கொண்ட கூட்டுச் சமூகமாகவும், சடங்கியல் கடமைகளைச் செய்யும் சாதிகளையும், மேல்நிலை உயர்சாதிகளையும் உள்ளடக்கிய கூட்டு அமைப்பாகவும் தமிழர் சமூகம் இயங்குகிறது.

அ) உயர் அந்தஸ்துடையனவும் விவசாயத்தோடு தொடர்புடையனவுமான சாதிகள்

ஆ) உயர்சாதிகளுக்கு கீழ்ப்பட்ட சேவைச் சாதிகள், விசேட தொழில்சார் சாதிகள்

என்ற கட்டமைப்பு அக்கரைப்பற்றுப் பகுதியில் செயற்படு-கிறது. சிங்கள சமூகத்தின் சாதியமைப்பு இவ்வாறான ஒரு கட்டமைப்பை உடையதே. சைவ சமயம் = இந்து சமயம் என்ற நிலையே அக்கரைப்பற்றில் உள்ளது. தென்னிந்தியாவில் உள்ளது போல் சைவர் - வைணவர் என்ற பேதம் மக்களின் உணர்வு நிலையில் வெளிப்படுவதில்லை.

'வெளி ஆட்கள்' என்று குறிப்பிட்டவர்களில் கடையர் யாவரும் மெதடிஸ்ற் சபையைச் சார்ந்த

***மட்டக்களப்பின் சாதி ஒழுங்கமைப்பில் கோவில் முக்கியமான வகிபாகத்தைப் பெறுகிறது. கோவிலை மையமாகக் கொண்ட கூட்டுச் சமூகமாகவும், சடங்கியல் கடமைகளைச் செய்யும் சாதிகளையும், மேல்நிலை உயர்சாதிகளையும் உள்ளடக்கிய கூட்டு அமைப்பாகவும் தமிழர் சமூகம் இயங்குகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களாய் உள்ளனர். ஏனைய தமிழர் அனைவரும் கத்தோலிக்கர்கள். இவர்கள் சிங்களவர், பறங்கியர் ஆகிய இனங்களைச் சேர்ந்த கத்தோலிக்கர்களுடன் ஒரு பொதுக் கோவிலில் வழிபடுகிறார்கள்.

மட்டக்களப்பில் திருமணம் பொதுவாக ஒரே சாதியைச் சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் உறவுப் பந்தமாகும். அதுவும் குறித்த சாதிக்குள் சமதையான அந்தஸ்துடைய தாய்வழிக் குடிகளிடையேதான் திருமண உறவு நிகழும். சமதையான அந்தஸ்துடையவர்கள் என்பதை ஆங்கிலத்தில் 'Isogamous Ranks' என்ற தொடரால் குறிப்பிடலாம். தந்தையின் சகோதரியின் மகள் அல்லது தாயின் சகோதரனின் மகளைத் திருமணம் செய்தல் கிட்டிய உறவுக்குள் நடைபெறும் திருமணம் ஆகும். தூர உறவுக்குள் நடைபெறும் திருமணம் கொள்ளல் - கொடுத்தல் உறவுடைய குடிகளுக்கு இடையிலான உறவாகும்.

### சமூக மாற்றங்களும் சாதிகளிடையான உறவுகளும்

அக்கரைப் பற்றில் உள்ள எட்டுப் பிரதான சாதிகளுள் முக்குவர், வேளாளர், வீரசைவக்குருக்கள் என்ற மூன்றும் உயர்சாதிகள் என்பதைக் கண்டோம். சமூக அடுக்கமைவின் கீழ்மட்டத்தில் உள்ள மூன்று சாதிகளான வண்ணார், நாவிதர், வள்ளுவர் சடங்கியல்சார் குடிமைச் சேவைகளைச செய்து வருவோராக இருந்தனர். இவர்கள் பொருளாதார நிலையிலும் சமூக அந்தஸ்திலும் கீழ்ப்பட்டோராக இருந்து வந்தனர். சமூக மாற்றங்களின் பயனாக உயர்சாதிகளுக்கும் குடிமைச் சாதிகளுக்கும் இடையிலான உறவுகளில மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. இம்மாற்றங்கள் பற்றி மக்ஜில்வ்ரேயின் அவதானிப்புக்களை அடுத்துப் பார்ப்போம்.

### சலவைத் - தொழில் தொடர்ளச்சியும் மாற்றமும்

வண்ணார், நாவிதர் என்ற இரு சாதியினரும் அந்தஸ்து நிலையில் சமதை உடையவர்கள். சடங்கு முறைக் கடமைகளிலும் இவர்களிடம் ஒற்றுமை உள்ளது. ஆதலால் சாதிக் கட்டமைப்பில் 'குறொஸ் கசின்ஸ்' (Cross Cousins) என்ற ஒன்று விட்ட 'அண்ணன் - தம்பி - மச்சான்' உறவினர் என்றால் மிகையில்லை. ஆனால் இந்த உறவை இருசாதிகளுக்கிடையே திருமணம் செய்து கொள்ளக் கூடிய அளவு நெருக்கமானதாகச் சொல்ல முடியாது. அந்தஸ்துச் சமத்துவம், கூட்டாகச் சடங்குகளில் ஈடுபடுதல் என்ற இரு ஒற்றுமைகள் சடங்கியல் தன்மையினவே. இவ்விருசாதியினரும் தமக்கிடையே தோழமை உணர்வு பற்றிய பெருமை கொண்டு பேசியதை தான் கேட்டதில்லை என்கிறார் மக்ஜில்வ்ரே. இருசாராரிடையும் போட்டி உள்ளது. சில சமயங்களில் யாருக்கு முன்னீடு உள்ளது என்பதில் போட்டியும் உள்ளது. அபிப்பிராய மதிப்பீடு ஒன்றை நடத்தினால் வண்ணார் அந்தஸ்தில் சிறிது உயர்ந்தவர்கள் என்ற முடிவு கிடைக்கும். வண்ணார் சாதியின் தலைமைப் பதவியை வகிப்பவர் தண்டக்காரன் என்று அழைக்கப்படுவார். தண்டக்காரன் வண்ணார் சாதி முழுமைக்கும் பிரதிநிதியாகக் கருதப்படுவார். அத்தோடு தெய்வத்திற்குச் செய்யும் சடங்குகளிற்கும் அவரே பிரதிநிதியாகவும் இருப்பார். வண்ணார்களின் குலதெய்வம் பெரிய தம்பிரான். அக்கரைப்பற்றுப் பிள்ளையார் கோவில் வாசலில் நின்று பார்த்தால் அருகே பெரிய தம்பிரான் கோவில் இருப்பதைக் காணலாம். 1970க்களில் தான் களவேலை செய்த காலத்தில் இந்தக் கோவிலில் கட்டடவேலை தொடக்கப்பட்டதாக மக்ஜில்வ்ரே கூறுகிறார். வண்ணார் சாதியின் சுதந்திர உணர்வையும் தனித்துத் தாம் இயங்க வேண்டும், சுய காலில நிற்க வேண்டும் என்ற அவாவையும் இக்கோவில் வெளிப்படுத்தி நிற்கிறது. இக்கோவில் அவர்களுக்கு ஒரு ஆத்மீக பலத்தை வழங்கியிருக்கலாம். இதற்கு மேலாக இந்தக் கோவிலை அமைத்ததால் வாழ்நிலையில் அவர்கள் உயர்ச்சி பெற்றுவிட்டார்கள் என்று கூற முடியாது. கோவில் இப்போது சிறிது பெருப்பிக்கப்பட்டுள்ளது. வருடாந்த திருவிழா விமரிசையாகச் சடங்கு ஆசாரங்களோடு கொண்டாடப்படுகிறது.

1970க்களில் வண்ணார் சாதிக் குடும்பங்களில் 85% தம்சாதியின் மரபுத் தொழி-

**மக்ஜில்வ்ரேயின் புதிய நூல்**

***சமூக அடுக்கமைவின் கீழ்மட்டத்தில் உள்ள மூன்று சாதிகளான வண்ணார், நாவிதர், வள்ளுவர் சடங்கியல்சார் குடிமைச் சேவைகளைச செய்து வருவோராக இருந்தனர். இவர்கள் பொருளாதார நிலையிலும் சமூக அந்தஸ்திலும் கீழ்ப்பட்டோராக இருந்து வந்தனர்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான சலவைத் தொழிலை செய்தன. இன்றும் ஏறக்குறைய இதே நிலைதான். அக்கரைப்பற்றின் சனத்தொகையில் மூன்றின் இரண்டு பங்கு முஸ்லிம்கள், மூன்றில் ஒரு பங்கு தமிழர்கள். முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் சலவைத் தொழில் சேவையை வண்ணார் சாதியினர் வழங்குகின்றனர். இன்று சலவைத் தொழிலுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. யுத்தம் ஆரம்பித்த பின்னர் தமிழர்கள் பொருளாதார ரீதியில் நொடித்துப் போனார்கள். முஸ்லிம்கள் ஒப்பீட்டளவில் காசுக்காரர்களாகவும் வருமான நிலையில் உயர்ந்தவர்களாகவும் உள்ளார்கள். முஸ்லிம் பகுதியின் சலவை வேலையால் வண்ணார் சாதியினரின் வருமானம் அதிகரித்துள்ளது. சலவைத் துணிப்பொதிகளைச் சைக்கிளில் கட்டிக்கொண்டு தமிழ்ப் பகுதிக்குத் திரும்பும் தொழிலாளர்களை வீதிகளில் ஒவ்வொரு நாளும் காண முடியும். தமிழர்களான வண்ணார் சாதியினர் வர்த்தக முறையில் நடத்தும் லோண்ட்றிகளையும் வைத்திருக்கிறார்கள். ஒழுங்கான வருமானம், நிலையான வாழ்வாதாரம் என்பன அவர்களுக்கு பொருளாதார பலத்தை வழங்குகிறது. பிறகுடிமைச் சாதிகளை விட இவர்களின் வாழ்க்கை நிலை உயர்வானது. பிறர் எவரும் வழங்க முன்வராத சேவை ஒன்றை இவர்கள் வழங்குகிறார்கள். முன்பு இந்துக்களின் பிடியில் இருந்து நசிபட்டவர்களுக்கு முஸ்லிம்களிடமிருந்து கிடைக்கும் தொழில் வாய்ப்பு பொருளாதார சுதந்திரத்தை வழங்கியுள்ளது. வண்ணார் சாதியினரிடையே இடப்பெயர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். வேலை வாய்ப்புக்களைத் தேடி அவர்களில் பலர் வேறு இடங்களிற்குப் போயிருக்கலாம். சமூக அசைவியக்கம் காரணமாக மேல்நோக்கிய உயர்ச்சியும் இருக்கக்கூடும். இவை பற்றி உறுதியாகக் கூறுவதற்கு போதிய தரவுகள் இல்லை என மக்ஜில்வ்ரே கூறுகிறார்.

உயர் சாதியினரின் கோவிலான பிள்ளையார் கோவில் புனருத்தாபனம் செய்யப்பட்டது. வண்ணார் சாதிக்கு இக்கோவிலில் திருவிழாப்பங்கு உள்ளது. கோவில் பங்கு இருப்பதும், அது ஏற்கப்படுவதும் அக்கரைப் பற்றின் சமூக வாழ்வில் இச்சாதியின் சடங்கு நிலை வகிபாகத்தை எடுத்துக் காட்டுகிறது. வண்ணார் சாதியின் முக்கிய குடும்பங்கள் அக்கரைப் பற்றில் இருக்கின்றன, தனது வகிபாகத்தை இச்சாதி அழுத்தம் திருத்தமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

### சிகை அலங்கரிப்பு நிலையங்கள்: சேவைத் தொழில் ஒன்று வர்த்தக மாதிரியைத் தழுவுகிறது.

மேற்கு நாட்டு மாதிரியிலான 'சலூன்கள்' அல்லது சிகை அலங்கரிப்பு நிலையங்கள் 1970 காலத்திலேயே ஏற்பட்டுவிட்டன. முந்திய காலத்தில் நாவிதர் சாதியினர் வீடுகளுக்குச் சென்று முடிதிருத்தும் வேலையைச் செய்தார்கள். 'சலூன்கள்' அமைக்கப்பட்டமை ஒரு முக்கிய மாற்றம். வீடு வீடாகச் சென்று சேவை செய்யத் தயாரில்லை என்ற அறிவிப்பாக இதனைக் கருதலாம். சலூனின் முதலாளி - அங்கு வேலை செய்யும் தொழிலாளிகள் என்ற உறவு முறை உருவாகி வருகிறது. இதனால் நிலமானிய முறைச் சேவைத் தொழில் ஒன்று அழிந்து கொண்டு போகிறது. 'குடிமக்கள்' என்றால் 'வீட்டுப் பிள்ளைகள்' என்பது பொருள். இது ஒரு தாழ்வான நிலை. இது மறைந்தாலும் இத்தொழிலினால் ஏற்படும் கறை ஒட்டிக் கொண்டுள்ளது. சலூ-னில் இருந்து திரும்பியவுடன் தலைமுழுகி நீராடி துடக்கைப் போக்கித் தம்மை தூய்மையாக்கிக் கொள்ளும் வழக்-கம் அக்கரைப்பற்றில் இன்றும் உள்ளது. 1970க்களில் நாவிதர்களில் 76% தம் சாதித் தொழிலைச் செய்தனர். இன்றுள்ள நிலை என்ன என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. நாவிதர் சாதியின் வாழ்வியலில் இரு அம்சங்கள் முக்கியமானவை.

1. பிறசாதிகளிடம் உள்ளது போன்ற தாய்வழிக் குடிமுறை நாவிதர்களிடம் இல்லை. இரண்டு குடிகள் இச்சாதியில் உள்ளன. அவற்றுள் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதும் தெளிவற்றதாக உள்ளது.

2. இச்சாதிக்கென்று நிறுவன மயப்பட்ட சடங்-கியல் சேவை வழக்கங்கள் இல்லை. நாவிதர் சாதிக்குத்


மேற்கு நாட்டு மாதிரியிலான 'சலூன்கள்' அல்லது சிகை அலங்கரிப்பு நிலையங்கள் 1970 காலத்திலேயே ஏற்பட்டுவிட்டன. முந்திய காலத்தில் நாவிதர் சாதியினர் வீடுகளுக்குச் சென்று முடிதிருத்தும் வேலையைச் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியான கோவில்களும் இல்லை. உயர்சாதிக் கோவில்களில் சடங்கியல் ரீதியான 'பங்கு' இல்லை.

இவ்விரு இயல்புகளும் இச்சாதியை கோவிலோடு சடங்கியல் முறையில் இணைவதைத் தடுத்துள்ளன. இச்சாதியைச் சேர்ந்த தனிநபர்களுக்குத் தாம் எந்தக் குடியைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு கிடையாது. நாவிதர் குடியிருப்புக்களும் இரண்டு வெவ்வேறு பட்ட பகுதிகளில் பிளவு பட்டு உள்ளன. இது மற்றச் சாதிகளில் இருந்து வேறுபடுத்தும் சமூகப் புவியியல் அம்சமாகும்.



இந்துக்களது மரணச் சடங்குகளை நடத்துவதில் நாவிதருக்கு முக்கிய பங்கு உள்ளது. நாவிதர்களின் தலைவர் முல்லைக்காரன் என அழைக்கப்படுவார். 1970க்களில் மரணச் சடங்குகளில் முல்லைக்காரன் முக்கிய பங்கு பெற்றார். பாடை கட்டுதல், சவரம் செய்தல், பிணத்திற்கு உடை மாற்றுதல், சுடலை வரை மரண ஊர்வலத்தை நடத்திச் செல்லுதல் என்பன முல்லைக்காரன் செய்யும் பிரதான பணிகளாகும். இறந்தவரின் மூத்த மகன் இறுதிக் கிரிகைகளைச் செய்வார். அவர் அக்கிரிகைகளைச் செயயும் போது கிரிகைகளை வழிநடத்துபவர் முல்லைக்காரனாவர். இறப்பு என்பது மனித வாழ்வின் நெருக்கடிகளில் ஒன்று. இந்த நெருக்கடியை சார்ந்த சடங்குகளில் முல்லைக்காரன் பங்கு முக்கியமானது. 1980க் களில் அல்லது 1990களில் எப்போதோ ஒரு தடவை முல்லைக்காரனுக்கும் ஊர்ப்போடியாருக்கும் இடையில் ஒரு முரண்பாடு எழுந்தது. அந்தச் சர்ச்சைக்குப் பிறகு முல்லைக்காரன் மரணச் சடங்குகளில் கலந்து தன் கடமைகளை செய்வதை நிறுத்தி விட்டார். இவ்வாறு மறுத்ததன் மூலம் நாவிதர் சாதி மரணச் சடங்கால் எழும் கறையை அழித்துக் கொண்டது. காலப் போக்கில் அக்கரைப்பற்றுச் சமூகம் முல்லைக்காரன் என்ற நபரின் நினைவை முற்றாக மறந்து போகலாம். இப்போது அக்கரைப்பற்றில் உயர்சாதிகளின் மரணச் சடங்குகளை நடத்துவதற்கு பதுளையில் இருந்து நாவிதர் ஒருவரை கொண்டு வருகிறார்கள். அவர் மலையகத்தின் தோட்டப்பகுதியைச் சேர்ந்த இந்தியத் தமிழர். அக்கரைப் பற்று இந்து சமூகத்திற்கு அவர் வெளியாள். மரணச் சடங்கிற்கு வருவார்; வந்து தங்கித் தன் கடமை முடிந்ததும் திரும்பி விடுவார். இது ஒரு ஒப்பந்தத் கூலி வேலைக்கு சமமானது. முல்லைக் காரனின் உறவு நிலமானிய உறவுகளின் தன்மையை கொண்டது. மரணச் சடங்குகளின் போது மேளம் அடிப்பதை வள்ளுவர் சாதியும் நிறுத்திவிட்டது. இதனால் அக்கரைப் பற்றில் மரணச் சடங்குகளின் தன்மை இப்போது முற்றாக மாறிவிட்டது.

**மேளம் அடித்தலை நிறுத்துதல்**

வள்ளுவர் குடியிருப்புக்கள் அக்கரைப்பற்றுக்குத் தெற்கே கோளாவில் கிராமத்தில் உள்ளன. வள்ளுவர்கள் அக்கரைப்பற்றின் சாதி அடுக்கமைவின் கீழ் தட்டில் இருந்தனர். அவர்கள் குடிமைச் சேவகர்கள் என்ற முறையில் சில சடங்கியல் உரிமைகளையும் சலுகைகளையும் கொண்டிருந்தனர். அக்கரைப்பற்றில் தட்டார், சாண்டார் ஆகிய சாதிகள் சமூக ஏணிப்படியில் உயர்ந்து சென்ற போது மேளம் அடித்தல் சேவைக்கு கிராக்கி அதிகரித்தது. தங்கள் வீட்டு மரணச் சடங்குகளில் இச்சாதியினரும் வள்ளுவரைக் கொண்டு மேளம் அடிக்க வைப்பதில் மிகுந்த திருப்தி கொண்டனர். இதன் மூலம் முக்குவர், வேளாளர் போன்றோருக்குத் தகுதியில் தாம் எந்தளவும் குறைந்தவர்கள் அல்ல என்பதைக் காட்டிக் கொண்டனர்.

வள்ளுவர்களிடை குடிமுறைக் கட்டமைப்பு தெளிவானதாக உள்ளது. திருமணங்கள் 'சரியான' குடி-

***இந்துக்களது மரணச் சடங்குகளை நடத்துவதில் நாவிதருக்கு முக்கிய பங்கு உள்ளது. நாவிதர்களின் தலைவர் முல்லைக்காரன் என அழைக்கப்படுவார். 1970க்களில் மரணச் சடங்குகளில் முல்லைக்காரன் முக்கிய பங்கு பெற்றார்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்ஜில்வ்ரேயின் புதிய நூல்**

களிற்குள் செய்யப்படுகின்றனவா என்பதை நுணுக்கமாகப் பார்த்துக் கொள்வர். மாரியம்மன் இச்சாதியின் குலதெய்வம். பக்தர்கள் மாரியம்மன் கோவிலில் உருக்கொண்டு ஆடும்போது பறை அடிக்கப்படும். பறையின் இசை உருவாட்டத்திற்கு ஏற்றது. இந்த இசையின் நுட்பங்களில் வள்ளுவர்கள் தேர்ந்தவர்கள். கோவிலில் பறை அடிப்பதோடு அறிவித்தல்களை மக்களிற்கு பறையறைத்து சொல்லும் வேலையையும் வள்ளுவர்கள் செய்தனர். விஷக்கடி வைத்தியம், பில்லி சூனியம் ஆகியவற்றிலும் கைதேர்ந்தவர்கள் வள்ளுவர் சாதிக்குள் இருந்தனர்.

மங்கல நிகழ்ச்சிகளிலும் முன்னர் பறை வாத்தியம் இசைக்கப்பட்டது. திருமணம் போன்ற வைபவங்களிற்கு யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து மேளகாரரை அழைத்து வரத் தொடங்கியதும் பறை அமங்கல நிகழ்ச்சிகளுக்கு உரிய வாத்தியமாகத் தாழ்ந்து போனது - மரணவீடுகளில் பறை அடிக்கும் போது மூப்பன் தலைமை வகிப்பார். மூப்பனின் மரபு வழி வகிபாகம் இன்று முக்கியம் இழந்து போகிறது.

பறையர் குடியிருப்பில் புதிதாகப் பிள்ளையார் கோவில் ஒன்று தோன்றியுள்ளது. இக்கோவிலுக்கு மதிப்பும், கௌரவமும் கூடிவருகிறது. அம்மை நோயில் இருந்து மக்களைக் காப்பாற்றும் மாரியம்மனின் கோவில் திருவிழா ஆண்டு தோறும் குறைவின்றி நடத்தப்படுகின்றது. இருந்த போதும் ஆனைமுகக் கடவுளான பிள்ளையார் வள்ளுவர்களின் சமய வாழ்க்கை



யில் ஒரு இடத்தைப் பெற்றுவிட்டார். பிள்ளையார் கோவிலின் பூசை வழிபாடுகள் மத்தியதர வகுப்பின் சமய வழிபாட்டு முறைகளின் மாதிரியில் அமைந்துள்ளன. பிள்ளையார் கோவில் நிர்வாக சபையின் தலைவரும் பிற உறுப்பினர்களும் வள்ளுவர் சமூகத்தில் முக்கியவமானவர்களாக உள்ளனர். மூப்பனார் இளம் தலைமுறையினரால் புறக்கணிக்கப்படுகின்றார். மரண வீட்டில் மேளமடிப்பதால் ஏற்பட்ட கறையை நீக்குவதில் இளைய தலைமுறையினர் கூடியளவு அக்கறை காட்டினர்.

அக்கரைப் பற்றில் உள்ள வள்ளுவர் சாதியினரில் பறை வாத்தியம் இசைப்பதற்கு எவரும் இப்போது முன்வருவதில்லை. 'பறை' என்ற சொல்லையும் தம் சாதிப் பெயரில் சேர்த்துக் கொள்ள விரும்பாத இளம் தலைமுறை 'வள்ளுவர்' என்ற பெயரைத் தேர்ந்து கொண்டது. வள்ளுவர் (திருவள்ளுவர்) பழம் தமிழ்ப் புலவர்களில் ஒருவர்.

மாரியம்மன் கோவில் தற்போது திருத்திக் கட்டப்பட்டுள்ளது. இக்கோவிலுக்கு ஒரு கோபுரமும் கட்டப்பட்டுள்ளது. கோவிலில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக வள்ளுவர் சாதியல்லாத பிறரையும் வழிபாட்டிற்கு வரவழைக்கும் தகுதியை மாரியம்மன் கோவில் பெற்றுள்ளது.

வள்ளுவர் சாதியினர் பலர் வயலில் வேலை செய்வதற்குப் போகிறார்கள். சிலர் மரக்கறிப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபடுகிறார்கள். புதிய தலை முறையினருக்கு மேளம் அடிக்கும் கலையில் பரிச-

***வள்ளுவர் சாதியினர் பலர் வயலில் வேலை செய்வதற்குப் போகிறார்கள். சிலர் மரக்கறிப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபடுகிறார்கள். புதிய தலை முறையினருக்கு மேளம் அடிக்கும் கலையில் பரிச்சயம் இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயம் இல்லை. சமூக அசைவியக்கம் பலரை மேல்-நிலைக்கு உயர்த்தியுள்ளது.

அக்கரைப்பற்றில் மரண ஊர்வலங்கள் நடக்கும் பொழுது இப்போது ஒலிநாடாவில் இருந்து பண்ணிசைப் பாடல்கள் ஒலி பெருக்கியில் இசைக்கப்படும். மரண வீடுகளில் பறையடித்தல் குறியீட்டு வடிவிலான ஓர் அடையாளம். வள்ளுவர்களின் கீழ்ப்பட்ட நிலையை அது வெளிப்படுத்தியது. வள்ளுவர்கள் இந்தக் குறியீட்டு அடையாளத்தை இல்லாமல் செய்வதன் மூலம் தமது கீழ்ப்பட்ட நிலைக்கும் முடிவு கட்டியுள்ளனர்.

## இலங்கையின் கிழக்குக் கரையின் முஸ்லிம்கள்

தாய் வழி மூலம் தமது கால்வழியை அடையாளம் காணும முஸ்லிம் சமூகங்கள் உலகில் மிகச் சிலவே உள்ளன. முஸ்லிம்களிடை தந்தைவழி முறையே பரவலாக உள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் இதற்கு ஒரு விதிவிலக்கு. - வட கேரளத்தின் மாப்பிள்ளை முஸ்லிம்கள், மேற்கு சுமாத்திராவின் மினங்காபோ முஸ்லிம்கள் என்று தாய்வழி உரிமைச் சமூகங்கள் வேறு இரண்டையும் மக்ஜில்வ்ரே உதாரணங்களாகக் காட்டுகிறார். கிழக்கு மாகாணத்தின் பள்ளிவாசல்கள் தாய்வழிக் குடிகளின் பிரதிநிதிகளான மரைக்காயர்கள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. குடிகளின் பிரதிநிதிகள் கோவில்களை நிர்வகிக்கும் இந்துக்களின் முறைக்கு ஒப்பானதாக முஸ்லிம்களின் பள்ளிவாசல் நிர்வாக முறை உள்ளது. குடிக்கு வெளியே திருமணம் செய்தல் (Kudi Exogamy) என்னும் வழக்கம் முஸ்லிம்களிடம் உள்ளது. இவ்வாறான தாய்வழிக் குடிகளின் கிளைபரம்பல் இந்துக்களை விட முஸ்லிம்களிடம் ஆழமாக உள்ளது என்றும் மக்ஜில்வ்ரே கூறுகிறார்.

பெண்களுக்கு சீதனமாக வீட்டையும் நகைகளையும் கொடுக்கும் வழக்கம் முஸ்லிம்களிடம் உள்ளது. திருமணம் செய்யும் பெண்களுக்கு தாய் வீட்டு வளவுக்குள்ளேயே வீடு ஒன்றை அமைத்துக் கொடுக்கும் வழக்கம் உள்ளது. வீட்டுவளவுக்குள் இடம் இல்லாவிடில் அயலில் உள்ள காணியில் வீட்டைக் கட்டிக் கொடுப்பார்கள். இதனால் சகோதரிகள் அருகருகே ஒருங்கு வாழும் வழக்கம் நிலைத்துள்ளது. தமிழர்களது குடியிருப்புகளைவிட முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் மிக நெருக்கமாக அமைந்திருக்கும். திருமணமான ஆண்கள் பெண் வீட்டில் குடியிருக்கும் வழக்கத்தை தாய்வழி வாழிடம் (Matri-Local Residence) என்பர். இதுவும் தமிழர்களின் வழக்கத்தினை ஒத்ததே.

முஸ்லிம்கள் 'வியாபாரிகள் சமூகம்' என்பது பரவலாக நம்பப்படும் ஒரு கருத்து. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இது உண்மையல்ல. அக்கரைப்பற்றில் வாழும் 68% முஸ்லிம்கள் விவசாயிகளாவர். புள்ளி விபரங்களின் படி

விவசாயிகள் - 66%

விவசாயக் கூலிகள் - 2%

தமிழர்களிடை இந்த வீதாசாரம் பின்வருமாறு இருந்தது.

விவசாயிகள் - 54%

விவசாயக் கூலிகள் - 20%

தமிழர் சேவைச் சாதியினரை விவசாயக் கூலிகள் என்ற வகையில் சேர்ப்பதால் தமிழரிடை கூலிகளின் வீதாசாரம் ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்படுகிறது என்று கூறலாம். கள ஆய்வுத் தரவுகளின் படி காணியற்றோர் வீதாசாரம் முஸ்லிம்களிடையும் தமிழர்களிடையும் ஏறக்குறைய ஒரே அளவில் தான் உள்ளது என்று மக்ஜில்வ்ரே கூறுகிறார். கள ஆய்வுத் தரவுகளின் படி முஸ்லிம்களிடை வியாபாரிகள் 8%ஆகவும் தமிழர்களிடை 4% ஆகவும் உள்ளனர்.

## சமூக சமத்துவம்

இலங்கையின் சிங்களவர், தமிழர் முஸ்லிம்கள் ஆகிய எல்லோரிடமும் சமூக அந்தஸ்து, வருமானம் சொத்துடமை என்பவற்றின் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. பிற சமூகங்களுடன் ஒப்பிடுமிடத்து சாதியடிப்படையிலான பேதம் முஸ்லிம்களிடம் இல்லை என்றே கூறலாம். இதனால் ஒப்பீட்டளவில் 'சமத்துவ-சமூகம்' என்று அதனைக் கூறலாம். முஸ்லிம்களிடை மௌலானா, பாவா, ஒஸ்ரா என்ற மூன்று பிரிவுகளைக்

**மக்ஜில்வ்ரேயின் புதிய நூல்**

**பெண்களுக்கு சீதனமாக வீட்டையும் நகைகளையும் கொடுக்கும் வழக்கம் முஸ்லிம்களிடம் உள்ளது. திருமணம் செய்யும் பெண்களுக்கு தாய் வீட்டு வளவுக்குள்ளேயே வீடு ஒன்றை அமைத்துக் கொடுக்கும் வழக்கம் உள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்ஜில்வ்ரேயின் புதிய நூல்**

கொண்ட அடுக்கமைவு உள்ளது. இந்த அடுக்கமைவைச் "சாதி" என்று குறிப்பிட முடியாது என்றும் மக்ஜில்வ்ரே கூறுகிறார்.

**மௌலானா:** தந்தை வழியில் உயர்குல மரபைப் பேணிவரும் மௌலானா பிரிவினர் தம்மை இறைதூதரின் சந்ததியினர் எனக் கூறுவர். தமது இரத்தத்தின் தூய்மையை விவாக உறவுகள் மூலம் பாதுகாத்துக் கொள்ளும்தேவை இவர்களுக்கு உள்ளது.

**பாவாக்கள்:** சூபி வழிபாட்டிலும், பக்தி நெறியிலும் நம்பிக்கை உடையவர்கள்.

**ஒஸ்ரா:** சமயம் சார்ந்த சேவைக் கடமைகளைச் செய்வோர் ஒஸ்ரா எனப்படுவர்.

மக்ஜில்வ்ரேயின் நூலின் 9வது அத்தியாயம் முஸ்லிம் சமூகத்தின் மேலோர் பிரிவான மௌலானாக்கள் பற்றியும் சமயம்சார் சிறப்புக்கடமைகளை ஆற்றும் பிரிவினர் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறுகிறது.

## இனக்குழும முரண்பாடும் யுத்தமும்

இவ்விடயம் பற்றி விரிவாக ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்கமன்று. நூலின் நான்காம் பகுதியில் இருந்து இரண்டு மேற்கோள்களை மட்டும் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்யலாம். ஒரு மேற்கோள் தாய்வழி முறை மீது கிழக்குப் பிராந்திய மக்களுக்குள்ள பற்றுதல் பற்றியது.

"வாழ்க்கையில் எதிர் நோக்கும் (பொருண்மியம்சார்) ஒறுப்புக்களும், (உயிர்) ஆபத்துக்களும் மட்டக்களப்பு பிராந்தியத்தை முற்றாகத்துறந்து வெளியே செல்லவும், குடும்ப அமைப்பைத் துண்டாடிவிடக் கூடிய சந்தர்ப்ப நோக்கிலான திருமண பந்தங்களை செய்து கொள்ளவும் தூண்டுதல்களை வழங்குகின்றன. இருந்த போதும் இன்றும் கூட தமிழ்ப் பெற்றோர்களும், முஸ்லிம் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் திருமணம் முடித்து தாய்வீட்டில் குடியிருக்க வேண்டும் (Settle matrilocally) என்றே விரும்புகிறார்கள். தாய்வீட்டை வாழிடமாகக் கொள்ளும் திருமணமுறையும், கோவில்களையும், பள்ளிவாசல்களையும் தாய்வழி குடிகள் நிருவகித்து வரும் ஒழுங்கமைப்பும் 20 வருட யுத்தத்-தையும் தாண்டி நிலை பெற்றுள்ளன. கிழக்குக் கரையில் தமது மூதாதையர் வாழ்ந்து வந்த கிராமங்களிலும், நகரப்பகுதிகளிலும் தாமும் தொடர்ந்து வாழ வேண்டும் என்ற வேணாவாவும், தாய்வழி வாழ்முறை மீது அவர்களின் பற்றுதலும் நிலைத்து நிற்கின்றன."

(மேற் குறித்த நூல் பக் 342)

இக்கூற்றில் ஊரில் தங்கிவிட்ட 'பெற்றோர்' பற்றியே மக்ஜில்வ்ரே குறிப்பிடுகிறார் ஆயினும் புலம் பெயர்ந்த 'டயஸ்போறா' வின் உள்ளத்தை வாட்டும் சிந்தனைகளும் உணர்வுகளும் தாம் கைவிட்டு வந்த வீடு, தோப்பு, துரவு உறவுகள் பற்றியதாகவே இருக்கும் என நாம் விளக்குதல் முடியும்.

உளப்பாதிப்புக்களும் சமய வழிபாட்டு முறைகளும் பற்றிய மேற்கோள் ஒன்று வருமாறு

"யுத்தத்தின் காரணமாக தமிழர்களதும் முஸ்லிம்களினதும் கூட்டு மனத்தில் ஆழமான காயங்கள் ஏற்பட்டன. தன்னிப்பட்ட நிலையிலும் துன்பத்தையும், துயரத்தையும் இவர்கள் சுமந்தனர். இதனால் போலும் நாட்டார் சமய வழிபாடுகள் புத்துயிர் பெறுகின்றன. இவற்றில் மரபு வழிப்பட்ட தன்மை, தனிநபர் உளச்சாந்தியும் சிகிச்சையும் என்னும் அம்சங்கள் காணப்படுகின்றன." (பக் 346)

உருவந்து ஆடுதல், விரதம், நேர்த்திக் கடன் ஆகிய சமய வழிபாட்டு முறைகள் யுத்தம் காரணமாக தமிழர்களிடம் புத்துயிர் பெற்றுள்ளன. மக்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் நெருக்கடிகளின் சமய நிலைப்பட்ட வெளிப்பாடுகளே இவை எனலாம். முஸ்லிம்களிடமும் தனிநிலைப்பட்ட ஞான மார்க்க வழிபாடுகளில் நாட்டம் உள்ளது. இதனை உலகு தழுவிய இஸ்லாமிய இயக்கங்களின் பின்னணியோடு இணைத்துப் பார்க்க வேண்டும் என்றும் மக்ஜில்வரே கூறுகிறார்.

*மக்ஜில்வ்ரேயின் நூலின் 9வது அத்தியாயம் முஸ்லிம் சமூகத்தின் மேலோர் பிரிவான மௌலானாக்கள் பற்றியும் சமயம்சார் சிறப்புக்கடமைகளை ஆற்றும் பிரிவினர் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சேமமடு பதிப்பகத்தின்
## புதிய வெளியீடுகள்




### தமிழியல்சார் சிந்தனைத் துளிகள்

**பேரா.சு.சுசீந்திரராஜா** விலை: 500/-

மொழியியல்சார் சிந்தனைகள் மற்றும் ஆய்வுகள் குறிப்பிடத் தக்க நூல்கள் தமிழில் அதிகம் வெளிவர வேண்டும். ஆனால், எம்மத்தியில் இத்தகைய நூல்களை ஆக்கித்தரக் கூடிய புலமையாளர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இந்நிலையில் முதுநிலை பேராசிரியர் சுசீந்திரராஜா அவர்களின் இந்நூல் இக்காலத்திற்கு மிகவும் தேவையானதாகவும் பொருத்தப் பாடுடையதாகவும் அமைகிறது.




### தொன்மைச் செம்மொழி தமிழ்

**பி.இராமநாதன்** விலை: 240/-

எமது சமூகச் சூழலில் தமிழுணர்வை விரிவாக்கவும் வளர்க்கவும் இந்நூலை பதிப்புச் செய்கின்றோம். உலகளவில் தொன்மைச் செம்மொழிகளாகக் கருதும் வரிசையில் தமிழ்மொழியும் ஒன்று என்பதை சமூக வரலாற்று நோக்கிலும் மொழியியல் அடிப்படை நோக்கிலும் தெளிவாக இந்நூல் இனங்காட்டுகின்றது.




### தொன்மைச் செம்மொழி தமிழ்

**வி.அரியநாயகம்** விலை: 250/-


சமகாலத்தில் முன்னெப்போதும் விட குழந்தை இலக்கியம் மற்றும் சிறுவர் இலக்கியம் மீதான விழிப்புணர்வு அக்கறைகள் பன்மடங்காக அதிகரித்து வருகின்றது. கதை சொல்லல், கதை கேட்டல் பின்னர் கதை வாசித்தல், கதை எழுதுதல் என்னும் சுழல் கலாசார முனைப்புச் செயற்பாட்டுக்கான கருவியாக இந் நூலின் வரவு அமைந்துள்ளது.

சேமமடு

**சேமமடு பொத்தகசாலை**
**சேமமடு பதிப்பகம்**

UG.49,50, People's Park, Colombo -11, Sri Lanka
Tel : 011-247 2362, 232 1905 Fax : 011-244 8624
E-Mail : chemamadu@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISSN 1800-2102

9 771800 210005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org